www.tamilarangam.net


# களத்தில்

திருவள்ளுவர் ஆண்டு 2027 மேழம் 03 (17.04.1996) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வருஞ் செய்தித் தாள் அன்பளிப்பு: 60p


**கவிதை மூலை**

உடற்கலங்கள் முன்னே
கடற்கலங்கள் என்னே!
சடக் கலங்கள் முன்னே
சுடுகவிகள் என்னே!

- சுடு கவி

# கொழும்புத் துறைமுகத்துள் கடற்புலிகள் கரும்புலித் தாக்குதல்

## கடற்படைக் கலங்கள் உட்பட 6கப்பல்கள் தகர்க்கப்பட்டன

கொழும்புத் துறைமுகப் பாதுகாப்பு வலயத்தினுள் ஊடுருவி கடற்கரும்புலிகள் ...த்திய வெற்றிகரமான தாக்குதலில், சிறீலங்கா கடற்படையினருக்குச் ...ந்தமான 3 அதிவேக தாக்குதல் கலங்களும் (Fast Attack Crafts), 3 ...நியோகக் கப்பல்களும் தகர்க்கப்பட்டன. கடற்கரும்புலிகள் நீருக்கடியில் நீந்திச் ...ன்று வெடிகுண்டுகளைக் கப்பல்களில் பொருத்தி அவற்றைத் தாக்கி அழித்தனர்.

..04.96 வெள்ளிக்கிழமை அதி...லை 1.30 மணிக்கு கொழும்புத் துறைமுகப் பாதுகாப்பு வலய...த்தினுள் ஊடுருவி கடற்கரு...ம்புலிகள் மேற்படி கப்பல்களைத் ...க்கியழித்தனர்.

...தேவேளை துறைமுகத்தினுள் ...டுருவிய கடற்கரும்புலிகளின் ...திவேகப் படகு துறைமுகப் பகுதியில் மேற்கொண்ட ஆர்.பி.ஜி எறிகணைத் தாக்குதலில் துறைமுகக் கட்டடப் பகுதியும் சேதமாகி...ள்ளது. கேந்திர முக்கியத்துவம் ...ய்ந்ததும் சிறிலங்கா ஆயுதப் ...டையினரின் பலத்த பாதுகாப்பு ...ம், கண்காணிப்புக்கும் உட்பட்டுள்ளதுமான கொழும்பு துறைமுகக்துக்குள் ஊடுருவிய கடற்கரும்புலிகள் இத் துணிகரத் தாக்குதலை நடாத்தினர்.

கடற்கரும்புலிகளும், சுலோஜன் நீரடி நீச்சல் பிரிவு, அங்கயற்கண்ணி நீரடி நீச்சல் பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்த கடற்கரும்புலிகள் இணைந்து இத்தாக்குதலில் ஈடுபட்டனர். இக் கரும்புலிகள் நீருக்கு அடியிலும், நீருக்கு மேலுமாக துறைமுகப் பகுதியின் பாதுகாப்பு வலயத்தினை ஊடறுத்து இத்தாக்குதலை நடாத்தினர். முதலில் துறைமுகத்துள் புகுந்த நீரடி நீச்சல் பிரிவுக் கரும்புலிகள் கடற்படையினரின் 3 அதிவேக தாக்குதல் கலங்களையும் (Fast Attack Crafts) 3 விநியோகக் கப்பல்களையும் குண்டு வைத்து தகர்த்தனர். இச்சம்பவம் நேற்று அதிகாலை 1.30 மணிக்கு நடைபெற்றது. இதன் பின்னர் அதிகாலை வேளையில் அதிவேக ப்படகு ஒன்றில் துறைமுகத்தினுள் ஊடுருவிப் புகுந்த கடற்கரும் புலிகள் துறைமுகத்தினுள் கட்டிடப் பகுதிகளை நோக்கியும், கப்பல்களை நோக்கியும் தாக்குதலை நடத்தினர். இதேசமயம் சிறிலங்கா கடற்படைக்கும் கடற்புலிகளுக்கும் இடையே துறைமுகப் பகுதிக்குள் பலத்த மோதல்கள் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ் வெற்றிகரமான தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் 2 பெண் கடற்கரும்புலிகள் உட்பட 9 கடற்கரும்புலிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

லெப்.கேணல் ரதீஸ் (வல்வெட்டித்துறை) மேஜர் ரதன் (திரு கோணமலை) மேஜர் மொழி பொய்யா (திருகோணமலை) மேஜர் ஜனார்த்தனன் (காங்கேசன்துறை) மேஜர் ரவாஸ் (சக்கோட்டை) மேஜர் பரன் (பருத்தித்துறை) கப்டன் சுபாஸ் (திருகோணமலை) கப்டன் மதனி (வெற்றிலைக்கேணி) கப்டன் விக்கி (வெற்றிலைக்கேணி)

தாயக மண் மீட்புக்காய் தம் இனிய இளைய உயிர்களை அர்ப்பணித்த இவ் வீரவேங்கைகளுக்கு எமது வீரவணக்கம்.

"தமிழீழ விடுதலைப் போரானது, சிறிலங்காவின் தலைநகர் கொழும்பின், தரை, கடல், பகுதிகளுக்கு பரந்துவிட்டது என்பதை, கொழும்புத் துறைமுகத்தினுள் கடற்கரும்புலிகள் நடத்திய துணிகரத் தாக்குதல்கள் நிரூபித்துள்ளன." கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த, உயர் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கொண்ட பகுதிமீது நடத்தப்பட்ட துணிகரத் தாக்குதல் என, இதனை வர்ணிக்கப்படுகிறது. இந்தத் தாக்குதலானது, சிறிலங்காவின் தலைநகர் கொழும்பின் பாதுகாப்பு மீதும், அதன் பொருண்மியம் மீதும் பல கேள்விகளை எழுப்புவது தவிர்க்க முடியாததாகும். அத்துடன் இத்தாக்குதல் சிறிலங்காவின் பாதுகாப்புக்கு ஏற்பட்ட சவால் மட்டுமல்ல, சிறிலங்காவின் பொருண்மியத்தின் மீது போடப்பட்ட பலமான அடியாகும். கொழும்புத் துறைமுகத்தின் மீது நடத்தப்பட்ட இத் தாக்குதலை அரசு பகீரதப் பிரயத்தனம் செய்து மூடி மறைக்க முற்பட்டதுபோல், இதனால் படிப்படியாக பொருண்மியத்தின் மீது ஏற்படப் போகும்

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

## அம்பாறையில் 18 அதிரடிப் படை பலி

அம்பாறையில் 05-04-96 அன்று சிறிலங்கா விசேட அதிரடிப் படையினர் மீது விடுதலைப் புலிகள் அதிர்ச்சித் தாக்குதல் ஒன்றை தொடுத்தனர். சுமார் 20 நிமிடங்களே ...டித்த இத்தாக்குதலில் 18 அதிரடிப் ...டையினர் அவ்விடத்திலேயே ...லப்பட்டனர். 8 பேர் படுகாயத் ...துள்ளாகினர். விடுதலைப் புலி...ன் தாக்குதலை எதிர்கொள்ள ...பாத மற்றையவர்கள் ஓடித் ...த்துக் கொண்டனர். ஓடிய படையினரையும் விடுதலைப் புலிகள் விரட்டிச் சென்று தாக்கினர். இத்தாக்குதலின் போது பல நவீன ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இவ்வெற்றிகரமான தாக்குதலில் மேஜர் சஜீவன், மேஜர் கனன், கப்டன் ஜெயா, லெப். கட்டப்பொம்மன் ஆகிய நான்கு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். இவர்களுக்கு எமது வீரவணக்கம்.

## ...மட்டக்களப்பில் தாக்குதல்

...க்களப்பு மாவட்டத்திலுள்ள ...பந்தியாலைப் பகுதியில் ...ள இராணுவக் காவலரண் ...து 11.04.96 அன்று காலை ...லைப்புலிகள் நடத்திய ...தலில் இராணுவச் சிப்பாய் ஒருவரும் ஊர்காவற் படையினர் ஒருவரும் கொல்லப்பட்டனர். 3 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர். புலிகள் தரப்பில் எவ்வித இழப்பும் ஏற்படவில்லை. பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

## மாபெரும் மனிதச் சங்கிலிப் போராட்டம்

### பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றனர்

சிறிலங்கா ஆட்சியாளர்களின் திட்டமிட்ட இனஅழிப்பு நடவடிக்கைகளில் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாக்க சர்வதேச சமூகம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியும், சர்வதேச சமூகம் தமிழ் மக்களின் விடுதலைப் போரினை அங்கீகரிக்க வேண்டும் எனக் கோரியும், 10-04-96 அன்று நடத்தப்பட்ட மாபெரும் மனித சங்கிலிப் போராட்டத்தில், சிறுவர்கள், முதியோர், ஆண்கள், பெண்கள் எனப் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். இவ் மாபெரும் மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் 100க்கும் அதிகமான பொது அமைப்புக்கள் கலந்து கொண்டன.

சாவகச்சேரி பேரூந்து நிலையத்தில் தொடங்கி, கண்டி வீதியாக கொடிகாமம் ஊடாகச் சென்று அங்கிருந்து பருத்தித்துறை வரை சுமார் பதினைந்து மைல்களுக்கு தமது கைகளை கோர்த்த வண்ணம், கொழுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது, மக்கள் உணர்வு கொண்டு நின்றனர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிடப் பிரதிநிதி, சாவகச்சேரியில் இருந்து ஆரம்பமான மனிதச் சங்கிலித் தொடரையும், ஊர்வலத்தையும் பார்வையிட்டவாறு பருத்தித்துத்துறை வரை சென்றார்.

ஊர்வலத்தில் இறுதியில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்திற்கான மகஜர், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய திட்ட இணைப்பாளரிடம் கையளிக்கப்பட்டது.

எழுச்சிப் பேரணியில்,

"சிறிலங்கா அரசே போரை நிறுத்து, புலிகளுடன் பேசு!"

"மனை, மக்களை அழித்து நாட்டை சுடுகாடாக்காதே!"

"எங்கள் தேசம் சிதைக்கப்படுவதை சர்வதேசம் தடுக்காதா?"

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாபெரும் மனிதச் சங்கிலிப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையின் முழுவிபரம்

சிறிலங்காவில் உள்ள தமிழர்கள் ஒரு சிறுபான்மையினத்தினைச் சேர்ந்தவர்கள் அல்லர். தமிழர்களாகிய நாம் வரலாற்றிக்கு முற்பட்ட காலத்தில் இருந்த தனித்துவம் மிக்க ஒரு தேசிய இனமாக தனியாட்சி செய்து எமது பாரம்பரியப் பிரதேசத்தில் எமது கலை பண்பாட்டுக்களைப் பேணி வந்திருக்கின்றோம். கல்வியிலும், கலைவளர்ப்பதிலும் எமது மக்கள் உலகத்தமிழினத்துக்கு முன் உதாரணமாக திகழ்ந்து வந்திருக்கின்றார்கள். எமது பிரதேசங்களையும் பண்பாட்டுச் சின்னங்களையும் மொழியுரிமைகளையும் எமது இனத்தின் சுயநிர்ணய உரிமைகளையும் பேணிக்காப்பதோடு அவற்றிற்கு இடுக்கன் வரும்போது திரண்டு எழுந்து அவை அழிந்து போகாமல் தடுப்பது எமது தலையாய பொறுப்பும் கடமையும் ஆகும்.

இந்த வகையில் சுதந்திரத்திற்கு முன்பும், பின்பும் எமது தனித்துவத்தைப் பேணி இந்த நாட்டிலுள்ள ஏனைய இனத்தவரோடு சரிநிகர் சமமாக வாழ்வதற்கான எத்தனங்களைச் செய்து வந்திருக்கின்றோம். சுதந்திரத்திற்குப் பின்னர் படிப்படியாக வந்த ஆட்சியாளர்கள் எமது சுதந்திரத்தைப் பாதிக்கும் வகையில் இன, மொழி, கலை பண்பாட்டு ரீதியான பல வகைகளிலும் எமது உரிமைகளைப் புறக்கணித்து வந்துள்ளனர். இதனால் எமது பாரம்பரியப் பிரதேசங்களை இழந்தோம். இனரீதியாகவும், மொழி ரீதியாகவும், கல்வியிலும், தொழில் வாய்ப்புக்களிலும் நாம் பின்தள்ளப்பட்டோம். இதன் காரணமாக பாராளுமன்ற சனநாயகமுறையில் நாங்கள் எங்கள் மனத்தாக்கங்களை அரசபீடத்தில் அமர்ந்தவர்களுக்கு இடித்துரைத்தோம். தார்மீக முறையில், இழந்த எமது உரிமைகளை மீட்டெடுப்பதற்காக போராடினோம். ஒன்றும் பயனளிக்காததினாலேயே ஆயுதப் போராட்டம் மூலம் எமது உரிமையை வென்றெடுப்பதற்கான போரும் முனைப்புப் பெற்றது. இந்தப் போராட்ட வளர்ச்சியானது பிரமிக்கத்தக்க வளர்ச்சி பெற்று அரசை ஈடாட்டம் காணச் செய்திருக்கின்றது. இன உரிமைக்கான இப் போராட்டத்தினைப் 'பயங்கரவாதம்' என்ற பெயரில் உலக அரங்கிலே தனது அரச பயங்கரவாதத்தை மூடிமறைக்கக் கங்கனம் கட்டி நிற்கின்றது சிறிலங்கா அரசு. பாராளுமன்றத் தேர்தல் என்ற ஒரு போலித் தேர்தலை, தமிழ் பகுதிகளிலே உள்ள இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் நடாத்திக் குறைந்த வீதத்திலான தமிழர்கள் வாக்குகளை– இராணுவ அச்சுறுத்தல்களின் உதவியுடன் பெற்று, தமிழர் சிலரை வைத்து அவர்களை தமிழர்களின் பிரதிநிதிகள் என்ற மாயையைக் காட்டிவரும் சிறிலங்கா அரசு ஒரு தொங்கும் பாராளுமன்றத்தை நடாத்திக் கொண்டு இருக்கின்றது.

அல்லலுறும் தமிழர்களின் வாக்குப் பலத்தால் சனாதிபதியாக சந்திரிகா அம்மையார் பதவியேற்ற பின்னர் கொடுத்த வாக்குறுதிகளை காற்றிலே பறக்கவிட்டு இராணுவப் பலத்தால் தமிழ் மக்களின் மீதி உடமைகளைப் பறித்து எம்மை ஏதிலிகளாக்கியுள்ளார். தொடர்ந்து தமது இராணுவ பலத்தினால் எம் மக்களை மேலும் துன்பப்படுத்த கங்கணம் கட்டி நிற்கின்றார். தீர்வுத் திட்டப் பொதி என்ற இப்பொதியை இடது கையாலும், 'போரின் மூலம் சமாதானம்' என்று பெறமுடியாத முரட்டுப் பிடியை வலது கையாலும் வைத்துப் பிடித்துக் கொண்டு இரட்டை வேடம் போடும் அரசியல் வேடதாரியாக நாடகம் ஆடிக் கொண்டிருக்கின்றார். பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்பது போன்று ஏமாற்று வித்தைகளைக் காட்டுகின்றார்.

கொழும்பையே வாழ்விடமாகவும் கும்பிட்டு வாங்குவதையே வாழ்வதையே ஒரு பொழுதுபோக்காகக் கொண்டு சந்தர்ப்பவாத அரசியல் நடத்தும் தமிழ் குழுக்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் தமது அரசியல் எதிர்காலத்திற்காக பிச்சைப் பாத்திரம் கொண்டு புத்த பீடங்களிலும் வெளிநாட்டுத் தூதரகங்களிடமும் கையேந்தித் திரிகின்றார்கள். அரசியல் சதுரங்கமாடிக் கொண்டிருக்கும் இந்தியா, சிறிலங்கா மூட்டும் அரச பயங்கரவாதத்திற்கு எண்ணையூற்றிக் கொண்டிருக்கிறது. இங்கு நடப்பது உள்நாட்டுப் பிரச்சினை என்ற பொய்யான அபிப்பிராயத்தைப் பிறநாடுகளுக்குக் காட்டி வெளியுலகின் தலையீட்டைத் தடுப்பதற்கு அரசு பகீரத பிரயத்தனம் செய்துள்ளது. அதற்கு மேலாக தென்னிலங்கையில் நடைபெறும் வன்முறை அரசியலும், குடும்ப அரசியலும், பௌத்த பேரினவாத அமைப்புக்களும், இனவெறி பேசும் அமைப்புக்களும் இங்கு வாழ்கின்ற தமிழினத்தையே பூண்டோடு அழித்து விடவேண்டும் என்ற போக்கு வலுவடைந்து வருகின்றது. இதனால் தமிழின அழிப்பு என்ற சிங்கள இராணுவ வல்லாதிக்கப் பூதம் எமது தலைவாசல் வரை வந்துவிட்டது. இந்த ஆதிக்க பயங்கர இராணுவத்தின் பிடியில் இருந்து விடுபட தமிழ் மக்கள் தமது நிலைப்பாட்டை கருத்துக் கணிப்பு ஒன்றின் மூலம் அனைத்துலகத்திற்கும் தெரியப்படுத்த வேண்டியது அனைவரது கட்டாயக் கடமையாகும். அதற்காக வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தினர் கருத்துக் கணிப்பு ஒன்றைக் கையொப்ப வடிவில் பெறுவதற்கும் அதை தமிழ் மக்களின் சுயமான வாக்களிப்பாகக் கருதி சிறிலங்கா சனாதிபதிக்கும், ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர் நாயகத்திற்கும் ஏனைய அனைத்துலக அமைப்புக்களுக்கும் அனுப்பி மக்களின் அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படுத்தவுள்ளனர். இந்த செயற்பாட்டில் 100க்கு மேற்பட்ட பொதுசன அமைப்புக்கள் இணைந்துள்ளன. இந்தக் கருத்துக் கணிப்பு கையெழுத்து சேகரிப்புக்கு முன்னோடியாக மனிதச் சங்கிலிப் போராட்டம் ஒன்றை வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் நடத்துகின்றது.

சுதந்திரமான, ஒரு தேசிய இனமாக சுயநிர்ணய உரிமையோடு இந்த நாட்டில் வாழவேண்டிய தமிழர் அதி பயங்கர இராணுவச் சங்கிலித் தொடரால் குழப்பப்பட்டுள்ளனர். இதன் துன்பம் – பொறுக்க முடியாத அளவிற்கு மக்களை அன்றாடம் நெருக்கி ரசித்து வருகின்றது. இங்கு வாழும் மக்கள் இராணுவக் கொடுமையினாலும் கெடுபிடிகளினாலும் மேலும் அல்லல்பட்டு– அநாதியாய்– அகதிகளாய் அங்கலாய்பதற்கு முன்னர் இப்படியான சங்கிலித் தொடர் போராட்டம் மூலமும், கையொப்ப போராட்ட மூலமும் அனைத்தும் அனைத்துலகிற்கு தெரிவிக்க ஒருமித்தும், தனித்தும் உணர்வுபூர்வமாகவும் செயல்பட வேண்டும். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விமான்கள், கல்விப் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து நிறுவனங்களின் அதிகாரிகள், ஆலோசகர்கள், பாடசாலை அதிபர்கள், கல்வித் துணைச் சேவை அமைப்புக்கள், கல்வி சார் தொழிற்சங்கங்கள் ஏனையோருடன் சேர்ந்து இங்கு நடப்பதை வெளிக்கொணர அனைத்து முயற்ச்சிகளும் செய்ய வேண்டுமென தமிழீழக் கல்விப் பேரவை வேண்டிக்கொள்கின்றது. இங்கு மழைபோல் பொழியும் குண்டுகளாலும் தீயாக்கிக் கருக்கும் எரிகுண்டுகளாலும் பட்ட துயரை நினைவில் கொண்டு வெய்யிலையும் மழையையும் பொருட்படுத்தாது போராட்டம் பூரண வெற்றி பெற ஒத்துழைக்க வேண்டுகின்றோம்.

# செய்திச்சுருள்

## எம்.ஐ24 தாக்கியதில் மக்கள் பலி

கடந்த மாதம் 16ம் திகதியன்று மன்னார் மாவட்டத்தில் நாச்சிக்குடா மற்றும் பாண்டிவிரிச்சான் பகுதிகளை நோக்கி வந்த எம்.ஐ24 ரக யுத்த உலங்கு வானூர்தி தாக்கியதில் 17 பொது மக்கள் கொல்லப்பட்டு 64 பேர் காயமடைந்துள்ளனர். மேலும் நாச்சிக்குடா பகுதியில் நேபாம் குண்டுகளை வீசிய எம்.ஐ24 அப்பகுதி முழுவதையும் சாம்பல் மேடாக்கியுள்ளது.

அண்மையில் சிறிலங்கா அரசால் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட இஸ்ரேலியத் தயாரிப்பிலான இவ் உலங்கு வானூர்தி தாக்கியதில் கொல்லப்பட்ட அனைவரும் அப்பாவித் தமிழ் மக்களே என மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த கத்தோலிக்க மதகுரு ஞசராஜப்பு தெரிவித்துள்ளார்.

## பாதுகாப்பான இடம் நோக்கி மக்கள்

வெற்றிலைக்கேணி இராணுவ முகாமிலிருந்து வத்தராயன் பகுதிகளை நோக்கியும், பலாலி முகாமிலிருந்து தொண்டமானாறு, கெருடாவில் பகுதிகளை நோக்கியும் சிறிலங்கா இராணுவத்தால் ஏவப்பட்ட எறிகணைகள் பலத்த சேதத்தை விளைவித்துள்ளன.

கடந்த 9ம் திகதி காலை 8.40 மணிக்கு ஆரம்பித்த எறிகணைத்தாக்குதல் மக்கள் செறிந்தவாழும் பகுதிகளை நோக்கி மாலை வெகுநேரம் வரை தொடர்ந்ததால் பீதியுற்ற அப்பகுதி மக்கள் தங்கள் வீடுகளை விட்டு, தென்மராட்சிப் பகுதியிலுள்ள தமது உறவினர் வீடுகளுக்கும், வன்னிப்பகுதிகளை நோக்கியும் பெருமளவில் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

## மட்டக்களப்பில் இளம்பெண்கள் கைது

மட்டக்களப்பு புதுப்பாலத்திலுள்ள சோதனை நிலையத்தில் வைத்து, மூன்று இளம் பெண்களையும், ஒரு இளைஞனையும் எந்தவொரு காரணமுமில்லாமல் சிறிலங்காப் பொலிசார் தடுத்து வைத்துள்ளனர். புத்தாண்டு விடுமுறையுடன் கொழும்பு சென்று மட்டக்களப்பிற்குத் திரும்பியிருந்த இவர்கள், தமது சொந்த ஊரான கொக்கட்டிச்சோலைக்குச் செல்வதற்காக மட்டக்களப்பு நகர் பேரூந்து நிலையத்திற்குச் சென்று கொண்டிருந்த வேளையிலேயே புதுப்பாலம் சோதனைச் சாவடியில் வைத்து பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த எஸ். புனிதகுமாரி (வயது 18), கே. மங்களேஸ்வரி (வயது 18), எஸ். உதயந்தனாதேவி (வயது 18), ரகுபதி (வயது 25) ஆகிய தமிழர்களே தடுத்து வைக்கப்பட்டவர்களாவர். இவர்கள் தற்போது எங்கே தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்பது இன்னமும் தெரியவரவில்லை.

## சத்திரகிச்சை பாதிக்கப்படும் அபாயம்

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. சத்திரசிகிச்சைப் பிரிவில், வைத்தியர்களுக்கு ஏற்பட்டுள்ள பெரும் பற்றாக்குறையே இதற்குக் காரணம் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இப் பகுதி மக்களுடன், தற்போது இடம்பெயர்ந்த மக்களுமாக மருத்துவத் தேவைக்காக வரும் மக்களின் தொகை அதிகரித்துள்ளது. இவர்களைப் பரிசோதிப்பதற்கு மருத்துவர்கள் இல்லாமையினால் நோயாளர்கள் மிகுந்த நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர். தற்போது ஒரே ஒரு வைத்தியரே சத்திரசிகிச்சைப் பிரிவில் கடமையாற்றி வருகின்றார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலை தொடர்ந்தால் எதிர்பாராத விளைவுகள் ஏற்படக் கூடிய சூழ்நிலை உருவாகும் என வைத்தியசாலை வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

இதேவேளை பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை இரத்தவங்கியில் குருதிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டதை கருத்திற்கொண்டு, காட்லிக் கல்லூரி மாணவர்கள் எட்டுப்பேர் குருதிக் கொடை அளித்துள்ளனர்.

## திருமலையில் இராணுவத்தால் மாணவன் சுட்டுக் கொலை

திருகோணமலை மாவட்டம் மூதூரில் தமிழ் மாணவன் ஒருவர் சிறிலங்கா இராணுவப் பயங்கரவாதிகளின் துப்பாக்கி வெறிக்குப் பலியாகியுள்ளார். 9-04-96 அன்று மாலை 5.15 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. மூதூரைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை வசந்தராஜா என்ற 17 வயது மாணவனே இவ்விதம் பலியாகியுள்ளார். கடந்த பெப்ரவரி மாதம் இவரின் இளைய சகோதரரும், சிறிலங்கா இராணுவப் பயங்கரவாதிகளின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியானார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## "திசைகள் வெளிக்கும்" முழு நீளத் திரைப்படம் வெளியீடு

தமிழீழ திரைப்பட இயக்குனர்களில் ஒருவரான திரு. கேசவராஜன் அவர்களின் "திசைகள் வெளிக்கும்" எனும் முழு நீளத் திரைப்படம் ஒன்று 12-04-96 அன்று கிளிநொச்சியில் சிறந்த முறையில் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. மங்கள விளக்கினை வன்னிப் பிரதேச அரசியல் பொறுப்பாளர் திரு. நீகன், கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. திரு ஆகியோர் ஏற்றி வைக்க, நிதர்சனம் பொறுப்பாளர் திரு. தமிழன்பன் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். பிரதம பேச்சாளராக கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார். கலைஞர்கள் பரிசில்கள் கொடுத்து கௌரவிக்கப்பட்டார்கள்.

## கிழக்கு மாகாண இந்துக்களின் ஒன்றியம் சிவ சேனாத் தலைவருக்கு வேண்டுகோள்

கிழக்கு மாகாண இந்துக்களின் ஒன்றியம், இந்தியாவில் ஒள்ள இந்துக்களின் அரசி[illegible] கட்சியான சிவ சேனாத் தலைவர் பால் தக்கரேக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ள[illegible] தற்போதைய சூழ்நிலையில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் கடின வாழ்வையும், சிறிலங்[illegible] ஆயுதப்படையினரின் தமிழ் மக்களுக்கெதிரான வன்முறையையும், தமிழரின் தாயகம் உல[illegible] ளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் அத் தாயகத்தில் த[illegible] தமிழ் மக்கள் சுயமரியாதையுடனும், அமைதியாகவும் வாழமுடியும் என்றும் அக்கடிதத்[illegible] குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் திரு கரிகாலன் ஈழநாதம் பத்திரிகைக்கு அளித்த பேட்டி.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும்பான்மையான பகுதி புலிகளின் (எமது) கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. மட்டு வாவி கடற்கரைப் பிரதேசம் வரையான நிலப்பரப்பே படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. இம்மாவட்டத்தின் பிரதான வீதிகள் தவிர மண்டூர், வெல்லாவெளி, மாவடி வெட்டை, 36ம் கொலனி,.. ஆகிய இடங்களிலேயே படை முகாம்கள் அமைக்கப்பட்டு உள்ளன. சுற்றிவளைப்பு மற்றும் பதுங்கித் தாக்குதல் நோக்குடன் புதிதாக அமைக்கப்பட்ட அத்தனை முகாம்களையும் படையினர் முற்றாக மூடிவிட்டனர். அண்மையில் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு முயற்சிகள், பதுங்கித் தாக்குதல் என்பன எதிர்த் தாக்குதலினால் முறியடிக்கப்பட்டுவிட்டன. இதனால் படையினர் பிரதான வீதிகளிலுள்ள தமது முகாம்களுக்கு திரும்பிவிட்டனர். இவ்வாறு அரசியற் துறைப் பொறுப்பாளர் பத்திரிகைக்கு அளித்த விசேட பேட்டியில் தெரிவித்தார். அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இறுதியில் படையினர் வாபஸ் வாங்கிய புலிபாய்ந்தகல் முகாமில் முட்கம்பி உட்பட எதுவுமே எடுக்காமல் இரவோடிரவாக தமது வாகனங்களுடன் வெளியேறிவிட்டனர். இதற்கு முன்னதாக படையினருக்குச் சாதகமான நிலப்பரப்பைக் கொண்ட தரவைக்குளம், கட்டுமுறிவு முகாம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட உக்கிரமான–வெற்றிகரமான தாக்குதல்களினால் சிறிய மற்றும் காட்டுப்புற முகாம்களை தக்க வைக்கமுடியாது என்ற நிலைமையே ஏற்படுத்தி உள்ளது. இந்த நிலையில் பிரதான வீதியில் நடைபெற்ற தாக்குதல்கள்– குறிப்பாக சந்திவெளியில் இருதடவைகள் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், புதுக்குடியிருப்பு முகாம் மீதான கரும்புலித்தாக்குதல், கடந்த சில தினங்களுக்கு முன்னர் மாவடிவேம்புப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு 41 படையினர் கொல்லப்பட்ட தாக்குதல் என்பவற்றினால் பிரதான வீதியை அண்டிய பகுதிகளில் தமக்குப் பாதுகாப்பு இல்லை என்ற உணர்வு சிறிலங்காப் படையினருக்கு ஏற்பட்டுள்ளது.

வாகரைப் பிரதேசத்திற்கான அனைத்து செயற்பாட்டையும் நிறுத்துவதற்கு படையினர் திட்டமிட்டுச் செயற்படுகின்றனர். இப்பகுதிக்கான மருத்துவம், மற்றும் போக்குவரத்து வசதிகள் சரியான முறையில் இல்லை. இப்பகுதிக்கு வாரத்திற்கு ஒரு நாள் மட்டுமே எம்.எஸ்.எவ்ப் மருத்துவ குழுவினரும், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து நடமாடும் மருத்துவச் சேவையை வழங்கிவருகின்றனர். இச்சேவை மக்களுக்குப் போதுமானதாக இல்லை. இதுபோன்றே இப்பிரதேசத்து கற்பித்தல் செயற்பாடுகள் மீது படையினர் கடின கெடுபிடிகள் பிரயோகித்து வருகின்றார்கள். போக்குவரத்து வசதிகள் இல்லாமை காரணத்தால் பல கற்பிணிப் பெண்கள் மரணம் அடைந்த சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

இப்பிரதேசத்துப் பாடசாலை வசதிகள் அனைத்தும் புறக்கணிக்கப்பட்டு சொற்ப வசதிகளே அனுமதிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக தளபாடங்கள் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு அவசியமான உபகரணங்கள் என்பவற்றை மட்டக்களப்பிற்கு எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்கு வாழைச்சேனைக்குச் செல்லவேண்டி ஏற்பட்டுள்ளது.

தினசரி ஒரு பஸ் சேவையே நடைபெறுவதால் பொருட்கள் வாங்கவரும் பெண்கள் ஒரு இரவுப் பொழுதை வாழைச்சேனையில் கழித்துவிட்டு மறுநாளே வாகரைப் பிரதேசத்துக்குச் செல்ல முடிகிறது. இவ்வாறு தினம் பொழுதைக் கழிக்கும் இளம் பெண்கள் படையினரின் கெடுபிடிக்குள்ளாகி வருகின்றனர். சில பெண்கள் பாலியல் வன்முறைக்குள்ளான சம்பவங்களும் ஏற்பட்டுள்ளன. இவர்களுக்கு ஒரு நாளைக்குத் தேவையான உணவுப் பொருட்கள் அனுமதிக்கப்படுவதுடன் துணி வகைகள் உட்பட உடுபுடவைகளை எடுத்துச் செல்வதற்கும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா அரசினால் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்ட ஏற்பாடுகளும் கிழக்கு மாகாணத்தின் தமிழ்ப் பிரதேசத்தில் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி இவை சிங்களக்குடியேற்றப் பகுதிகளிலும் வேறு பகுதிகளிலும் செயற்படுத்தப்படுகிறது. இத்தகைய நிலை ஏற்படும்போது அதனை சிறிலங்கா அரசு கருத்தில் எடுப்பதில்லை. இத்துடன் தமிழ் கிராமங்கள் சுற்று சூழ்நிலை பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றனர். அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது தமிழ் மக்களின் நலன் கவனத்தில் கொள்ளாமலேயே செயற்படுத்தப்படுகின்றது. இதன்போது தமிழர்களின் விளைநிலங்கள் திட்டமிட்டு பறிக்கப்பட்டு வருகிறது. தமிழர் ஏனைய பகுதிகளில் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவது கட்டுப்படுத்தப்பட்டு உள்ளது. பெரும்பாலான ஏழைக்குடும்பங்களின் இயல்பு வாழ்க்கை இதனால் பாதிப்படைந்து உள்ளது.

கிண்ணியடி முகாம் தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதியில் உள்ள வீடுகள் அனைத்தும் படையினரால் சூறையாடப்பட்டுள்ளது. எந்தப் பொருட்களையும் படையினர் விட்டுவைக்கவில்லை. சூறையாடப்பட் பொருட்கள் முகாம்களில் பெருவாரியாகக் காணப்படுகின்றன. முஸ்லிம் ஊர்காவல் படையினராலும் கணிசமான பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. அத்துடன் பெருவாரியான அடையாள அட்டைகளையும் படையினர் பறித்துச் சென்றுள்ளனர். இவ்விடயம் தொடர்பாக அப்பகுதி உத்தியோகத்தர் இரத்தினசபாபதியிடம் முறையிடப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் மீளக் குடியமர்த்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாக அவர் கூறினார். இதனைத் தொடர்ந்து பிரதேச செயலர் தலைமையிலான ஒரு குழு அப்பிரதேசத்திற்கு விஜயம் செய்த பொழுது படையினர் வீடுகளுக்குத் தீ மூட்டிக்கொண்டிருப்பதைக் கண்டனர். இக்குழுவினரிடம் படையினர் புலிகள்தான் தீ மூட்டினர் எனக் கூறினர். படையினரின் ஒரு தொகுதி இவர்கள் சுற்றிப்பார்க்கும் இடங்களை நோக்கி எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர்.

மரப்பாலம், கோப்பாய்வெளிப் பகுதி மக்களும் படுவான்கரை மக்களும் போக்குவரத்து வசதி இல்லாது பெரிதும் சிரமப்படுகின்றனர். பல மாதங்களாக இவர்களுக்கு உணவுப்பொருட்களோ மற்றும் எதுவுமோ கிடைக்கவில்லை. அண்மையில்தான் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மூலமாக சில நிவாரணப் பொருட்கள் கொடுக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனினும் உணவுப் பொருட்கள் தவிர்ந்த வேறு பொருட்களுக்கு மிகவும் தட்டுப்பாடுள்ளன. இத்தனை நெருக்கடியிலும் மத்தியிலும் தமிழீழ மக்கள் விடுதலைப் போராட்டத்திற்கான பங்களிப்பை வழங்குவதில் சகல பகுதி மக்களும் மனிதாபிமான முறையில் செயல்படுகின்றனர். போராட்டத்தில் இளைஞர், இணைவதும் பெரும் அளவில் அதிகரித்துள்ளது. எனவும் கரிகாலன் குறிப்பிட்டார்.

# போசாக்கு உணவு நிலையம் திறந்து வைப்பு

வன்னிப் பிரதேசத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் போசாக்கு உணவுத் திட்ட நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்த மக்கள் வாழும் பகுதிகளில் உள்ள குழந்தைகளுக்கு போசாக்கின்மையால் நோய் வாய்ப்படும் சந்தர்ப்பம் கண்டுபிடிக்கப்பட்டமையினால் இந்நிலையம் மேம்பாட்டு நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டு தனது சேவையையும் உடனடியாக ஆரம்பித்துள்ளது. அத்துடன் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை உடனடியாக இந்நிலையத்திற்கு அழைத்து வருமாறு பெற்றோர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய போசாக்கு உணவு வழங்கு நிலையங்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினாலும் திறம்பட நடாத்தப்படுகிறது. இடம் பெயர்ந்து அடிப்படைத் வேவைகட்கே அல்லாடும் மக்கட்கு இத்தகைய போசாக்கு உணவுமையங்கள் பெரும் வரப்பிரசாதமாக அமைகின்றன. ஆபிரிக்காவின் சில பகுதிகளில் உள்ள சில குழந்தைகள் போல பாதிக்கப்பட்ட பல குழந்தைகள் இத்தகைய நிலையங்களில் உணவு ஊட்டப்பட்டு தற்போது தேறிவருவதாக அறிக்கைகள் கூறுகின்றன.

# இனம் காண்க

விடுதலைப்போராட்டம் உக்கிரமடைந்து வரும் இவ்வேளையில், துரோகிகளையும், உளவாளிகளையும், சுயநலப் பேய்களையும், தமது பதவியாசனங் களுக்காக எந்தவொரு இழிசெயலையும் செய்யத்தயங்காத நச்சுப் பாம்புகளையும், பணத்துக்ககாக காட்டிக்கொடுக்கும் கயவர்களையும், இனங்கண்டு ஒதுக்குதல் தலையாய கடமையாகும்.

போராட்டத்தின்பால் ஒரே சிந்தனைவயப்பட்டுப் போராளிகள் போராடிக்கொண்டிருக்கும்போது கூடவே நிற்பவன் குழிபறிப்பதை அவர்களால் சிலவேளைகளில் கண்டுகொள்ள முடிவதில்லை. ஆகவே இத்தகையோரை இனங்கண்டு போராட்டத்தினை முன்னெடுத்துச்செல்வோருக்கு இனங்காட்டல் பொதுமக்களின் பெரும்பங்காகிறது.

இராணுவ நடவடிக்கைகளின்போது இடம்பெயர்வது உளவாளி ஊடுருவ நல்ல சந்தர்ப்பத்தையளித்துவிடுகிறது. நாம் அசிரத்தையாக இருப்பது நம்மிடையே அத்தகைய கயவர்கள் செய்திகளை அறிவதற்கும், செய்திகளைப் பரப்புதற்கும் காரணமாகிவிடுகிறது. புதிய முகமொன்று அயலில் உறவாடின் எச்சரிக்கையாக நாம் இருக்கவேண்டும்.

இத்தகைய எச்சரிக்கையுணர்வும் பாதுகாப்புணர்வும் தாயகத்திலுள்ள மக்களுக்குமட்டுமல்ல புலம்பெயர்ந்து வாழும் தமிழ்மக்களுக்கும் நன்கு பொருந்தும். வெளிநாடுகளில் புலிகளின் நடவடிக்கைகளை எப்படியாவது முடக்கிவிட வேண்டும் எனக் கங்கணம் கட்டிநிற்கும் சிறிலங்கா அரசு எத்தனையோவிதமான நாசகார வேலைகளை நம்மிடையே உலாவும் இந்த நாசகார சக்திகளினூடாக நடாத்த முயல்கிறது. இவற்றையெல்லாம் முறியடிக்கக்கூடியதாக வெளிநாட்டில் புலிகளிடையே ஒரு கட்டுப்பாடான ஒழுக்கமும் அவர்கள் பற்றிய நன்மதிப்பும் ஒருவருக்கும் தீங்கிழைக்காத பண்பும் அதனாலும், ஒரு தூய விடுதலைக்கான அர் ப்பணிப்பில் ஏற்படும் தர்மபலமும் புலிகளுடனிருப்பதால் அந்த நாசகார சக்திகள் ஒருபோதுமே வெல்லமுடியாது.

எனினும் நாமும் எச்சரிக்கையாக இருப்பது போராட்டத்தை துரிதப்படுத்தவும் இலகுவாக்கவும் முடியும். புலிகள்மீது அபாண்டப் பழிசுமத்தி மக்களின் நன்மதிப்பிலிருந்து அவர்களைத் துடைத்தழிக்க மிகவும் முயலும் எத்தனையோ சக்திகள் முனைகின்றன. அவர்களை இனங்கண்டு இனங்காட்டுக.

இத்தகையோரின் இழிசெயலால் சிலவேளைகளில் சில நபர்களோ அன்றி பத்திரிகைகளோ அல்லது செய்தித்தாபனங்களோ புலிகள்பற்றித் தப்பபிப்பிராயம் கொண்டு கருத்துக்களைத் தெரிவிக்கக்கூடும். தயவுசெய்து வாளாவிருக்காதீர். அவர்களை இனங்கண்டு, உங்களால் ஆன விளக்கங்களை உடன் வழங்குக. அத்தகைய கருத்துக்களை விதைப்போரை இனங்கண்டு அவர்கட்கும் புலிகள்பால் உள்ள நியாயத்தை எடுத்துரைக்குக.

துரோகத்துக்குத் துணைபோவோர் தமது செய்தியமைப்புக்களூடாக புலிகளுக்காக பேசுவதுபோல அல்லது எழுதுவதுபோல அல்லது நடுநிலை வகிப்பது போல நாசூக்காகவும் மறைமுகமாகவும் தூவும் கருத்துக்களை அப்படியே நம்பாது, எடுத்தாய்ந்து பிரித்தறிக. இத்தகையோரை இனங்கண்டு அவர்பற்றி நண்பர்க்கும் எடுத்துரைக்குக. அத்தகைய செய்திகளைப் புறந்தள்ளுக.

எல்லாவற்றிற்கும் மேலாக தாமும் புலியென்றும் விடுதலையின் வித்தென்றும் கூறிக்கொண்டே குழிபறிக்கும் கோடரிக்காம்புகளையும் இனங்கண்டு புறந்தள்ள, வாளாவிருக்காதீர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 30-10-95 திங்கள்

காலாதிகாலமாக வாழ்ந்து களித்துச் சுகித்திருந்த மண்ணை விட்டு ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் வலிகாமத்திலிருந்து ஒரே நாளில் புலம்பெயர்ந்து போகுமிடம் எதுவென்ற இலக்கு எதுவுமின்றி நகர்ந்த சம்பவம்.

தமிழீழ மண்ணின் வரலாற்றில் மட்டுமின்றி உலக சரித்திரத்திலேயே வித்தியாசமான ஒரு பக்கத்தை இணைத்துவிட்ட முக்கியத்துவம் கொண்ட நிகழ்ச்சி.

கிராமங்களை, நகரங்களை ஏன் தேசங்களைவிட்டே இடம் பெயர்வது இன்று நேற்றல்ல– பைபிளின் பழைய ஏற்பாடு நடந்ததாகக் கருதப்படும் காலத்தில் கூட இடம் பெற்று வந்தது.

ஆனால் இன்று–

மக்கள் மட்டும் இடம் பெயரவில்லை!

எதிரியின் சிலுவை நாட்டப்படாத சமாதிகளாகின்றன. ஏன் வான்பரப்புக்கூட எதிரியின் பலிபீடமாகிவிட்டது. வலிகாமத்தின் கிழக்கிலிருந்து புறப்பட்ட சூரிய ஒளிக்கதிர் எங்கும் பரவி ஆதிக்கம் செலுத்தும் என எதிரி கண்ட கனவு இங்கே சந்தனக் கட்டைகளின் அக்கினிச் சுடரில் சாம்பலாகிக் கொண்டிருக்கின்றன.

எமது வலிகாமம் மண்ணின் பரம்பரைக் குடிகளின் மூச்சுக் காற்றுகள் அங்கு இன்னும் உலவி வருவதால் மீண்டும் எமது மண்ணுக்கு நாம் வெற்றி வீரராக எதிரிகளின் சாம்பல் மேட்டில் ஏறி நடந்து செல்வோம் என்ற நம்பிக்கை மேலும், மேலும் உறுதி பெறுகின்றன.

எனினும்–

இந்த இடம் பெயர்வு மூலம் சில பாதகமான நிலைமைகள் தோற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு என்ற உண்மையை நாம் உணர்ந்து செயற்பட வேண்டிய கட்டம் உண்டு.

உறவு வலிகாம மண்ணில் நிலவியது. ஒவ்வொரு மனிதனும் தனது குடும்பம் தனது உறவுகள், தனது ஊர், தனது தேசம் என தனது என்ற வட்டத்துக்குள்ளேயே ஒரு பொது உறவு அந்த மண்ணில் நிலை கொண்டிருந்தது.

ஆனால், இன்று–

தனித்தனி மரங்களாய்....

அகதி முகாங்களில், உறவினர் வீடுகளில், ஓலைக் கொட்டில்களில் உறவுகளைப் பேண முடியாத, தனித்துவத்தைப் பாதுகாக்க முடியாத நாளைய வாழ்வைப் பற்றிய ஒரு திட்டவட்டமான இலக்கை வகுக்காத ஒரு வாழ்வுக்கு எமது மக்களை இவ்விடப் பெயர்வு தள்ளி விட்டது.

இங்குதான் எமது கலாச்சார வாழ்வு ஆட்டம் காணக்கூடிய ஆபத்து தோன்றுவதற்கான வாய்ப்புக்கள் உருவாகின்றன.

ஒரு குறுகிய பரப்பளவில் கூடிய பலன் தரும் வலிகாம மண்

# மீண்டுமொரு உதயத்துக்காக...

**நா. யோகேந்திரநாதன்**

நகரங்கள், கல்விக்கூடங்கள், அரசகாரியாலயங்கள், கூட்டுறவு அமைப்புகள், பல்கலைக்கழகம் என மக்களுடன் இணைந்து மக்களின் வாழ்வோடிணைந்த அம்சங்களும் வெளியேறின. இடம்பெயர்வு நடைமுறையில் இது ஒரு புதிய அடிவைப்பு.

வெறும் மண்ணும், இடிந்த கட்டிடங்களும், முறிந்த மரங்களும், வெறிச்சோடிப்போய் பூவரசஞ் சருகுகளால் நிறைந்து போய்விட்ட எங்கள் கிராமங்களின் தெருக்களும், சிதைந்து போன எதிரியின் கனவுகளையிட்டு எள்ளி நகையாடியவாறு எஞ்சி நின்றன.

பாரிய ஒரு இன அழிப்பின் மூலம் ஒரு நிரந்தர அடிமை வாழ்வை வலிகாம மக்களின் தலையில் சுமத்த நினைத்த எதிரி ஏமாந்து போய் வெற்றுத் தரையில் தடி நாட்டிச் சிங்கக் கொடியை ஏற்றிவிட்டு தலை குனிந்து, நிலை குலைந்து போய் நின்றான்.

பெரும் எடுப்பிலான எதிரியின் படையெடுப்புக்கு எமது மக்கள் கொடுத்த பெரும் தலையடி எமது இந்த இடம் பெயர்வு.

நாம் ஏற்கனவே சுதந்திரக் காற்றைச் சுவாசித்தவர்கள்– விடுதலை பிரதேசங்களில் எமது சொந்த நிர்வாகக் கட்டமைப்பில் வாழ்ந்தவர்கள்–இன்னுமொரு முறை அடிமை வாழ்வின் அலங்கோலங்களை அனுபவிக்க தயாரற்றவர்கள் – என்ற இறுமாப்பை மட்டும் நெஞ்சில் சுமந்தவர்களாக, பரம்பரை பரம்பரையாகத் தேடிய செல்வங்களையும், சுகங்களையும் உதறி எறிந்துவிட்டு இன்னுமொரு வாழ்வுக்கு முகம் கொடுக்கவென நெடும் பயணம் மேற்கொண்டவர்கள் – வலிகாமம் மக்கள்.

எனினும்–

எமது மக்களின் கால்களின் பித்த வெடிப்புகளில் படிந்த செம்மண் இன்னமும் தன் நிறத்தை இழக்கவில்லை. பாக்குநீரிணை ஓங்கி அடித்த உப்புக் காற்றின் உவர்ப்பு இன்னும் தேகங்களில் படிந்துதான் இருக்கிறது. சுண்ணாம்புக் கல்லில் ஊறிய குடி நீர் இன்னும் எமது மக்களின் குருதியில் குடிகொண்டுதான் இருக்கிறது.

ஓங்கி உயர்ந்த கல்விச்சாலைகள் எமக்கு ஓதிய கல்வி இன்னும் அதே நயத்துடன் எம் நாவில் தவழத்தான் செய்கிறது.

5 இலட்சம். உடல்கள்–

பாரம்பரிய மண்ணை பிரித்துவிட்டன. இதுவரை அவ்வுடல்கள் தாங்கி நின்ற மூச்சுக்காற்றுக்கள் இன்னும் அம்மண்ணில் தான் உலவுகின்றன.

ஆம்!

அங்கு மண், மனை, மா, பலா, தென்னை, தெரு ஆகியவை மட்டும் விடப்படவில்லை. இம்மண்ணின் குழந்தைகள் இம்மக்களின் இரத்தத்தின் இரத்தங்கள் இன்னமும் அங்குதான் நிற்கின்றன. அதனால் தான் எதிரி இறுமாப்புடன் எழுந்து நடமாட முடியாது தவிக்கின்றான்.

வீதிகள் வெடிக்கின்றன. காவலரண்கள் எரிகின்றன. ஏன் யாழ்ப்பாணத்துக் கறுத்தக் கொழும்பான் மாம்பழமும் சீறியெழுந்து எதிரியின் கையைத் தின்கிறது. கட்டிடங்களோ

நாம் ஒரு தேசிய இனம். எமக்கென்று ஒரு மொழி, ஒரு தேசம், ஒரு பொருண்மியம், ஒரு பண்பாடு எல்லாமே உண்டு.

ஆளும் இனங்களோ, அல்லது ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைத்து அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விடும் எந்தவொரு குழுவோ தேசிய இனங்களின் தனித்துவத்தைக் குலைப்பதில் என்றுமே நேரடியாகவோ மறைமுகமாகவோ தனிக்கவனம் செலுத்தி வந்துள்ளன. இனியும் செலுத்தத் தவறமாட்டா.

எமது மொழி என்றுமே எமது மக்களால் செழிப்புடனும், வளத்துடனும் பாதுகாக்கப்படும், வளர்க்கப்படும். அதில் எவ்விதமான பிரச்சனைகளும் எழ வாய்ப்பில்லை. அப்படி எழுந்தாலும் அதை வென்று முன்செல்லும் அறிவும் ஆற்றலும் எம்மிடம் உண்டு.

எமது பிரதேசத்தில் சில பகுதிகள் எதிரியின் ஆக்கிரமிப்புக் கரங்களால் கவியப்பட்டிருந்தபோதும், தமிழீழ மக்களும்– தமிழீழ மக்களின் முன்னணிப் படையான விடுதலைப் புலிகளும் வார்த்தைகளில் வடிக்க முடியாத தியாகங்களாலும், வீரத்தாலும் எதிரியை விரட்டியடித்து, எமது மண்மீது சுதந்திரக் காற்றை உலவ விடுவார்கள்.

ஆனால்–

எமது மக்களின் பொருண்மியம், எமது மக்களின் பண்பாடு என்பவற்றில் இப் புலப்பெயர்வு ஒரு தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

தமிழீழ மண்ணிலே சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கியதன் மூலம் எமது மண்ணை ஆக்கிரமித்தது சகலருமறிந்த ஒரு வரலாறு. அதே வேளையில் சிங்களவர், சோனகர், தமிழர் எனப் பல்வேறு கலாச்சாரங்களையும், பழக்க வழக்கங்களையும் கொண்ட மக்களை ஒரே இடத்தில் குடியேற்றுவதன் மூலம் பெரிய இனத்தின் பழக்க வழக்கங்கள் சிறிய இன மக்கள் மீது ஊடுருவி ஆதிக்கம் பெற்று ஒரு உதிரிப் பண்பாடு தோன்றியதை தமிழீழ எல்லைப் புறங்களில் நாம் அவதானிக்க முடியும்.

இது ஆளுங்கூட்டத்தினால் சிறிய இனங்களின் தனித்துவத்தை மழுங்கடிப்பதற்காகச் செய்யப்பட்ட திட்டமிட்ட சதியாகும்.

ஆனால், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் எழுச்சியும், வலுவும் இத்தகைய ஆபத்து மேலும் வளராமல் தடுத்து விட்டது. இதனால் சிங்களப் பேரினவாதிகளின் மறைமுகமான ஆக்கிரமிப்பு முறியடிக்கப்பட்டு ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் வெளிப்படையாகவே முன்னெடுக்கப்பட வேண்டிய நிலை தோன்றியது.

ஆனால், இன்று இப்புலப்பெயர்வு வலிகாம மண்ணில் தனித்துவமான ஒரு வாழ்வை மேற்கொண்டிருந்த மக்களை வித்தியாசமான ஒரு சூழ்நிலையை நோக்கித் தள்ளி விட்டிருக்கின்றது. கிணற்றடி வேலியில் இரண்டு கிடுகு கழன்று விழுந்து விட்டால் குளிக்க மறுத்த இளம் பெண், நீராட இன்று தெருக்கரை வாய்க்காலுக்குத் தள்ளப்பட்டு விட்டாள். ஒரு தனி மனிதனின் பழக்க வழக்கத்திலிருந்து வாழ் நிலைவரை அத்தனைக்கும் ஊரே கண்காணிப்பாளனாக, நீதிபதியாக, வழிகாட்டியாகத் திகழும் ஒரு அற்புதமான

விவசாயம் செய்யச் செய்ய வளமேறி பொன்னாக மாறும் செம்மண் பூமி. இடப்படும் பசளையைக் கீழிறங்க விடாத சுண்ணாம்புக்கல் படிவம் அந்த மண்ணுக்குக் கீழே இம்மண்ணில் மிளகாயும், வெண்டியும், கத்தரியும், புகையிலையும், வாழையும், பொன்னையும்–பொருளையும் அள்ளி அள்ளித் தந்தன– யாழ்ப்பாண விவசாயியின் கடும் உழைப்புடன் கைகோர்த்து நின்று என்றும் இளமையுடன் இம்மண் திகழ்ந்தது.

ஆனால் வன்னியிலோ–

பரந்த வயல் வெளிகள், ஏக்கர் கணக்கான புன்செய் நிலங்கள், பசளையின் பலனை பயிர் முழுமையாகப் பெற்றுக் கொடுக்க முடியாத மண். நிறைவோடு அருவிகளாய் என்றும் நீரோடும் வாய்க்கால்கள், காடும் காடு சார்ந்த சூழலும் என வித்தியாசமான ஒரு சூழ்நிலை.

கைத் தீனூட்டிக் கூடு கட்டிக் கால்நடை வளர்த்த வலிகாமம் மக்களுக்குத் தெருத் தெருவாய்த் திரிந்தலையும் ஆவினங்கள் ஒரு ஆச்சரியம்!

நகரும், நகர் சூழ்ந்த தொழில்களும் பல்கிப் பெருகிய வலிகாமம் மண்ணை விட்டு வந்த மக்களுக்கு கிராமங்களும் கிராமங்களின் தேவைகளை ஒட்டி உருவான சிறு நகரங்களும் வித்தியாசமான தோற்றத்தை மட்டுமின்றி– புதிய சூழ்நிலையையும் தோற்றுவிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மயிலிட்டிக் குடாக்கடலும், காரைநகர் பரவைக் கடலும் தலை வணங்கித் தொழில் கொடுத்த எமது மீனவர்களுக்கு சுண்டிக்குளமும், பொக்கணையும், விடத்தல் தீவும் வலைப்பாடும் போதுமானதல்ல.

எனவே–

உறுதிப்பட்டிருந்த, செழிப்பாயிருந்த எமது பொருண்மிய வாழ்வு குழப்பமடைய, ஊசலாட்டம் காண நிறையவே காரணங்கள் உண்டு.

இந்தப் புலப்பெயர்வு எமது கலாச்சார வாழ்வு, எமது பொருண்மிய வாழ்வு என்பவற்றை ஆட்டம் காண வைக்கவும், சீரழிய வைக்கவும் முனைப்புடன் காத்திருக்கிறது. ஒரு தேசிய இனத்தின் கலாச்சாரப் பிறழ்ச்சியும், பொருண்மிய பின்னடைவும் என்றும் எதிரிக்கும், அடக்கு முறையாளனுக்கும் சாதகமாகவே அமையும். எதிரியின் உள்ளார்ந்த இலக்குகளில் அதுவும் ஒன்றே.

இங்குதான் தமிழீழ மக்களின் கடமை எதுவென்ற கேள்வி எழுகின்றது. காலம் காலமாக நாம் கட்டி வளர்த்த பண்பாட்டைப் பேணி வளர்த்து, எமது ஈடாடிப்போன பொருண்மிய வாழ்வை மீண்டும் உறுதிப்படுத்தி வாழப்போகிறோமா? அல்லது வெறும் உதிரிகளாக, இலக்கற்ற, ஒரு இலட்சியப் பிடிப்பற்ற மக்களாக மாறப்போகிறோமா?

இதுவரை இருந்த வாழ்வு சிதைந்துவிட்டது என்பது உண்மைதான்! இச்சிதைவை வாழ்வாக ஏற்கப்போகிறோமா? அல்லது இச்சிதைவின் இடிபாடுகளிலிருந்து ஒரு புதிய வாழ்வை உருவாக்கப்போகிறோமா?

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒரு கடிதம்

திருமதி. சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கா

ஜனாதிபதி செயலகம்

கொழும்பு

அம்மணி!

மௌனம் கலைந்த தமிழ்க் குடிமகன் எழுதும் மடல்.

வணக்கம்,

தமிழ்க குடிமக்கள் தமது மௌனத்தைக கலைத்து, பயங்கரவாத அரசியலுக்கு எதிரான கருத்துக்களை முன்வைக்கவேண்டுமென தாங்கள் கேட்டுக் கொண்டிருந்தீர்கள். ரூபவாக-னியைப் பார்க்கவோ வானொலியைக் கேட்கவோ வாய்ப்பு அற்றிருக்கும் பல இலட்சக்கணக்கான தமிழ் மக்களில் ஒருவனாக இருந்து இம் மடலை எழுதுகின்றேன். இக் கடிதம் தங்கள் கவனத்தைக் கவருமோ அல்லது குப்பைக்கூடையில் இடம்பிடிக்குமோ? என்பதும் அறியேன். எனினும் தமிழ் மக்களின் குரலை செவிமடுக்கத் தயாராக இருப்பதான உங்கள் நிலையைக் கேள்விப்பட்டு, உங்களுக்கு இந்த மடலை எழுதத் துணிந்தேன் என்பதை முதலில் சொல்லிவைக்க ஆசைப்படுகிறேன்.

மேலும் மௌனம் விலக......... மௌனம் சம்மதத்தின் அறிகுறி என்பன போன்ற சொற்றொடர்கள் தமிழ் மக்கள் மத்தியில் நீண்டகாலமாகவே புழக்கத்தில் இருப்பது உங்களுக்குத் தெரியாது! இருக்கட்டும். ஆனால் தமிழ் மக்கள் எப்போதும் மௌனமாக இருந்ததில்லை. ஆனால் அவர்களது குரல் செவிமடுக்கவில்லை என்பதுதான் உண்மை.

1977 பொதுத்தேர்தலிலும் அதற்குப் பின்னர் நடந்த ஒவ்வொரு தேர்தலிலும் குறிப்பாக 1989 இல் இந்திய இராணுவத்தின் நுகத்தடியின் தலைமீடும் கீழே தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியாக வெளிப்படுத்திய உணர்வுகள் கொழும்பு ஆட்சியாளர்கள் தொடர்ந்து புறக்கணித்துவந்தனர் என்பதே உண்மையாகும்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக வாக்குச் சீட்டுக்களே இல்லாமல் (ஏழவந றவைா ழநெ கநயவ) வலிகாமத்திலிருந்து மக்கள் வெளியேறியபோது சாதாரண தமிழ் மக்களின் உள்ளத்து உணர்வுகள் புரிந்துகொள்ளப்பட்டிருக்கவேண்டும். தமிழ் மக்களின் குரலுக்கு செவிமடுப்பதோ செயல்பாடுகளின் அரசியல் அர்த்தங்கள் புரிந்துகொள்ளப்படவோ முடியாத நிலையில் உங்களுக்கு விருப்பமானதை மட்டும் தமிழ் மக்கள் சொல்ல வேண்டும் அல்லது செய்ய வேண்டும் என்று எதிர்பார்ப்பது எந்தவகையில் நியாயமானது ஆகும். தவிரவும் உண்மையில் கூட்டத்தில் உளறுவாயன் கெட்டிக்காரன் என்பது போல உங்களுக்கு வசதியும் வாய்ப்புக்களும் இருப்பதால்மட்டும் நீங்கள் கூறுவது அனைத்தும் நியாயம் என்று அர்த்தப்படுத்திக் கொள்ளலாமா?.

நிற்க,

பௌத்த சிங்கள மேலாண்மைக்கு முன்னுரிமை கொடுக்கக்கோரும் சிங்கள இனவெறியரின் குரலுக்கும், யுத்தத்தின் மூலம் தமிழ் மக்களை அடக்க எத்தனிக்கும் யுத்த வெறியர்களுக்கும் எதிர்ப்புத் தெரிவித்ததை உங்களது நிலை மௌனத்தின் மூலம் ஆதரவு காட்டுகிறீர்கள் என்றே தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டியதாக உள்ளது. இதைத் தவிர எம்பிலிப்பிட்டியவிலும் சூரியகந்ததலிலும் புதைகுழியில் எலும்புகள் எடுத்து.... அரசியல் செய்த நீங்களும் உங்களது அரசும் படையினரைப் பாராட்டும் ஒவ்வொரு சந்தர்ப்பமும்.... குறிப்பாக மனித உரிமைகள் விடயத்தில் தமிழ் மக்களை ஒவ்வொரு ........ உள்ளாக்குகின்றது. குறிப்பாக 1979 முதல் இராணுவ நுகத்தடிக்குக் கீழ் அவசரகால ஆட்சிக்கு உட்பட்டு வாழும் தமிழ் மக்களுக்கு தங்கள் வருகை விமோசனம் தரும் என எதிர்பார்க்கப்பட்டது.... ஆனால் தமிழ் மக்களின் குருதிச்சேற்றில் வெண்தாமரையை முளைக்கவைக்க தாங்கள் முயற்சி எடுக்கிறீர்கள். போர் என்றால் போர் என்று சவால் விட்டபோதும், சமாதானத்துக்கான யுத்தம் என்று முக்காடு போட்டுக்கொள்ளும் போதும் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்களாகத்தான் இருக்கின்றனர்.

பேரினவாத புகைமூட்டங்களைக் கடந்து இந்த உண்மை உங்களது கண்களுக்குப் புலப்படவில்லையானால் பழிக்குப்பழி வாங்கவேண்டும் என்ற உணர்வுதான் தமிழர்களுக்கு மிஞ்சும். இதே வகை உணர்வு பரவுவது புரையோடிப்போன இனவாதப் புண்ணுக்கு மருந்து தடவ ஒரு போதும் உதவாது.

எனவே சமாதானப் புறாவாக அரசியல் வானில் சிறகடிக்க வேண்டும் என்ற ஆசை உங்களது அடிமனதில் இருக்குமாயின் யுத்தத்தின் சத்தங்களுக்கு முடிவு கட்டும் வகையில் முயற்சி எடுங்கள். அப்பாக்களை இழந்த குழந்தைகளின் அழுகைக்குரலும், கணவர்களை இழந்த கைம் பெண்களின் கவலையும், அங்கவீனமான மனிதர்களின் சோகமும் உங்கள் மேலான கவனத்தைச் சேர்ப்பது உண்மையாயின் எறிகணை வீச்சுக்களும், விமானத் தாக்குதலும் இனிமேலும் இடம்பெறாது என்று நம்புகின்றேன். விடுதலைப்புலிகளையும் தமிழ் மக்களையும் வெவ்வேறாகப் பிரிக்கும் முயற்சி, பாலுக்குள் கலந்த நீரை வேறாக்குவதற்கு ஒப்பானதாகும் என்பதை தங்களது பாரிஸ் படிப்பு உணர்த்தாமல் விட்டது எமக்கு வியப்பாகத்தான் இருக்கின்றது. பௌத்த சிங்களத்தின் மேலாதிக்கத்தை 'நிலைநாட்டும் முயற்சிக்கு எதிராகப் போர்தொடுத்தும், தமிழ் மக்களின் நியாயமான உணர்வுகளை மதிக்கும் பாதையில் நீங்கள் முதல் காலடியை உறுதியாக எடுத்துவைக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்புப் பொய்யாகாமல் இருக்குமாயின் இலங்கைத்தீவு இராச்சியங்களுக்கு முக்கியமாக விளங்கக் கூடும்.

வணக்கம்

நன்றி

சூரியக்கதிரின் வெப்பம் தாங்காமல் இடம்பெயர்ந்த தமிழ்க் குடிமகன்.

# மாபெரும் மனிதச் சங்கிலிப் போராட்டம்

மாபெரும் மனித சங்கிலிப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையின் முழுவிபரம் வருமாறு:

சிறிலங்காவில் உள்ள தமிழர்கள் ஒரு சிறுபான்மையினத்தினைச் சேர்ந்தவர்கள் அல்லர். தமிழர்களாகிய நாம் வரலாற்றிக்கு முற்பட்ட காலத்தில் இருந்த தனித்துவம் மிக்க ஒரு தேசிய இனமாக தனியாட்சி செய்து எமது பாரம்பரியப் பிரதேசத்தில் எமது கலை பண்பாட்டுக்களைப் பேணி வந்திருக்கின்றோம். கல்வியிலும், கலைவளர்ப்பதிலும் எமது மக்கள் உலகத்தமிழினத்துக்கு முன் உதாரணமாக திகழ்ந்து வந்திருக்கின்றார்கள். எமது பிரதேசங்களையும் பண்பாட்டுச் சின்னங்களையும் மொழியுரிமைகளையும் எமது இனத்தின் சுயநிர்ணய உரிமைகளையும் பேணிக்காப்பதோடு அவற்றிற்கு இடுக்கன் வரும்போது திரண்டு எழுந்து அவை அழிந்து போகாமல் தடுப்பது எமது தலையாய பொறுப்பும் கடமையும் ஆகும்.

இந்த வகையில் சுதந்திரத்திற்கு முன்பும், பின்பும் எமது தனித்துவத்தைப் பேணி இந்த நாட்டிலுள்ள ஏனைய இனத்தவரோடு சரிநிகர் சமமாக வாழ்வதற்கான எத்தனங்களைச் செய்து வந்திருக்கின்றோம். சுதந்திரத்திற்குப் பின்னர் படிப்படியாக வந்த ஆட்சியாளர்கள் எமது சுதந்திரத்தைப் பாதிக்கும் வகையில் இன, மொழி, கலை பண்பாட்டு ரீதியான பல வகைகளிலும் எமது உரிமைகளைப் புறக்கணித்து வந்துள்ளனர். இதனால் எமது பாரம்பரியப் பிரதேசங்களை இழந்தோம். இனரீதியாகவும், மொழி ரீதியாகவும், கல்வியிலும், தொழில் வாய்ப்புக்களிலும் நாம் பின்தள்ளப்பட்டோம். இதன் காரணமாக பாராளுமன்ற சனநாயகமுறையில் நாங்கள் எங்கள் மனத்தாக்கங்களை அரசபீடத்தில் அமர்ந்தவர்களுக்கு இடித்துரைத்தோம். தார்மீக முறையில், இழந்த எமது உரிமைகளை மீட்டெடுப்பதற்காக போராடினோம். ஒன்றும் பயனளிக்காததினாலேயே ஆயுதப் போராட்டம் மூலம் எமது உரிமையை வென்றெடுப்பதற்கான போரும் முனைப்புப் பெற்றது. இந்தப் போராட்ட வளர்ச்சியானது பிரமிக்கத்தக்க வளர்ச்சி பெற்று அரசை ஈடாட்டம் காணச் செய்திருக்கின்றது. இன உரிமைக்கான இப் போராட்டத்தினைப் 'பயங்கரவாதம்' என்ற பெயரில் உலக அரங்கிலே தனது அரச பயங்கரவாதத்தை மூடிமறைக்கக் கங்கனம் கட்டி நிற்கின்றது சிறிலங்கா அரசு. பாராளுமன்றத் தேர்தல் என்ற ஒரு போலித் தேர்தலை, தமிழ் பகுதிகளிலே உள்ள இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் நடாத்திக் குறைந்த வீதத்திலான தமிழர்கள் வாக்குகளை– இராணுவ அச்சுறுத்தல்களின் உதவியுடன் பெற்று, தமிழர் சிலரை வைத்து அவர்களை தமிழர்களின் பிரதிநிதிகள் என்ற மாயையைக் காட்டிவரும் சிறிலங்கா அரசு ஒரு தொங்கும் பாராளுமன்றத்தை நடாத்திக் கொண்டு இருக்கின்றது.

அல்லலுறும் தமிழர்களின் வாக்குப் பலத்தால் சனாதிபதியாக சந்திரிகா அம்மையார் பதவியேற்ற பின்னர் கொடுத்த வாக்குறுதிகளை காற்றிலே பறக்கவிட்டு இராணுவப் பலத்தால் தமிழ் மக்களின் மீதி உடமைகளைப் பறித்து எம்மை ஏதிலிகளாக்கியுள்ளார். தொடர்ந்து தமது இராணுவ பலத்தினால் எம் மக்களை மேலும் துன்பப்படுத்த கங்கணம் கட்டி நிற்கின்றார். தீர்வுத் திட்டப் பொதி என்ற இப்பொதியை இடது கையாலும், 'போரின் மூலம் சமாதானம்' என்று பெறமுடியாத முரட்டுப் பிடியை வலது கையாலும் வைத்துப் பிடித்துக் கொண்டு இரட்டை வேடம் போடும் அரசியல் வேடதாரியாக நாடகம் ஆடிக் கொண்டிருக்கின்றார். பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்பது போன்று ஏமாற்று வித்தைகளைக் காட்டுகின்றார்.

கொழும்பையே வாழ்விடமாகவும் கும்பிட்டு வாங்குவதையே வாழ்வதையே ஒரு பொழுதுபோக்காகக் கொண்டு சந்தர்ப்பவாத அரசியல் நடத்தும் தமிழ் குழுக்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் தமது அரசியல் எதிர்காலத்திற்காக பிச்சைப் பாத்திரம் கொண்டு புத்த பீடங்களிலும் வெளிநாட்டுத் தூதரகங்களிடமும் கையேந்தித் திரிகின்றார்கள். அரசியல் சதுரங்கமாடிக் கொண்டிருக்கும் இந்தியா, சிறிலங்கா மூட்டும் அரச பயங்கரவாதத்திற்கு எண்ணையூற்றிக் கொண்டிருக்கிறது. இங்கு நடப்பது உள்நாட்டுப் பிரச்சினை என்ற பொய்யான அபிப்பிராயத்தைப் பிறநாடுகளுக்குக் காட்டி வெளியுலகின் தலையீட்டைத் தடுப்பதற்கு அரசு பகீரத பிரயத்தனம் செய்துள்ளது. அதற்கு மேலாக தென்னிலங்கையில் நடைபெறும் வன்முறை அரசியலும், குடும்ப அரசியலும், பௌத்த பேரினவாத அமைப்புக்களும், இனவெறி பேசும் அமைப்புக்களும் இங்கு வாழ்கின்ற தமிழினத்தையே பூண்டோடு அழித்து விடவேண்டும் என்ற போக்கு வலுவடைந்து வருகின்றது. இதனால் தமிழின அழிப்பு என்ற சிங்கள இராணுவ வல்லாதிக்கப் பூதம் எமது தலைவாசல் வரை வந்துவிட்டது. இந்த ஆதிக்க பயங்கர இராணுவத்தின் பிடியில் இருந்து விடுபட தமிழ் மக்கள் தமது நிலைப்பாட்டை கருத்துக் கணிப்பு ஒன்றின் மூலம் அனைத்துலகத்திற்கும் தெரியப்படுத்த வேண்டியது அனைவரது கட்டாயக் கடமையாகும். அதற்காக வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தினர் கருத்துக் கணிப்பு ஒன்றைக் கையொப்ப வடிவில் பெறுவதற்கும் அதை தமிழ் மக்களின் சுயமான வாக்களிப்பாகக் கருதி சிறிலங்கா சனாதிபதிக்கும், ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர் நாயகத்திற்கும் ஏனைய அனைத்துலக அமைப்புக்களுக்கும் அனுப்பி மக்களின் அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படுத்தவுள்ளனர். இந்த செயற்பாட்டில் 100க்கு மேற்பட்ட பொதுசன அமைப்புக்கள் இணைந்துள்ளன. இந்தக் கருத்துக் கணிப்பு கையெழுத்து சேகரிப்புக்கு முன்னோடியாக மனிதச் சங்கிலிப் போராட்டம் ஒன்றை வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் நடத்துகின்றது.

சுதந்திரமான, ஒரு தேசிய இனமாக சுயநிர்ணய உரிமையோடு இந்த நாட்டில் வாழவேண்டிய தமிழர் அதி பயங்கர இராணுவச் சங்கிலித் தொடரால் குழப்பப்பட்டுள்ளனர். இதன் துன்பம் – பொறுக்க முடியாத அளவிற்கு மக்களை அன்றாடம் நெருக்கி ரசித்து வருகின்றது. இங்கு வாழும் மக்கள் இராணுவக் கொடுமையினாலும் கெடுபிடிகளினாலும் மேலும் அல்லல்பட்டு– அநாதியாய்– அகதிகளாய் அங்கலாய்பதற்கு முன்னர் இப்படியான சங்கிலித் தொடர் போராட்டம் மூலமும், கையொப்ப போராட்ட மூலமும் அனைத்தும் அனைத்துலகிற்கு தெரிவிக்க ஒருமித்தும், தனித்தும் உணர்வுபூர்வமாகவும் செயல்பட வேண்டும். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விமான்கள், கல்விப் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து நிறுவனங்களின் அதிகாரிகள், ஆலோசகர்கள், பாடசாலை அதிபர்கள், கல்வித் துணைச் சேவை அமைப்புக்கள், கல்வி சார் தொழிற்சங்கங்கள் ஏனையோருடன் சேர்ந்து இங்கு நடப்பதை வெளிக்கொணர அனைத்து முயற்ச்சிகளும் செய்ய வேண்டுமென தமிழீழக் கல்விப் பேரவை வேண்டிக்கொள்கின்றது. இங்கு மழைபோல் பொழியும் குண்டுகளாலும் தீயாக்கிக் கருக்கும் எரிகுண்டுகளாலும் பட்ட துயரை நினைவில் கொண்டு வெய்யிலையும் மழையையும் பொருட்படுத்தாது போராட்டம் பூரண வெற்றி பெற ஒத்துழைக்க வேண்டுகின்றோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நிர்மூலமாகும் உணர்வுகள்

‘ஹாய்...! அண்ணா வந்துவிட்டார்..... ச்சு... எத்தினை நாளைக்குப் பிறகு.... ஆ...”

ஆம்.....! நீண்ட நாட்களின் பின் வீட்டிற்கு வந்த அண்ணனைக் கண்டதும், யசோதாவுக்கு உடலெல்லாம் மின்சாரம் பாய்ந்தது போல் மகிழ்ச்சியில் துள்ளிக் கொண்டிருந்தாள். பதினெட்டு வயது நிரம்பிய யசோதா, வல்வெட்டித்துறையில் சடையப்பு வைரவர் கோயிலின் எதிரிலுள்ள வீட்டில் தன் தாய் தந்தையருடன் வசித்து வருகிறாள்.

மண் மீட்கப் புறப்பட்ட போராளிகளில் ஒருவனாக, அவளுடைய அண்ணன், வன்னிக்குச் சென்றதில் சில வருடங்களாக அவனுடைய முகத்தைக் காணாது இருந்ததில் யசோதாவுக்கு ஏதோ மாதிரி இருந்தது. இவ்வளவு நாட்களுக்குப் பிறகு விடுமுறையில் வந்த அண்ணனைக் கண்டதும் அவளுடைய மகிழ்ச்சி தலைகால் புரியாதிருந்தது.

மகனைக் கண்ட ஆனந்தத்தில் அவனுடைய தாய் இயந்திரம்போல் செயல்படத் தொடங்கிவிட்டாள்... ஆம்...! வறுமையிலும் செம்மையாக வாழும் அந்தக் குடும்பத்தில் அவன்தான் மூத்த பிள்ளை...! அவனுக்கு அடுத்துப் பிறந்தவள்தான் யசோதா.

1996ம் ஆண்டு சனவரி 16ம் நாள்.....!

அன்று காலையில் இருந்தே அந்த வீடு கலகலப்பாக இருந்தது...!

“எடேய்..! தம்பி...! வன்னியிலை எப்படியடா புதினம்...?”

தாய் ஆதங்கத்தில் அவனைச் சுற்றிச் சுற்றி வந்து கேள்விகள் கேட்டுத் துளாவிக் கொண்டே இருந்தாள்.

யசோதா அன்றைய காலைச் சாப்பாட்டைப் பற்றிச் சூசகமாக உணர்த்தியதும், தாய் ஓடிச் சென்று அன்றைய சமையல் வேலையைப் பார்க்கத் தொடங்கினாள்.

“பிள்ளை...! யசோ...! கொண்ணனுக்கு இடியப்பம் அவிச்சு முட்டைக்கறி கொடுப்பம்...”

முட்டை இல்லை.

“அம்மா...! இதிலை தானே சந்தையிலை போய் நானே வாங்கிவாறன்...”

நீண்ட நாட்களின் பின் அண்ணனுக்குச் சுவையாகச் சமைத்துக் கொடுக்க வேண்டுமே என்ற ஆவலில் சில்லறைக் காசுகளைப் பொறுக்கி எடுத்துக்கொண்டு கடைத் தெருவை நோக்கி ஓடினாள்.

அந்தப் பொழுது விடிந்து சலசலப்பான காலை நேரம்...! வல்வெட்டித்துறைச் சந்திப் பக்கம் வழமைபோல் சன நடமாட்டம் அதிகமாகவே இருந்தது.

சைக்கிள்களிலும், மோட்டார் சைக்கிள்களிலும் பறந்து செல்லும் மீன் வியாபாரிகள் ஒரு புறம்....!

‘கலைச்சோலை’யில் பத்திரிகைகள் வாங்குவதற்காக விழுந்தடித்துச் செல்லும் மக்கள் ஒருபுறம்....!

காலை பஸ் வண்டிக்காகக் காத்திருப்பவர்கள்....!

சந்தை வியாபாரிகள்....!இப்படியே அந்தச் சந்தியும் நவீன சந்தைப் பகுதியும் ஒரே சலசலப்பாக இருந்தது.

‘கூய்ங்’ திடீரென்று யாருமே எதிர்பார்த்திராத வேளையில் பலாலியிலிருந்து பேரிரைச்சலுடன் கூவிக்கொண்டு வந்த ஆட்டிலறி எறிகணை அடுத்தடுத்து நவீன சந்தையின் முன்னால் வந்து பலத்த சத்தத்துடன் விழுந்து வெடித்தது....!

“ஐயோ..! அம்மா...! அந்த ஒரு கணத்தில் எங்கும் மரண ஓலம். அந்த நகரத்தையே அதிர வைத்தது. கடைக்கு வந்தவர்களும், பத்திரிகை வாங்க வந்தவர்களும் நாலாபுறமும் அலறிப் புடைத்தபடி சிதறி ஓடிக் கொண்டிருந்தார்கள்.

சந்தையின் முன்னாலுள்ள கடைகள் வெடித்துச் சிதறியது. அங்கே இரத்த வெள்ளத்தில் துடித்துக் கொண்டிருந்தவர்களின் மரணஓலம், அந்தப் பிரதேசத்தையே சூனியமாக்கியது. தெருவின் குழிகளிலும், சுவர்களிலும் இரத்தமும், தசைகளும் சிதறிப்பாய்ந்து ஒட்டிக் கிடந்தன.

அங்கே ஒரு வயோதிபரினதும், சிறுமியினதும் உடல்கள் உருக்குலைந்து சிதறி அடையாளம் தெரியாமல் கிடந்தன. அப்பொழுதுதான் கடையில் இருந்து திரும்பிய யசோதா சிறிது தூரம் சென்றிருப்பாள்.. வயிற்றில் ஏதோ கிறுக்கியது போல் இருந்தது.

“அம்மா...!”

அவள் ஒருமுறை அலறினாள்.. மெதுவாக நடந்து கொண்டே சென்ற யசோதாவினால் தொடர்ந்தும் கால் அடி எடுத்து வைக்க முடியவில்லை...கண்கள் இருண்டு கொண்டு வந்தன... வயிற்றில் இருந்து குருதி ஆறாகப் பெருகிக் கொண்டிருந்தது...?

“ஐயோ...! அம்மா...! அண்ணா...!”

தன் அண்ணனின் ஆசைகளை நெஞ்சில் சுமந்து கொண்டுவந்த யசோதாவின் உடல் மெல்ல மெல்ல அந்த மண்ணிலே சரிகிறது. ஆம். சிங்கள ஏவல்நாய்களின் கொடூரத்தினால், அவளது ஆசைகள், ஏக்கங்கள் அனைத்தும் நிராசையாகிப்போன நிலையில் அந்த மண்ணிலே அவளது உணர்வற்றுப் போன உடல் இரத்த வெள்ளத்தில் மிதக்கிறது!

# ஓராயிரம் ஆண்டு ஓடி இளைத்த பின் வாராது வந்த மாமணி

ஈழத் தமிழினம் அரசியலிலும் பதவி சமூக அந்தஸ்திலும் அடைந்திருந்த செல்வாக்கு, சிங்களப் புத்தி ஜீவிகளிடத்தும் புத்தமதக் குருமாரிடத்தும் காழ்ப்புணர்ச்சியை வளர்த்தது. சிறுதொகை மக்களினம் பெரும்பான்மை மக்களினத்தைவிட அதிக அளவு உத்தியோகங்களை அடைந்திருப்பதைக் கண்டு எழுங் காழ்ப்புணர்ச்சி இயல்பானதே. எனினும் ஈழத்தின் சுதந்திரம் சிங்கள மக்களிடத்தில் தமிழ் இன அழிப்பென்ற பயங்கரத்தை ஏற்படுத்தும் என்று அந்நேரம் எவராலும் உணர்ந்து கொள்ளமுடியவில்லை. இதற்கு அக்காலத் தமிழர் தலைமைகள் கொழும்பையே மையமாகக் கொண்டு தத்தம் அறிவுத் திறமையில் சிக்குண்டு மயங்கிக் கிடக்க அவர்களாற் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட ஏழைத் தமிழ்க் கிராம மக்கள் நடப்பவைகளை அறியாது தலைவர்களின் சொற்சிலம்ப விளையாட்டுக்களைக் கேட்டுக் களிக்க, சிங்களத் தலைமை தமிழ் இன ஒழிப்பிற்கான சூழ்ச்சித் திட்டங்களைக் கச்சிதமாக நிறைவேற்றிவிட்டது.

இத்திட்டங்களின் முதற் செயற்பாடே இந்திய–இலங்கைக் குடியுரிமைச் சட்டமும் பிரஜாவுரிமைச் சட்டமும். இச் சட்ட ஆக்கங்கள் ஈழத் தமிழரிடத்தில் அதிகளவு மனப் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. ஐம்பதுக்கைம்பது சமபல பிரதிநிதித்துவம் கேட்ட தமிழர்கள், உள்ள பிரதிநிதித்துவத்தையே அரைவாசிக்குக் குறைக்கும் சட்டங்களுக்கு ஒப்புதல் வாக்களித்து வந்த பின்னும், யாழ்ப்பாணத்தில் பெரும்பான்மை பெற்றது யாழ்ப்பாண மக்களின் அன்றைய சிந்தனைக்கு ஒரு எடுத்துக் காட்டு.

இதே நேரத்தில் சிங்களத் தலைமை கிழக்கு மாகாணத்துப் பட்டிப்பளை ஆற்றினை நீர்த் தேக்கமாக்கிச் சிங்களக் குடியேற்றக் கிராமங்களாக மாற்ற ஒத்துழைத்த தமிழ்த் தலைமைகளின் புத்திக் கூர்மையை மெச்சுவதா அல்லது அவர்களின் கையாலாகாத் தனத்துக்காக வருந்துவதா?

**உலகத் தமிழினத்தின் ஒளிச் சுடராக வழிகாட்டிக் கொண்டு ஈழத் தமிழர்களின் உயிராக உந்து சக்தியாகப் பிரபாகரன் வழி நடத்துகிறார். அவரது தன் நலம் அறவே தொலைந்த தியாக நெஞ்சும், சொல்வதையே செய்யும் நேர்மை உறுதியும் இடுக்கண் கண்டு நகும் மனப் பக்குவமும் எம்மை எல்லாம் உய்விக்கும்.**

**ஓராயிரம் ஆண்டு ஓடி இளைத்த பின் வாராது வந்த பிரபாகரனின் ஆணையில் நின்று, அவர் காட்டும் மனிதப் போராட்டத்தில் இணைந்து உழைத்து விடுதலை பெறுதல் இன்றுள்ள ஈழத் தமிழர் எமது கடனாகும்.**

அடுத்து வந்தது சிங்களம் மட்டும் சட்டம். மலைநாட்டைப் பிடித்து மட்டக்களப்பைப் பிடித்து யாழ்ப்பாணத் தமிழர்களின் உத்தியோகத்தில் கைவைத்தபோதுதான் முற்றும் தம் சுயநலமே சிந்திக்கும் யாழ்ப்பாணத் தமிழருக்குச் சூடு பிறந்தது. பிறருக்குக் கடித்தபோது காவல் நாய் என்று சொன்னவர்கள், தமக்கு கடித்த போதுதான் இது காவல் நாயல்ல வெறிநாய் என்று கண்டு கொண்டவர்கள் போலக் குரல் வைத்து, கூப்பாடு போட்டுக் கொக்கரித்தார்கள். இவற்றினைத் தொடர்ந்து ஹர்த்தால் கடையடைப்பு, ஊர்வலம், உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம், சட்டமறுப்பு, இத்தியாதிக் கெடுபிடிகள், சமத்துவம், சமஷ்டி, தமிழரசு, தனி அரசுக் கோரிக்கைகள் என்று பல, தேர்தல் நெருங்கும்போது அமளியாகி விறுவிறுப்பாகித் தேர்தலின் பின் பிசு பிசுத்துப்போன ஆண்டுகள் பல.

இந்த நிலைபரத்திலேதான் நாம் எடுத்துக் கொண்ட விடயத்துக்கு வருகிறோம். இது வரை மேல் மட்டப் பேச்சுக்களோடு முடிந்த தமிழரின் அரசியல், ஈழத்தின் தனிச் சிங்களச் சட்டம் அமுல் படுத்தலுடன் நடுத்தர, அடிமட்ட மக்களிடத்திலும் வேர்விட்டு உணர்வு பூர்வமான போராட்ட வடிவம் பெற்றது. இதன் உச்சநிலையாகத் தரப்படுத்தலும் அதன் பிரதிபலிப்பாகத் தமிழ் இளைஞர்களின் இயக்கங்களும் பெருகின.

தமிழர்களின் அரசியல் விழிப்புணர்வு பெருந்தலைவர்களைப் புறந்தள்ளி, இளைஞர் சமுதாயத்தின் தலைமையையும் வழிகாட்டலையும் விரும்பி நின்றவேளையில், கரந்துறையும் மாமேதைகளின் வரிசையில் தோன்றி தன்நிகரில்லாத் தியாகத்தாலும் மன உறுதியாலும், சூழ்ச்சிகளற்ற அப்பட்டமான வெள்ளைமனப் போக்குள்ள அரசியற் செந்நெறியாலும் முன்னணிக்கு வந்தவர் இன்றைய தலைவர் வேலுப்பிள்ளை பிரபா–கரன் என்பதில் இம்மியும் தவறில்லை.

அவரது ஆற்றல் திக்கிற்கு ஒன்றாக வக்கரித்து நிற்கும் தமிழர் இயக்கங்களை ஒடுக்கி ஒன்றாக்கியது. தமிழர் வேண்டுவது மாநில ஆட்சியுமல்ல கூட்டாட்சியுமல்ல. தமிழர் தாகம் தமிழீழத் தாயகமே என்ற முழக்கத்தோடு அதற்கான முயற்சியில் பல்லாயிரம் இளைஞர்களின் ஒத்துழைப்போடு போராடுகிறது.

ஈழத்தில் இனப்பிரச்சினை முடிந்தது என்ற சிங்கள ஆட்சிக்கு இடியேறு போன்றது பிரபாகரனின் தமிழீழ முழக்கம், எத்தனையோ பேர், எவ்வளவோ இழப்பு, எல்லாவற்றிற்கும் முகங்கொடுத்து ஈற்றில் தமிழீழச் சுதந்திரத்தை நாட்டும் துடிப்புள்ளவர்களாக நாட்டு மக்களை ஆக்கித் தம் பக்கம் அணைத்துக் கொண்டது பிரபாகரனின் செங்கை.

இன்று பிரபாகரனின் ஆணை கேட்டு ஐந்து இலட்சம் தமிழர்கள் வீடிழந்து, மாடிழந்து, வாழ்ந்த நாடிழந்த ஏதிலிகளாக இடம் பெயர்ந்தார்களென்றால் அவ்வார்த்தையின் மகிமை உணர்த்தவோ உரைக்கவோ கூடியதல்ல. பல்லாயிரம் மக்களின் உயிர் அவ்வார்த்தை ஒன்றினால் பாதுகாக்கப்பட்டுள்ளதென்பதை உணர்வோர் உணரக் கடவர்.

பஞ்சம் பசி நோய் பட்டினிச் சாவு பாலர் மரணம் இத்தனையுந் தாங்கி ஏதிலிகளாய் இடம் பெயர்ந்து கொண்டது இலட்சியம் ஒன்றிற்காகப் போராடும் மக்களின் ஒப்பற்ற தலைவன் பிரபாகரன் என்பதும் அவன் பின்னால் ஈழத்தில் உள்ள அனைத்துத் தமிழர்களும் ஏன்? உலகத்திலுள்ள பல கோடி தமிழர்களும் நிற்கிறார்கள் என்பது வெளிச்சம்.

உலகத் தமிழினத்தின் ஒளிச் சுடராக வழிகாட்டிக் கொண்டு ஈழத் தமிழர்களின் உயிராக உந்து சக்தியா–கப் பிரபாகரன் வழி நடத்துகிறார். அவரது தன் நலம் அறவே தொலைந்த தியாக நெஞ்சும், சொல்வதையே செய்யும் நேர்மை உறுதியும் இடுக்கண் கண்டு நகும் மனப் பக்குவமும் எம்மை எல்லாம் உய்விக்கும்.

ஓராயிரம் ஆண்டு ஓடி இளைத்த பின் வாராது வந்த பிரபாகரனின் ஆணையில் நின்று, அவர் காட்டும் மனிதப் போராட்டத்தில் இணைந்து உழைத்து விடுதலை பெறுதல் இன்றுள்ள ஈழத் தமிழர் எமது கடனாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இராணுவ நிர்வாகம்

சிறிலங்கா அரசும் அதை இராணுவ ரீதியில் வழி நடத்தும் அநுருத்த ரத்வத்தையும் யுத்த மூலோபாயங்களிலும் தந்திரோபாயங்களிலும் மிகமிகக் குறைந்த அறிவினைக் கொண்டுள்ளவர்கள் என்பதை வலிகாமத்தை ஆக்கிரமித்து யாழ்ப்பணத்தைக் கைப்பற்றிய செயற்பாடுகள் மூலம் நிரூபித்துள்ளனர். ஆரம்பத்தில் குதூகலம் கொண்ட சிங்களப் பேரினவாதிகள் கூட இப்போது நிதானமாகச் சிந்திக்கத் தொடங்கியபின் யாழ்ப்பாணத்தில் கிடைத்தது தோல்விதான் என்பதை படிப்படியாக விளங்கிக் கொண்டு வருகின்றனர். இதைவிட மக்கள் இல்லாத இடத்தைக் கைப்பற்றியது சிங்கள மக்கள் அரசுக்கெதிராக கிளம்பாமல் ஒருவித மாயைக்குள் ஆழ்ந்திருக்க வைப்பதற்குத்தான் என்பதும் அவர்களுக்கு விளங்கி வருகிறது. நுகர்ச்சி அத்தியாவசியப் பொருட்களின் விலை–களை ஏற்றுவதற்காகவுமே அரசு போலியான யாழ்ப்பாணக் கைப்பற்றலை உபயோகித்தது. இப்போது சிங்கள மக்கள் விழிப்படைந்துள்ளனர். ஐ.தே.க.வும் அவர்களுக்குத் தலைமை கொடுக்கத் தயாராகி வருகின்றனர்.

வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பிய அமைச்சர் ரத்வத்தை அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தை முடித்து வைத்துப் பேசியபோது கிழக்கில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை ஒரு மாத காலத்தில் முறியடிக்கப் போவதாகவும் அதற்காக வடக்கிற்கு அனுப்பப்பட்ட படையினரை கிழக்கு நகர்த்தப் போவதாகவும் கூறியுள்ளார். இதற்கு முற்றும் மாறாக வெறும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் படை நடவடிக்கைக்குத் தலைமை கொடுத்த தளபதி மேஜர் ஜெனரல் றோகான் தளுவத்தை, வலிகாமத்தில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரை எந்தவித காரணம் கொண்டும் அங்கிருந்து அகற்ற முடியாது என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளார். இந்த முரணான பேச்சுக்கள் எதனைக் காட்டுகிறது. போர் மூலோபாயத்தைத் திட்டமிடுவதில்கூட அரசுக்கும் இராணுவத்துக்கும் ஒத்த அடிப்படையிலான சிந்தனைகள் இல்லை என்பதையே பிரதி அமைச்சரதும் இராணுவத் தளபதியினதும் பேச்சுக்கள் சுட்டிக் காட்டுகின்றன. யாழ்ப்பாணத்தின் யதார்த்த நிலை தளபதி தளுவத்தைக்கே தெரியும். அகலக் கால் விரித்து விட்டு தினமும் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களால் படையினரை இழந்து கொண்டிருக்கும் தளுவத்தை தனது பாதுகாப்பைப் பலவீனப்படுத்தச் சம்மதிக்கமாட்டார். இந்த நிலையில் ரத்வத்தை எவ்விதம் மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கையை முறியடிக்கப் போகிறார்.

சந்திரிகா அரசும் ரத்வத்தை போன்றோரும் வலிகாமத்தில் இராணுவம் கால் வைத்திருப்பதால் விடுதலைப் புலிகள் நலிந்துவிட்டார்கள், அழிந்துவிட்டார்கள் என்று ஒரு தப்பான கணக்குப் போட்டுள்ளார்கள். இது சிங்கள அரசைப் பொறுத்தளவில் பயங்கரமான பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்று இராணுவ ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். இது உண்மை நிலையும் கூட. வலிகாமம் மக்கள், இராணுவம் வருமுன்னரே தம் இருப்பிடங்களை விட்டு ஒட்டுமொத்தமாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களுக்கு இடம் பெயர்ந்து விட்டார்கள். இது சிறிலங்கா அரசைப் பொறுத்தளவில் தோல்விதான். இராணுவத்தால் செய்ய முடிந்ததும் செய்து கொண்டிருப்பதும், தமிழ் மக்களின் வீடுகளைத் தரைமட்டமாக்குவதும் அவர்களின் சொத்துக்களைச் சூறையாடுதலும் சேதமாக்குவதுமேயாகும்.

மக்கள் இல்லாத வலிகாமத்துக்கு மக்களைத் திரும்பி வாருங்கள் என்று அரசும் சந்திரிகாவும் எத்தனையோ ஆசைவார்த்தைகளைக் கூறிய போதும் மக்கள் செவிசாய்க்கவில்லை. அங்கு எஞ்சியிருந்த ஒருசில ஆயிரம் சனங்களை இராணுவம் படுத்தும்பாடு வெளிவருகிறது. களவாகப் போய்ப் பார்ப்பவர்களைக் கூட இராணுவம் வரவேற்கவில்லை. சுட்டுத் தள்ளுகிறது. ஆற்றாக் கொடுமையால் அரசு வவுனியா மூலம் கொழும்பு சென்றவர்களை வவுனியாவில் தடை முகாம்களில் தடுத்து வைத்துப் பின்னர் பலவந்தமாக யாழ்ப்பாணம் இட்டுச் சென்று குடியமர்த்துவதற்கு எத்தனிக்கிறது.

எது எவ்விதமாயிருந்தாலும் யாழ்ப்பாணத்தில் வழமையான வாழ்க்கை நிலையை அடுத்த ஆறுமாத காலத்தினுள் மீண்டும் ஏற்படுத்த முடியும் என்று சிவில் நிர்வாக நடவடிக்கைகளுக்கான இணைப்பதிகாரி ஜெனரல் பாகொட கூறியுள்ளார். இதிலிருந்து, தற்போது யாழ்ப்பாணத்தில் மக்கள் வாழமுடியாத நிலைதான் நிலவுகின்றதென்பது தெரிகிறது. அதுவுமல்லாமல், அங்கு ஆறு மாதத்திற்கு பின்னர் நடத்தப்படவிருக்கும் வழமையான வாழ்க்கை தொடர்பான சிவில் நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இருக்கப் போவது இராணுவ அதிகாரியான ஜெனரல் பாகொடவே. எனவே அங்கு நடக்கப்போவது இராணுவ நிர்வாகமே. இராணுவ நிர்வாகம் எப்படியிருக்கும் என்பதை இந்திய ஆக்கிரமிப்பின்போது தமிழ் மக்கள் நன்கு அறிந்துள்ளார்கள். அத்தகைய வாழ்க்கையை வாழத்தான் வேண்டுமா என்பதே கேள்வி?

# இந்தியாவின் நேச சக்தியே! தமிழீழம்

தமிழீழ மக்களும், தமிழீழ விடுதலைப் போரும் இன்று பெரும் நெருக்கடிகளையும், அச்சுறுத்தல்களையும் எதிர்நோக்கி நிற்கின்றன. இவ்விடர்கள் எமது பொது எதிரியான சிறிலங்கா அரசாலோ அல்லது அதன் இனவெறிப்படைகளாலோ மட்டும் ஏற்படவில்லை.

மாறாக தமிழீழ மக்களின் நேச சக்தியாக, இறுக்கமான பிணைப்பைக் கொண்டிருக்க வேண்டிய தமிழீழத்தின் அயல்நாடான இந்திய தேசத்தாலும், அதன் உளவுப் படையாலும் ஏற்படுத்தப்படுகிறது.

பெரும் நாச–அழிவு வேலைகள் மூலம் தமிழீழ விடுதலைப் போரின் தலைமைப் பீடத்தையே அழித்து விடுவது பற்றியும், அழிப்பதால் ஏற்படக்கூடிய அதன் சாதக பாதக நிலைமை–களை இட்டும் தமிழகத்தின் தலைநகர் சென்னையில் உள்ள சென்னைப் பல்கலைக் கழகத்தில் 1995 மார்கழியில் கூடி ஆராய்ந்துள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில் சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சூரியநாராயணன், முந்நாள் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் மற்றும் "றோ" அதிகாரிகள் பலர் அங்கு பங்குபற்றியுள்ளனர். பல தேசிய இனங்களின் கூட்டமைப்பாக 1947ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்திய தேசம், பல்வேறு நாடுகளில் நடைபெற்ற தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்களை அங்கீகரித்து ஆதரவளித்த இந்திய அரசு, இன்றும் பல நாடுகளில் நடைபெறும் தேசிய விடுதலைப் போர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கும் இந்திய அரசு, ஏன் நீண்ட நெடுங்காலப் பிணைப்பை, பிரிக்கப்பட முடியாத இரத்த உறவை இந்தியாவின் தமிழகத்துடன் கொண்டுள்ள தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போரை அழிக்க வேண்டுமென்று கங்கணம் கட்டி நிற்கின்றது?

மேற்குறிப்பிட்ட கேள்விதான் இன்று ஒவ்வோர் தமிழரின் நெஞ்சிலும் எழுகிறது. நாங்கள் சுதந்திர மனிதர்களாக, சுயநிர்ணய உரிமையுள்ள மக்களாக, சொந்த மண்ணில் இழந்த அரசை மீள அமைத்து, இந்தியாவின் நேச சக்தியாக, உற்ற தோழமை நாடாக தமிழீழம் அமையக் கூடாது என்று இந்திய அரசும் அதன் உளவுப் படையான "றோ"வும் விரும்புகின்றனவா?

**பல தேசிய இனங்களின் கூட்டமைப்பாக இருந்த சோவியத் சாம்ராச்சியத்தின் சிதைவுக்குக் காரணமாக இருந்த சக்திகள், இந்திய சாம்ராச்சியத்தைச் சிதைப்பதில் தீவிரமாக ஈடுபடத்தொடங்கினால் இந்திய அரச, இராணுவ கட்டமைப்புக்களில் அச்சக்திகள் தமது உளவு ஸ்தாபனங்கள் மூலம் சிதைவுகளை ஏற்படுத்தத் தொடங்கினால், மக்களின் வாழ்விடங்களில் பாரிய அழிவு வேலைகளை இந்தியாவில் இருக்கக்கூடிய நாசகார சக்திகள் மூலம் ஏற்படுத்தி மக்களை ஆயிரக் கணக்கில் சாகடித்து இலட்சக் கணக்கான மக்களை இடப் பெயர்வுக்குட்படுத்தினால் இந்திய மக்களின் இதயம் என்ன பாடுபடும்?**

இவ்வாறான விருப்பத்துடன் இந்திய அரசும், அதன் உளவுப் படையும் செயற்படுமாகில் அவர்களின் சிந்தனைக்குப் பின்வரும் சில விடயங்களை சுட்டிக்காட்டுவது சாலப்பொருந்தும்.

பல தேசிய இனங்களின் கூட்டமைப்பாக இருந்த சோவியத் சாம்ராச்சியத்தின் சிதைவுக்குக் காரணமாக இருந்த சக்திகள், இந்திய சாம்ராச்சியத்தைச் சிதைப்பதில் தீவிரமாக ஈடுபடத்தொடங்கினால் இந்திய அரச, இராணுவ கட்டமைப்புக்களில் அச்சக்திகள் தமது உளவு ஸ்தாபனங்கள் மூலம் சிதைவுகளை ஏற்படுத்தத் தொடங்கினால், மக்களின் வாழ்விடங்களில் பாரிய அழிவு வேலைகளை இந்தியாவில் இருக்கக்கூடிய நாசகார சக்திகள் மூலம் ஏற்படுத்தி மக்களை ஆயிரக் கணக்கில் சாகடித்து இலட்சக் கணக்கான மக்களை இடப் பெயர்வுக்குட்படுத்தினால் இந்திய மக்களின் இதயம் என்ன பாடுபடும்?

இந்திய தேசத்தின் சுதந்திரத்திற்காக இரத்தம் சிந்தி, சிறை சென்று இன்றும் உயிர்வாழ்வோரின் மனம் எவ்வாறு வேதனைப்படும்? இடர் பல நிறைந்த இந்தியாவின் நீண்ட எல்லைகளில் கண் விழித்து நின்று இந்திய தேசத்தையும், மக்களையும் பாதுகாக்கும் கடமைகளில் ஈடுபட்டு நிற்கும் இந்தியப் போர் வீரர்களின் மன உறுதியில் எவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படும் என்பதை, இன்று தமிழீழ மக்களின் விடுதலைப் போரின் அனைத்து பிரிவுகளிலும் பாதிப்புக்களை ஏற்படுத்திச் சிதைக்க முயலும் இந்திய அரசின் உளவுப் படையான "றோ"வும், அதனைத் தமிழீழத்திற்கெதிராக ஏவிவிடும் அரச சக்திகளும் சிந்திக்க வேண்டும்.

இந்திய தேசத்தின் ஒருமைப் பாட்டைக் குலைப்பதற்கு பாகிஸ்தானின் உளவு நிறுவனங்கள் நாசகார சக்திகளை இந்தியாவிற்குள் அனுப்பி நாச வேலைகளில் ஈடுபடுகிறது என்று உலகம் பூராகவும் பறையறைந்து வரும் இந்திய அரசு, தன் உளவுப் படையான "றோ" அயல் நாடான தமிழீழ தேசத்தின் விடுதலைப் போரை அழிப்பதற்கு எடுத்துவரும் முயற்சிகளைத் தடுப்பதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

பாகிஸ்தான் தன் உள் நாட்டு விடயங்களில் தலையிட்டால் அது சர்வ தேசத்தால் கண்டிக்கப்பட்டு, தடுக்கப்பட வேண்டும்.

ஆனால் இந்தியாவில் ஒரு பகுதியான தமிழகத்தின் உடன் பிறப்புக்கள் வாழும் நாடான தமிழீழத்தின் விடுதலைப் போரை அழிப்பதற்கு இந்திய உளவுப் படை எடுக்கும் நடவடிக்கையை யாரும் கண்டு கொள்ளக்கூடாது. அதனை இன்னொரு நாட்டின் விடயமாகவும் யாரும் நோக்கக் கூடாது என்பதுதான் இந்திய அரசின் நோக்கம் போலும்.

அப்படிக் கண்டு கொள்ளாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் "றோ" திட்டமிட்டே தமிழீழ இளைஞர்களைப் பயன்படுத்தி தமிழகத்தில் சில அரசியல் கொலைகளையும், சில சிறையுடைப்புக்களையும் கொலை செய்து அப்பழியை தமிழீழ விடுதலைப் புலிகள் மீது போட்டதோ என்று பல அரசியல் ஆய்வாளர்கள் இன்று கேள்வி எழுப்புகிறார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது 25 வருட கால போராட்ட வரலாற்றில் என்றாவது இந்திய அரசியலிலோ, அல்லது அதன் உள்நாட்டு முரண்பாடுகளிலோ தலையீடு செய்ததாக இந்திய உளவுப் படையால் நிரூபிக்க முடியுமா?

ஆனால் தமிழீழ விடுதலைப் போரில் "றோ" தான் தலையிட வேண்டிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதற்காக, வேண்டுமென்றே விடுதலைப் புலிகள் இந்தியாவின் உள் விடயங்களில் தலையிடுகிறார்கள் என்ற பொய்ச் செய்திகளைப் பரப்பி வந்ததுதான் கடந்த கால உண்மை வரலாறு. இதற்காக பல நூறு தமிழ் இளைஞர்களின் உயிரைப் பலி–கொள்ளச் செய்தும் இருக்கிறது.

மேற்குறிப்பிட்ட சில சம்பவங்கள் இந்திய அரசும், அதன் உளவுப் படையும், தமிழீழ விடுதலைப் போரில் தாம் வகிக்கும் தற்போதைய பாத்திரம் சரியானதா என்பதைச் சிந்தித்து முடிவெடுப்பதற்கு உதவிடும் என எதிர்பார்க்கும் அதே நேரத்தில்,

தமிழீழத் தேசிய தலைவர் வே. பிரபாகரன் இந்திய அரசிடமும், இந்திய மக்களிடமும் தமிழீழ மக்கள் எதிர்பார்த்து நிற்பது என்ன என்பதை 1984ம் ஆண்டு வைகாசி மாதம் கூறியதை மீண்டும் இங்கு சுட்டிக் காட்டுவது இந்நேரத்தில் அவசியமாகிறது. "எமக்கு இந்தியாவின் உதவி அவசியம். இந்தியாவின் ஆதரவு அவசியம். நாம் இந்தியாவி டம் எமது தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவு பெற்றுக் கொள்ள முயற்சிக்க வேண்டும். எமது மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறு வலியுறுத்த வேண்டும். தமிழீழத் தனியரசே எமது பிரச்சினைகளுக்கு இறுதியான தீர்வு என்பதைத் திட்டவட்டமாக எடுத்துரைக்க வேண்டும். எமது கோரிக்கையை தெட்டத் தெளிவாக எடுத்துக் கூறி இந்தியாவின் நல்லாதரவைப் பெறுவதையிட்டு, எமது பிரச்சினையைத் தீர்த்து வைக்குமாறு இந்தியாவிடம் கைநீட்டி நிற்பது, அரசியல் சாமர்த்தியமாகாது."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாவண்ணன்



# த்தனை

வீட்டிற்கு வந்ததும் வேலாயுதத்தின் மனைவி கோகில வாணியும் மகன் கிருஷாந்தனும் வீட்டுக்குள் போக, குலசிறீயும் யோகசிறீயும் முற்றத்திலே நின்றனர். வேலாயுதம் காலைக்கடனை முடிப்பதற்காக தண்ணீர் வாளியுடன், காணியில் ஒதுக்குப்புறமாக இருந்த மலகூடத்துக்குள் போய்விட்டார். நேரம் காலை 7.00 மணி. அப்பொழுதுதான் அந்தக் கொடூரம் நிகழ்ந்தது. அந்த அழகிய குடும்பத்தைச் சிதறடிக்க எமன், பாசக்கயிற்றுக்குப் பதிலாக புக்காரா குண்டுகளை ஏவிட்டான்.

வாமதேவனின் மனைவி அடுத்த வீட்டில் மகள் சிந்துஜாவுடன் நின்று போசிக்கொண்டிருந்தாள். மகன் கஜீகரன் முற்றத்திலேதான் நின்றான்.

விமானம் வரும் சத்தத்தைக் கோட்டதுமே, 'தம்பி ஓடிவாடா' என்று கூச்சலிட்டுக்கொண்டே சிந்துஜாவை அணைத்தபடி குப்புறப் புடுத்துக்கொண்டார்.

கோபுரம் போல் வீழுந்து
குப்பைமேடு ஆச்சு
பாவிமக்கள் செய்துவிட்ட
பாதகத்தால் போச்சு
ஆவி விட்ட சொந்தங்களின்
அழுகுரலின் சோகம்
பூவினமும் போராட
புகட்டியது தாகம்

மறுகணம் வாணம் இடிந்து விழுந்தபோல் அந்தளவு அதிர்ந்தது – அங்கு இழவு விழுந்தது. நிமிர்ந்து நின்ற வீடுகள் நிலத்தோடு கிடந்தன, தலை நிமிர்ந்தி நின்ற தொன்னைகளும் வெட்டி எறியப்பட்டன, புழுதி......புகை மூச்சுவிடவே முடியாத படி திக்குமுக்காட வைத்தது.

வாமதோவனின் மனைவி நிமிர்ந்து பார்த்தபொழுது, மகன் கஜீகரனைக் காணவில்லை. அவன் நின்ற இடத்திலும் இல்லை, அடுத்து என்ன நடக்குமோ என்று அறியமுடியாத தடுமாற்றம், சிந்துஜாவையும் தூக்கிக்கொண்டு ஓடினார். அந்தப்பிள்ளைக்கும் ஏதும் நடந்துவிட்க்கூடாதே என்ற தவிப்பும் துடிப்பும், அந்தத் தாய்க்கு எற்பட்டிருந்தது.

கந்தசாமி வீட்டில் தேநீர் குடிப்பதில் ஆர்வாரம் செய்து கொண்டிரந்த அந்தக் குழந்தை களில் பத்துவயதான தினேகா...அவள் தான் மூத்தவள் – அவள் உச்சி பிளந்து அந்தக்கணமே உயிர் பிரிந்து கிடந்தாள். நான்கு வயதான பிரசாந்திக்கும் ஆறுவயதான ஜீவகாந்துக்கும் தலைகளில் பெரும் காயங்கள். எட்டு வயதான சோபனாவும்க்கும் முகமெல்லாம் காயம்..... முகமெங்கும் இரத்தமயம் தாய் சரஸ்வதிக்கும் தலையில் காயம். சாகக் கிடக்கும் அந்த மூதாட்டிக்கும் ஒரு காயமும் இல்லை! கந்தசாமி அந்தவேளையில் முனஒழுங்கையில் நின்றபடியால், ஒரு தீங்குமின்றித் தப்பித்துக்கொண்டார்.

குண்டு வழுந்தபோது வேலாயும் மலகூடத்தின் உள்ள. மலகூடம் அப்படியே இடிந்து இறங்கி வேலாயுதத்தை அழுத்திக்கெண்டது. அந்த இடிபாட்டுக்குள் இருந்து வெளியே வருவதற்குப் பொரும் போராட்டம் நடாத்தவோண்டி இருந்தது. அவரை அதனுள் இருந்து மீட்டு எடுப்பதற்கு அங்கு எவருமில்லை. அவர் அதற்குள் இருப்பது எவருக்கும் தெரியவும் மாட்டாது. தொடைக்குள் விமானக்குண்டுச் சிதறல் ஒன்று புகுந்து தைத்துக்கொண்டிருந்தது. உடல் எங்கும் உராய்வுகள், எரிவு, வேதனை. அரைமணி நேரத்துக்கு மோலாகப் போராடிய பின்னரே, அந்த இடிபாடுகளிடையே இருந்து தன்னை மீட்டு அவர் வெளியே வரக்கூடியதாக இருந்தது.

அவர் வெளியே வந்து பார்த்தபொழுது..........! சற்றுமுன் அங்கிருந்த வீடுகள் எங்கே? வானுயர்ந்து நின்ற மரங்கள் எங்கே? மனைவி எங்கே? பிள்ளைகள் எங்கே? மைத்துனிமார் எங்கே? இடிந்து கிடந்த மலசலகூடத்துக்கு பத்து அடி தள்ளி கிணறு போன்ற பாரிய குழி தோண்டப்பட்டிருந்தது.

குறுக்கே கிடந்த தொன்னைகளையும் வீட்டின் இடிபாடுகளையும் கடந்து அவர் வீடிருந்த இடத்திற்கு வநநதபோது, ஒரு பொண்ணின் சடலம் கிடந்தது. அது அவரது மனைவிதானா? அவரது கோகிலாவாணியின் கோலவதனம் எங்கே? அந்த முகத்தின் உருவ அடையாளம் தொரியவில்லை. ஆனால், அதன்மீது இருந்த உடை அவள்தான் என்று அடையாளம் காட்டியது. குண்டு விழுந்தபோது ஏற்பட்ட அதிர்ச்சியைவிட, கோகிலவானி போய்விட்ட அதிர்ச்சி பேரிடியாக இருந்து. 'ஓ......' என்று அலறினார். மகன் எங்கே ...? மைத்துனிமார் எங்கே? அவர்கள் எவரும் வோலயுதத்தின் கண்களுக்குப் படவில்லை

# வித்துக்கள்

மனைவிக்குச் சற்றுத்தள்ளி இடிபாடுகளுக்கிடையே கிடந்த கிருஷாந்தனின் சிறிய உருவம் அவர் கண்களில் படவில்லை.

அந்த இடத்துக்குப் போரளிகள் வந்தனர். வேலாயுதத்தையும் முன் வீட்டில் காயப்பட்டுக் கிடந்த சோபனா, ஜீவகாந், பிரசாந்தி, மற்றும் அனைவரையும் வாகனத்தில் எற்றி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

மைத்துனிகளான யோகசிறி, குலசிறி இருவரும் எங்கே....? குண்டு வீச்சு நிகழ்ந்தபோது முன்வீட்டுக் கந்தசாமி நின்றிருந்த குச்சொழுங்கையின் தொடக்கத்தில், இரத்தம் தோய்ந்த ஒரு மனிதப் பிண்டம் – அல்ல, தசைத்துண்டம் என்றும் சொல்லலாம் –கிடந்தது!



வயிற்றுக்குக் கீழே மனித உறுப்பு என்று எதுவுமில்லை. அப்படியே தறிக்கப்பட்டிருந்தது. கழுத்துக்கு மேலே முகம் என்று சொல்வதற்கு எதுவுமில்லை. பிடரிப்பாகத்துடன் சேர்ந்து நீண்ட தலைமுடி தெரிந்தது .....

கிழிந்து கந்தலாகிவிட்ட சட்டையின் நெஞ்சுப் பகுதியின் ஊடாகத் தெரிந்த உறுப்புக்கள், அது பெண்ணின் உடற்பகுதி என்பதற்குச் சான்று கூறின. இரத்தத்தில் தோய்ந்திருந்த சட்டை–அது முப்பத்தைந்து வயதான யோகசிறியினுடையது என்று அடையாளம் காட்டியது.

இருபத்தெட்டு வயதான குலசிறி எங்கே? சிதைந்த நிலையில் ஒரு பெண்ணின் தலை வாமதேவனின் வீட்டுச் சுவரில் மோதி, அதன் தாழ்வாரத்தில் கிடந்தது. அத்தலையின் காதில் இருந்த ஒற்றைத்தோடு அது குலசிறியினுடையது என்று சாட்சி சொன்னது.

அனைவரது உடற்பாகங்களையும் சதைச் சிதைவுகளையும் சேர்த்துக் கூட்டி அள்ளி எடுத்துச் சென்று, போராளிகளே அடக்கம் செய்தார்கள்.

மூன்று நாட்கள் கழிந்து இடுபாடுத் துப்பரவு செய்யச் சென்றவர்கள், வாமதேவன் வீட்டுக்குப் பக்கத்தில் தறித்து வீசப்பட்டிருந்த வேலாயுதம் வீட்டுத் தென்னையின் வட்டோடு கூடிய ஓலைகளை அகற்றித் தூக்கியபோது......அதன் கீழே நசிந்து..... வலது கை தறிக்கப்பட்ட நிலையில் பழுதடைந்து கிடந்த..... ஒரு மனித உடல். அது சுஜீகரனுக்குச் சொந்தமானது.

முன்வீட்டுக் கந்தசாமியின் நாலுவயதுப் பாலகியான பிரசாந்தி, 3ஆம் நாள் வைத்தியசாலையில் மரணமானாள். அந்தக் குடும்பத்தில் ஐந்து பெண்களுக்கு ஒரே ஆண்வாரிசான ஜீவகாந்தின் மூளையில் பாரிய காயம். அவன் பிழைப்பானா? பிழைத்தாலும் சுய அறிவுடன் வாழுவானா என்பது, வினாக்குறிதான்!

மொத்தத்தில், அந்த அயலையே சுடுகாடாக்கி, ஏழு பேரைச் சிதைத்து அழித்து விட்டது 'வெண்தாமரை இயக்க நாயகி'யின் விமானம். வாழ்க புத்தமதம்..... வாழ்க பௌத்த நாடு...!

'இருக்க வீடு வேண்டும் என்பதற்காக, இருந்த ஒரு துண்டுக் காணியை விற்று வீட்டைக் கட்டினேன். காசு போதாமல் பதி–னையாயிரம் கடன்பட்டு சீற்போட்டன். வீட்டுவேலையை பூரணமாக முடிக்காமலே இரண்டு வருஷத்திற்கு முதலே இந்த வீட்டில் குடிபுகுந்தேன். இன்றைக்கு; இருந்த காணியும் போச்சு கட்டின வீடும் போச்சு– உழைச்சுத்தாறதுக்கு ஆம்பிழைப் பிள்ளைகளும் இல்லாமல் போச்சு' என்று சிறித்துக் கொண்டு சொன்னார் வாமதேவன். எந்தத் துயரத்தையும் சிரித்துக்கொண்டே எற்கும் மனப்பக்குவம் அவரிடம் இருந்தது என்பதை, அன்று அவரோடு பேசிய கொஞ்ச நேரத்தில் என்னால் உணர முடிந்தது. என்னவாயினும், ஒரு மாவீரனின் தந்தையல்லவா.....!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அத்தியாயம் ஐந்து

வாலி ஜெயக்குமார் ஆசிரியர் வீட்டில் சந்திக்கின்றோம்.

நாம் அவர் வீட்டுக்கு முன்னர் சென்றிருந்தபோது இடது பக்கம் மதிலோடு நிமிர்ந்து நின்ற தென்னை மரத்தின் அடிப் பாகத்தைக் கண்டிருந்தாலும், அப்பொழுது அதுபற்றிக் கேட்கத்தோன்றவில்லை. இப்பொழுது அது நினைவுக்கு வரவே கேட்கின்றேன்.

இந்தத் தென்னையிட தலைப்பு எங்க கிடந்தது மஸ்ரர்?

எங்கட மதிலுக்கு வெளியால றோட்டில. அதுக்குக் கீழ தான் எங்கட சனசமூக நிலையப் பெடியன் நற்குணத்தின் உடல் கிடந்தது என்றார். தொடர்ந்து அங்கு நின்ற சென்.பீற்றேர்ஸ் சனசமூக நிலையத்தின் தலைவர் இம்மனுவேலை எங்களுக்கு அறிமுகப்படுத்திவைக்கின்றார். அன்றைய பயங்கரத்தில் சென்.பீற்றேர்ஸ் சனசமூக நிலையத்தின் உறுப்பினர்களும் கொல்லப்பட்டிருந்தனர். ஆகையால் அவரையும் சந்திக்க விரும்புவதாக சொல்லி வைத்திருந்தோம்.



# எத்தனை வீழ்ந்தன

அன்று மானிப்பாய் பரிஷ் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஸ்ரோர் கீப்பரான கமலநாதனைச் சந்திக்க ஏற்பாடாகியிருந்தது. மெலிந்து, சவரம் செய்யப்படாத தோற்றத்தில்ஃ தனது நான்கு வயது மகனுடன் கமலநாதன் வந்திருந்தார்.

கடலநாதனின் வீடு குமார் கடைக்கு எதிர்ப்புறமாக இருக்கிறது. 9ஆம் திகதி காலை சுழிபுரத்தில் இருந்தது ஷெல் தாக்குதலுக்குப் பயந்து வந்த குணரத்தினமும், மனைவி ரோஹினியும், பிள்ளைகளும் வந்து அவர்கள் வீட்டில்தான் தங்கியிருந்தனர்

கமலநாதனின் மனைவி வந்தவர்களை உபசரிப்பதிலும் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தார். கமலநாதனின் மூத்த அண்ணன் குலசிங்கத்தின் மகள் பிரேமலதாவும் குழந்தையும் கிளிநொச்சியிருந்து வந்திருந்தனர். எல்லாரும் சேர்ந்து ஆளுக்காள் வேலைகளைப் பகிர்ந்துகொண்டிருந்தனர்.

கமலநாதனின் வீட்டுக்கு எதிர்புறமாக வீதிக்கு அப்பால், ஆசிரியர் ஜெயக்குமார் வீட்டுக்கும் பொன்னரியம் வீட்டுக்கும் நடுவில் கமலாதேவியின் வீடு. கமலாதேவியும் கமலநாதனும் இரட்டையர்கள். கமலாதேவி பனை அபிவிருத்திச் சபையில் வேலை செய்துகொண்டிருந்தார். அவருடைய கணவன் கணேசலிங்கம் டோஹா விலிருந்து வந்து இரண்டு வாரங்கள் ஆகின்றன. அவர்களுக்கு ஒரு மகன் மட்டும்.

கமலநாதனின் வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள முருகன் ஆலயத்தில்தான் அவர்களது அக்கா ராசசிரோன்மணி எந்நேரமும் இருப்பார். அவர் இரண்டு கண்களிலும் பார்வை இழந்தவர். இளமைப்பருவத்திலேயே கணவனை இழந்து விட்ட அவருக்கு பிள்ளைகள் எவரும் இல்லை. எனவே அவருடைய சகோதரர்களான கமலநாதன், கமலாதேவி, தற்பொழுது மருதனார்மடக் கல்விக்கோட்டத்தில் சேவைக்கால ஆலொசகராகப் பணியாற்றிவரும் ஜெயசிங்கம் ஆசிரியர் ஆகியோர்தான் அவருக்கு எல்லாமாக இருந்து உதவி வந்தனர்.

அன்று பிற்பகலானபோது கமலநாதன் தனது மகனையும் அழைத்துக் கொண்டு, இத்தியடிப் பிள்ளையார் கோயிலுக்குப் போய்விட்டார். அந்த வேளையிலேதான், புக்காரா வின் புன்செயல் இடம்பெற்றது. கோவிலில் இருந்து பார்க்கும்போதே நவாலி புனித பேருதுவானவர் ஆலயப்பக்கமாக குண்டுகள் விழுவதையும், அங்கு இருந்து குபீரென வான் நோக்கி எழுந்த கரும்புகையும் காணக் கூடியதாகயிருந்தது.

கடவுளே! வீட்டில என்ன நடந்ததோ என்று பயந்த வண்ணம் பதறியடித்துக்கொண்டு, சைக்கிலில் விரைந்து வந்தார் கமலநாதன். அங்கே! அவரது வீடிருந்த சுற்றாடலே சுடகாடாக காட்சியளித்தது. அவருடைய வீட்டுக்கூரை தகர்ந்திருந்தது. வீட்டில் இருந்தவர்களுக்கு என்ன நடந்ததோ என்று அறிய நுழைந்து உள்ளே சென்ற போது அவர் முதலில் கண்டது, சுழிபுரத்தில் இருந்து அவர்கள் வீட்டிற்கு விருந்தினராக வந்திருந்த குணரத்தினம் குடும்பத்தைத்தான். குணரத்தினம், மனைவி ரோஹினி மூன்று பிள்ளைகளும் வீட்டு முற்றத்து வேப்பமரத்தின் கீழே பிணங்களாகக்கிடந்தனர். அண்ணன் மகள் பிரேமலதாவும், பிள்ளையும் கமலநாதனின் மனைவி சாவித்திரியும், மகளும் காயங்களோடு உயிர்தப்பியிருந்தார்கள். பிரேமலதாவுக்கு காலில் பெரும்காயம். ஏற்பட்டிருந்த காயங்களால் எல்லாரிடமும் இரத்தம் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது. அவர்களை அப்படியே விட்டு சகோதரி கமலாதேவியின் வீட்டுக்கு ஓடினார். அங்கே.......! அவரது உடன் பிறப்பாகிய கமலாதேவி நெஞ்சு பிளந்து பிணமாகக்கிடந்தாள். உள் உறுப்புக்கள் பிதுங்கி வெளியே சிதறிக்கிடந்தது. கமலாதேவியின் கணவன் அவ்வேளை வேறு ஒரு காணியில், இடம் பெயர்ந்து வருபவர்களின் உபயோகத்துக்காக மலசலக கூடக்குழி வெட்டிக்கொண்டிருந்ததபடியால் அவருக்கு ஆபத்து ஒன்றுமில்லை. அவர் அங்கு நின்று அழுதுகொண்டிருந்தார். கமலாதேவியின் ஒரேமகன் தினேஸ் காயம் எதுவுமின்றித் தப்பிக்கொண்டான்.

முருகன் கோவிலின் பூசகர் சிவமுனி, கடலை விற்றுக்கொண்டிருந்த ரேவதியும் பிள்ளைகளும் மாமியாரும் இறந்துவிட்டனர். ஆனால் இரண்டு கண்களுமே தெரியாத ராசசிரோன்மணி எதுவித காயமுமின்றித்தப்பிவிட்டார். குண்டு வீச்சும், தகர்வுகளும் அவல ஓலங்களும் செவியில் ஒலித்தனவே ஒழிய, வேறு எதுவும் அவருக்குப்புரிய வில்லை. பயந்து நடுங்கியவராக ஒரு பக்கத்தில்.

சாவித்திரியின் நெஞ்சுப்பகுதியில் இருந்து இரத்தம் பெருக்கெடுத்துக்கொண்டிருந்தது. ஏனைய காயக்காரரோடு சாவித்திரியும் அம்புலன்ஸ் வண்டி ஒன்றினுள் ஏற்பட்டபோது, கமலநாதனும் கூடவே ஏறிக்கொண்டார்.

அம்புலன்ஸ் வைத்திய சாலையை நெருங்கிக்கொண்டிருந்தது. சாவித்திரி கணவனுடன் பேசிக்கொண்டிருந்தாள். அவரது உயித்தீபம் சற்று நேரத்தில் அணைந்துவிடப்போகிறது. என்பதை கணவன் உணரவில்லை.

சாவிதிரி மீண்டும் மீண்டும் கணவனுக்குக் கூறினால் என்னைப்பற்றிக் கவலைப்படாதீங்கோ என்ர றெண்டு பிள்ளைகளையும் கவனமாய்ப்பார்த்துக்கொள்ளுங்கோ. இப்படி மனைவி சொல்லும்போது அவள் அளவுக்கு மிஞ்சி பயப்படுகிறாள் என்று தான் அவர் நினைத்தார். வைத்தியசாலை வாசலில் அம்புலன்ஸ் நிறுத்தப்பட்டு காயமுற்றோர் ஸ்ரெச்சர்களில் ஏற்றப்பட்டனர். சாவித்திரி மூச்சுவிடுவதற்கு சிரமப்பட்டாள். கமலநாதன் தன் மனைவியுடன் கூடவே சென்றார். சத்திரசிகிச்சைக்கு கொண்டு செல்லும் வழியில்......

அந்த நடைபாதையில் ....தனது கையை கணவனை நோக்கி உயர்த்திய சாவித்திரியின் கை சோர்ந்து விழுந்தது. அவள் சுமங்கலியாகவே அமைதி அடைந்துவிட்டாள். கடைசிநிமிடம்வரை தன் கணவனையும் பிள்ளைகளையும் அந்த குடும்பத்தலைவியுன் உயிர் விடைபெற்றுக்கொண்டது.

மனைவி இறந்த அந்தச்செய்தியை சொன்னபோது, கமலநாதன் குழந்தைபோல விக்கி விக்கி அழுதார். அவர் மடியில் இருந்த மகன் தந்தையின் முகத்தை ஏக்கத்தோடு பார்த்தான். எங்களுக்கு மனதில் பெரும் சங்கடமாகயிருந்தது. டேவிற் தலை குனிந்து கொண்டார். அவர் அழுது ஓயும்வரை மௌனமாகவேயிருந்தோம்.



சாவித்திரியின் உடல் சவச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. கமலநாதனின் சகோதரி கமலாதேவியுன் சடலமும் பின் அங்கு கொண்டுவந்து சேர்க்கப்பட்டது.

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எத்தனை எத்தனை...

9 ஆம் பக்கத் தொடர்ச்சி...

மிகப்பயங்கரமாகயிருந்தது. அந்தச்சிறிய கிராமத்தைச்சேர்ந்த முற்பத்தொன்பது பேர் ஒரேநாளில் கொலைசெயயப்பட்டு விட்டனர். இந்தச்சோகச்சுமையை தாங்கமுடியாமல் தவித்துக்கொண்டிருந்த வேளையில், அந்தச்சோகத்தைக்கூட முழுமையாக அனுபவிக்க முயாமல் பிணம்தின்னி இராணுவம் பேயாட்டம் ஆடிக்கொண்டிருந்தது. இறந்தவர்களின் சடலங்களை சொந்த வீடுகளில் வைத்துக் துக்கம் அனுஸ்ரிக்கமுடியாத அளவிற்கு எநிகணைகளை வீசிக் கொண்டிருந்தனர்.

அன்று பகல் முழுவதும், இடம் பெயர்ந்த மக்களுக்காக ஓடி ஓடிச்சேவை புரிந்துகொண்டிருந்த முருகானந்தா சனசமூகநிலைய உறுப்பினர் மதுகரனும் அன்று கொல்லப்பட்டுவிட்டான். அவனது உடல் வைத்தியசாலைக்கு அனுப்பப்படவில்லை, பெற்றோர்வீட்டுக்கே கொண்டு சென்றனர். இரவோடிரவாக அவனது உடலை எடுத்துக்கொண்டு செல்வதற்கான பெட்டி கொண்டு வரப்பட்டது.

நேரம் செல்லச்செல்ல நவாலியில் இருப்பதற்கே பயமாகயிருந்தது. மதுரகனின் உடலையும் வைத்துக்கொண்டு நவாலியில் காவல் இருந்தால், அவனது உடலோடு இன்னும் எத்தனை உடலை எடுத்டதுக்கொண்டு செல்லவோண்டி வருமோ என்று சொல்லும் அளவிற்கு, அச்சமாகயிருந்தது. எனவேதான் மதுகரனின் தந்தை மகேந்திரனும், சகோதரர்களும் இரவோடிரவாதக பிணத்தை எடுத்துக்கொண்டு, கோம்பையன் மயானத்திற்கு செல்வது என்று முடிவெடுத்தார்கள். அப்பொழுது நேரம் கிட்டத்தட்ட அதிகாலை நான்கு மணி.

மதுரகனின் பெற்ரோர், சகோதரர்கள், உறவினர்கள் சிறு கூட்டமாக பின்தொடர, அந்த நள்ளிரவிலேயே அவனது இறுதி ஊர்வலம் ஆரம்பமானது. புறப்பட்டு வீதிக்கு வந்த பின்னர் தான் அப்படிப்புறப்பட்டதில் உள்ள பயங்கரமும் ஆபத்தும் தெரிந்தது.

அந்த நேரத்தில் மக்கள் அலையலையாக வீதியிலே சென்றுகொண்டிருந்தார்கள். சென்றுகொண்டிருந்தார்கள் என்று சொல்வதை விட, உயிரைப்பிடித்துக்கொண்டு ஓடிக்கொண்டிருந்தார்கள் என்று சொல்வது தான் பொருத்தம். ஷெல் எறியப்படும் முதற்ச்சத்தம் கேட்டதும், எதுவித எச்சரிக்கையும் இல்லாமலேயே சனம் வீதியில் விழுந்து படுத்து விடும். ஷெல் விழுந்து வெடித்த சத்தம் கேட்டதுமே கூட்டம் எழுந்து ஓட ஆரம்பித்துவிடும், விழுந்து படுத்தவர் எழுந்திருக்கச் சற்றுத்தாமதமானால் கூட்டம் அவரையும் கடந்து அல்லது ஏறிமிதித்து ஓடுவதற்கு தயாராக இருக்கும்.

இந்த அவசரத்திற்கு அவலத்திற்கும் மதுரகனின் உடலைச்சுமந்து கொண்டு செல்பவர்களும் விதிவலக்காகயில்லை. ஷெல் ஏவப்படும் சத்தம் கேட்டதுமே உடலிருந்த பேழையை வேகமாக வைத்துவிட்டு, எல்லோரும் கீழே விழுந்து படுத்துக்கொள்வர். ஷெல் விழுந்து சத்தம் கேட்டதும் மீண்டும் பேழையை தூக்கிகொண்டு வேகமாக நடப்பர். அப்படி விழுந்த ஷெல் களினால் அந்த விதியில் சென்று கொண்டு இருந்தவர்களில் பலர் காயப்பட்டு விழவும் செய்தனர். அந்தநிலையிலும் மதுகரனின் உடலை எப்படியாவது சுடலை மட்டும் கொண்டு சேர்த்து விடுவது என்ற உறுதியுடன், அதனை சுமந்து கொண்டு செல்பவர்கள் சென்று கொண்டிருந்தனர். அடிக்கடி வானத்தில் பரா வெளிச்சம் போட்டு பயப்படுத்தி கொண்டிருந்தது இராணுவம்.

அடிக்கடி அவசரமாக பேழையை, இறக்கியும் தூக்கியபடி வேகமாக ஓடியும் சென்றதில், தூக்கிசென்ற நால்வரும் களைத்துப் போய்விட்டனர். ஒருவாறாக கோம்பையன் மயானத்தை சென்றடைந்த போது, மயானம் திறக்கப்படவில்லை. எனவே பிணத்தோடு வீதியிலே ஒருமணி நேரம் காவல் இருந்தனர். காலை, ஆறரை மணி அளவில் குண்டு வீச்சு விமாணத்தின் இரைச்சல் கேட்ட போழுதுதான், சுடலைக் காவலாளி மனமிரங்கி கதவை திறந்து விட்டான். அதன் பின்னரே மதுகரனின் உடல் உள்ளே கொண்டு செல்லப்பட்டு, அன்று காலை தகனம் செய்யப்பட்டது.

மதுகரனின் உறவினர்கள் இந்த நிலையை அனுபவித்துக் கொண்டு இருக்க, சென்பீற்றேஸ் சனசமூக நிலையத்தின் உறுப்பினரான கனிஸ்டனின் உடலும்–உறவினர்களும் பட்ட அனுபவம் வேறு விதமானதாகவிருந்தது. இடம் பெயர்ந்த மக்களுக்கு குளிர்பானம், கொடுத்து கொண்ட நின்ற அந்த இளைஞனும் அன்று மாலை பலியாகிவிட்டான். அவனது உடலை மறுநாள் நல்லடக்கம் செய்வதற்காகவே பெற்றோர் காத்து வைத்திருந்தனர். ஆனால் நிலமை மோசமானதாக இருக்கவே, கனிஸ்டனின் உடலை அப்படியே தனிமையாக வீட்டில் வைத்துவிட்டு, எல்லாரும் வீட்டை விட்டு வெளிக்கிட்டு ஓடிவிட்டனர். மறுநாள் காலையிலேயே ஒன்றிரண்டு பேர்வந்து, அவன் உடலை நாவாந்தறைக்கு எடுத்துச் சென்றனர். கனிஸ்டனின் உடல் நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அனிறைக்கு நடந்த மரணங்களில் குமுதினிக்கு நடந்த விஷயம் குறிப்பிடத்தக்கது என்றார், நவாலி சென்பீற்றேர்ஸ் சனசமூக நிலைய தலைவர் இம்மானுவேல். அவர் குமதினி என்றதும் 1985இல் சிறீலங்கா செய்த குமதினிப் படுகுப் படுகொலைதான் என் நினைவுக்கு வந்தது. இங்கு வான் படையால் குமுதினியே கொலைசெய்யப் பட்டுவிட்டாள்

அந்தோனி குரூஸ் தம்பதிகளுக்கு குமதினி ஒரே பெண், வயது18: இளையவன் தம்பி. குண்டுவீச்சு நடப்பதற்கு ஐந்து நிமிடங்களுக்கு முன்புதான் தயாரின் தங்கையான அருனம்மா வீட்டிற்கு வந்து, சித்தி அஸ்விக்காவை நான் கொண்டு போறன் என்று சொல்லி அருளம்மாவின் ஐந்து வயது மகள் அஸ்விக்காவை தூக்கி கொண்டு கோயிற்பக்கம் சென்றிருக்கிறாள். வயது ஐந்து தான் என்றாலும் துடிப்பாக மழலை பேசும் அஸ்விகாவில், குமதினி மட்டுமென்ன எல்லோருமே அன்புதான்.

குமுதினி அஸ்விக்காவுடன் கோவிலடிக்கு வந்தவள், கோவிலுக்குப் பக்கத்து வீடான மாரியபுஷ்பத்தின் வீட்டிற்கு வந்து முன் போர்ட்டிக்கோவில் உட்கார்ந்து கொண்டாள். அவளோடு கூட சகிலா: வயது18.

வீட்டுக்காரியான மரியபுஷ்பத்தின் மகன் ஆண்டு ஐந்து படித்துக்கொண்டிருப்பவன் –பெயர் துஷ்யந்தன், அவனும் அவர்கள் கூடவே நின்று கொண்டிருந்தான்.

மரியபுஷ்பத்தின் அக்காள் புஷ்பராணியின் வீடு அதே காணிக்குள்தான் சற்றுத்தள்ளி இருக்கின்றது. ஜெயராணி தனது ஏழு வயது மகனான நரேஷ்குமாரையும் அழைத்துக்கொண்டு, இடம்பெயர்ந்தவர்களுக்கு குளிர்பாணம் தயாரிப்பதற்காக கோவிலடிக்குப் போய்விட்டாள். அவளது மகள் பிருந்தா அவளது வீட்டு முற்றத்தில் விளையாடிக்கொண்டு நின்றாள். கடைக்குட்டி மிரேஷ்குமார் சிறிய தாயாரான மரியபுஷ்பத்துடன் அவள் வீட்டினுள் இருந்தான்.

ஜெயராணியின் தந்தை அடிக்கடி தேனீர் குடிப்பவர். அன்றைக்கு பிருந்தாவுக்கு பராக்குகள் அதிகம். எனவே தான் பேரனுக்கு தேனீர் கொண்டு வந்து கொடுக்கும் போது, இது தான் கடைசியா கொண்டு வந்து தாறன் இனிக் கொண்டு வந்து தரமாட்டன் என்று கூறி விளையாடப் போய்விட்டாள்.

இது நிகழ்ந்து சற்று நேரத்தின் பின்னர் தான் சிறீலங்கா வான்படை சின்னத்தனம் புரிந்தது: புக்காரா விமானம் அக்கினி கக்கியது. ஆரம்பத்தில் புக்காரா நோட்டீஸ் போடுது என்று புதினம் பார்த்தவர்கள், குண்டுகள்தான் என்று குறிப்பறிந்து கொண்டதும்.......

ஓடி வா, ஓடி வா— என்று நரேஷ்குமாரை அழைத்தபடியே ஜெயராணி ஓடினால்: ஆனால் அதற்குள் குண்டு அவர்களை வென்று விட்டது. நரேஷ்குமார் அந்த இடத்திலேயே பலியானான். ஜெயராணியின் தொடையினில் பெருங்காயம். எழுந்து நடக்க முடியாமல் விழுந்துவிட்டாள்.

குண்டு வருகிறது என்பதை உணர்ந்து கொண்ட குமுதினி, அஸ்விக்காவை நெஞ்சோடு அனைத்தபடியே இருந்தபடி குப்பற சரிந்து கொண்டாள். அவளது மடியில் இருந்தபடி நெஞ்சணையின்கீழ் அஸ்விக்கா. அவளது முன்னெச்சரிக்கை நடவடிக்கை அஸ்விக்காவை காப்பாற்றியதே தவிர தன்னை காப்பாற்றிக்கொள்ள உதவவில்லை. குண்டுப்பிளவு ஒன்று குமதினியின் தலையின் பின்பகுதியை, மூளையோடு சேர்த்து கோளிஅள்ளிச் சென்று விட்டது. அஸ்விக்காவுக்கு உடல் எங்கும் காயம் இரத்தத்தில் தோய்ந்து போனாள்.... குமதினியை அக்கா அக்கா என்று அழைத்தபடி தன்விரல்களால் குமதினியின் இமைகளைத் திறந்து பார்க்கிறாள். குமதினி பதில் தரவில்லை. குமதினியக்கா நித்திரையாய் போய்விட்டா அவள் நித்திய நித்திரையானதைப் புரிந்து கொள்ளும் அளவுக்கு அந்த குழந்தைக்கு விபரமில்லை. அப்படித்தான் பின்னரும் எல்லாரிடமும் அவள் சொல்லிக் கொண்டாள்.

மிகுதி அடுத்த இதழில்....

## 20 ஆண்டு சுதந்திர வாழ்வின் பின்....

10ஆண்டுகளாக ட52 இராட்சத குண்டுவீச்சு விமானங்கள் குண்டுகளை விசிறின. 1972 கிறிஸ்மஸ் காலகட்ட குண்டு வீச்சுக்களில் 36ஆயிரம் வெடிப்பொருட்களை அமெரிக்கா அள்ளிக் கொட்டியது. ஈற்றில் என்ன பயன்? இப்போது மக்னமாரா என்ன கூறுகின்றார். "பாரிய குண்டுகளை வீசி, வியட்நாமில் தேசிய உணர்வினைச் சிதைக்க எடுத்த முயற்சி முட்டாள்தனமானது."

போரால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் அமெரிக்க மக்கள் காட்டிய போர் எதிர்ப்புக் கொந்தளிப்புக்கள் என்றுமே வெற்றி பெறமுடியாது என்பதுணரப்பட்டபின் 1973 பரிஸ் நகரில் உருவான உடன்பாட்டின்படி தனது படைகளை அமெரிக்கா வெளியேற்றத் தொடங்கியது. அதுவரை காலமும் அமெரிக்க தயவிலே காலமோட்டிய தென்வியட்நாமிய அரசு அமெரிக்க உதவியின்றி காலம் தள்ள முடியாத நிலை. வாரிவழங்கிய ஏராளமான ஆயுதங்கள், விமானங்கள், தாங்கிகள் உட்பட பல வியட்கொங் வசமாகின. 1975ஆம் ஆண்டு ஏப்பரல் மாதமளவில் சைகோன் வீழ்ச்சியடையத் தொடங்கிற்று. அப்போதுகூட அறிவு கெட்டிருந்த அமெரிக்க சனாதிபதி போட்டும், ஆலோசகர் கிசிஞ்சரும் 722மில்லியன் டொலர் பெறுமதியான இராணுவ உதவிகள் தென்வியட்நாமிய சனாதிபதி நிகுயென் வான்தியு (Nguyen van Thieu) வுக்குப் பெற்றுக்கொடுக்க முயன்றனர். செனட் அதை ஏற்கவில்லை. இறுதியில் அமெரிக்கா கைவிட்ட நிலையில் "நம்பிக்கைத் துரோகிகள்" என அமெரிக்காவை திட்டிய தியு பதவி விலகித் தப்பியோடினார். இவ்வாறாக ஏப்ரல்30ஆம் திகதி சைகோன் வீழ்ச்சியடைய போர் முடிவிற்கு வந்தது. முன்னைய நீண்ட வரலாறு இவ்வெற்றிகட்கும் ஜெனரல் கியாப்பின் திறனே காரணமாயிற்று. வியட்நாம் ஒன்றுபட்டபின் 1976ல் துணைப்பிரதமராகவும் பின்னர் 1980 வரை தேசியப் பாதுகாப்பு அமைச்சராகவும் கியாப் கடமையாற்றினார். கோசிமின்னின் மறைவின் பின்னர் இன்றளவும் கியாப்பே வியட்நாமின் வீரவரலாற்றின் உயிர்ச் சான்றாக இருக்கின்றார்.

### புதியவியட்நாம்

இவையெல்லாம் பழையகதை. இன்று வியட்நாமின் கதை எவ்வாறிருக்கிறது? சில வாரங்களுக்கு முன் 20 ஆண்டு நினைவுகூரலை கொண்டாடிய வியட்நாமில் இன்று செங்கொடிகளோடு பன்னாட்டு வணிக நிறுவனங்களின் பதாதைகளும் பறக்கின்றன. வடவியட்நாமுக்கு எதிராக 1964ம்ஆண்டு தொட்டும் பின் ஒன்றுபட்ட வியட்நாமுக்கு எதிராக 1975ஆம் ஆண்டு தொட்டு விதித்திருந்த தனது பொருண்மியத் தடையை இப்போது அமெரிக்கா நீங்கிவிட்டது. விரைவில் இருநாட்டிற்குமிடையில் முழு அளவிலான இராசதந்திர உறவுகள் ஏற்படப்போகின்றன. வியட்நாமில் முதலிட அமெரிக்கர்கள் இப்போது வரவேற்கப்படுகின்றனர். அமெரிக்க பன்னாட்டு வணிக நிறுவனங்களோ வளமிக்க வியட்நாமில் முதலிடத் துடியாய் துடிக்கின்றன. ஏற்கனவே சிங்கப்பூர், கொங்கோங், தென்கொரியா உட்பட பல நாடுகள் வெள்ளமென தமது முதலீடுகளைப் பாய்ச்சுகின்றனர். இப்போது 14வது நாடாக இவ்வரிசையில் சேர அமெரிக்கா இப்போது தயாராகிவிட்டது. இதுபற்றி தற்போது மூப்படைந்து ஓய்வுபெறும் தளபதி கியாப்பிடம் கேட்கப்பட்டபோது அவர் கூறினார். முன்னர் அன்னியர் ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடினோம். இப்போது வறுமைக்கு எதிராகப் போராடுகின்றோம்" என்றார்.

### இது எவ்வாறு வியட்நாமில் சாத்தியமாயிற்று?

1989ன் பின் சோசலிச உலகில் ஏற்பட்ட சடுதியான மாற்றங்களை அவதானித்த வியட்நாம் தன்னை மாற்றிக் கொண்டது. இறுக்கமான பொதுவுடமைக் கோட்பாடுகளைத் தளர்த்தி திறந்த பொருண்மிய முறையில் நடைபயிலத் தொடங்கியது. இப்பாரிய கொள்கைமாற்றம் குறித்து வியட்நாமிய பொதுவுடமைக் கட்சியின் தலைமைப் பீடங்கள் கூறும் காரணங்கள் ருசிகரமானவை.

"ஏனைய சோசலிச நாடுகள் வீழ்ந்தமைக்கு அவர்கள் சமகாலத்திலே அரசியல் பொருண்மிய மாற்றங்களை செய்ய முற்பட்டதுதான். இதனால் ஏற்பட்ட குழப்ப நிலைகளை அடக்க அவர்கள் அடக்குமுறைகளை கையாள நேர்ந்தது. நாம் சோசலிசத்தைக் கைவிடவில்லை. முதலாளியத்திற்குரிய வரலாற்று காலகட்டத்தையே வழங்குகின்றோம்" என்கின்ற இந்தக் கூற்றுக்கள் சோசலிசத்தின் உயரிய இலக்குகளை அடையத் திறந்த சந்தை பொருண்மிய முறையின் அனுகூலங்களைப் பயன்படுத்துகின்றோம் என்றாகின்றது. அத்தோடு தாம் என்றும் தலைவர் கோசிமின்னின் "மூலோபாயத்தில் இறுக்கமாகவும் தந்திரோபாயத்தில் நெகிழ்ச்சியாகவும்" இருக்கவேண்டும் என்கிற கருத்தையே பின்பற்றுவதாக வேறு கூறிக்கொள்கின்றார்கள். இவற்றின் சரி பிழைகளை வரலாறே தீர்மானிக்க வேண்டும். இருந்த போதும் இன்னமும் அமெரிக்காவோ வியட்நாம் போரின் தாக்கங்களால் அலைக்கழிக்கப்படும்போது வியட்நாமோ, தனது அடுத்த கட்ட மேம்பாடு பற்றி சிந்திக்கின்றது என்பதே நாமறிய வேண்டிய செய்தி.

ஒரு போதும் தேசிய உணர்வினைக் குறைத்து மதிப்பிடாதீர்கள். இனி உலகில் தோன்றப்போகும் மோதல்கட்கு தேசியச் சிக்கல்களே காரணமாகப் போகின்றன. ஒருபோதும் இராணுவம் குறித்தும் அதனால் அடையப்படக்கூடியவை குறித்தும் மிகையான கணிப்புக்களைச் செய்யாதீர்கள். தோற்றுப்போகும் ஒரு அரசை அவர்களால் ஒரு போதும் காப்பாற்ற முடியாது

30இலட்சம் வியட்நாமியர் கொல்லப்பட 58ஆயிரத்திற்கு மேற்பட்ட அமெரிக்கப் படைவீரர் மடிய இன்னும் 2211 படைவீரருக்கு என்ன நடந்தது என்பது தெரியாமல் போக, இன்னமும் பல்வேறு உளநோய்த் தாக்கங்கள், மனவுளைச்சல்கள் காரணமாக வியட்நாமில் போரிட்ட முன்னாள் அமெரிக்க வீரர் தமதுயிரை மாய்க்கக் காரணமான வியட்நாம்போரை, முழுமையாக முன்னர் ஆதரித்தவர் இந்த மக்னமாரா.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 20ஆண்டு சுதந்திரவாழ்வின் பின்

# வியட்நாம்காட்டும் புதிய பாதை

வே.பாலகுமாரன்

சுடலை ஞானமென்று எம்மவர்கள் சொல்வார்களே! அது அப்போது முன்னாள் அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளராகவிருந்த (பின்னர் உலக வங்கியின் தலைவராகவும் இருந்த) றொபேர்ட் மக்னமாராவிற்கு உதித்திருப்பதாகத் தெரிகின்றது. பதவியிலிருக்கும்போது–பல இலட்சக்கணக்கானோர் கொல்லப்படும்போது அகந்தை தலைக்கேறியிருந்தபோது தோன்றாத ஞானம் பதவி போன பின்னர் வாழ்வின் முடிவில் நிற்கும்போது வருவதில் ஒன்றும் வியப்பில்லை. எனவே இப்போது 79வயதாகும் மக்னமாராவிற்கு வியட்நாம் போரின்போது தான்நடந்து கொண்ட விதம் குறித்து கழிவிரக்கம் தோன்றியிருக்கின்றது. 30இலட்சம் வியட்நாமியர் கொல்லப்பட 58ஆயிரத்திற்கு மேற்பட்ட அமெரிக்கப் படைவீரர் மடிய இன்னும் 2211 படைவீரருக்கு என்ன நடந்தது என்பது தெரியாமல் போக, இன்னமும் பல்வேறு உளநோய்த் தாக்கங்கள், மனவுளைச்சல்கள் காரணமாக வியட்நாமில் போரிட்ட முன்னாள் அமெரிக்க வீரர் தமதுயிரை மாய்க்கக் காரணமான வியட்நாம்போரை முழுமையாக முன்னர் ஆதரித்தவர் இந்த மக்னமாரா. இவ்வளவு காலமும் அமைதிகாத்த அவர் அதுவும் 1968இல் பதவிவிலகியபின் 27ஆண்டுகள் கழித்து வியட்நாம் போர் முடிவுற்றமையைக் குறிக்கும் 20ஆவது ஆண்டு நினைவுகூரல் நிகழும் தருணத்தில் தமது பாவமன்னிப்பைக் கோரியிருப்பது அமெரிக்க அரசியலிலே அதிர்ச்சி அலைகளைப் புயலாக வீசச் செய்துவிட்டது.

## மக்னமாராவின் ஒப்புதல் வாக்குமூலம்

அண்மையில் வெளியான 414 பக்கங்களைக் கொண்ட அவரது நூலான "வியட்நாமின் துன்பியலும், படிப்பினைகளும் ஒரு மீளாய்வு" **(In Restrospect: The Tragedy and Lessons Of Vietnam)** என்பதில் காணப்படும் செய்திகள் எம்மைப்பொறுத்தவரை பெறுமதியானவை. அதுமட்டுமன்றி தேசியங்களை இராணுவ பலத்தால் காலின்கீழே போட்டு நசுக்கிவிடலாம் என மனப்பால் குடிக்கும் ஆட்சியாளர்களுக்கு ஒரு அபாய எச்சரிக்கை. தாம் இவ்வளவு காலம் கழித்தும் இந்நூலை எழுதியமைக்கு மக்னமாரா கூறும் காரணங்களும் அவதானிக்கப்பட வேண்டியவை. வியட்நாம்போரை அநாவசியமாக நடத்தியதன் பலன்களைப் பாடமாக இன்றும் அமெரிக்கா கற்கவில்லை என்பதாலேதான் அவற்றை எழுத நேரிட்டது என்கிறார். அத்தோடு அமெரிக்க மக்களை முற்றாக ஏமாற்றி வியட்நாம்போரை நடத்தியது மிக மோசமான தவறு. எனவே எதிர்கால சந்ததிக்கு உண்மையை விளக்கவேண்டிய கடப்பாடு எனக்குண்டு என்றும் மேலும் மக்னமாரா கூறுகின்றார். "நான் பெரும் தவறிழைத்துவிட்டேன் நான் மட்டுமல்ல கென்னடி, யோன்சன் போன்ற ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கிய ஏனைய ஆலோசகரும் பெரும் தவறிழைத்தவர்களே. இந்த இரு சனாதிபதிகளுக்குமே அமெரிக்காவில் என்ன நடந்தது என்பது சரிவரத் தெரியாது" இவ்வாறு கூறும் மக்னமாராவிடம் வியட்நாம் போரிலிருந்து அமெரிக்கா கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் எவையென அவரிடம் நேரில் கேட்கப்பட்டபோது அவர்கூறியதாவது "எனது நூலின் இறுதி அத்தியாயம் இதுபற்றியதே. மிக இலகுவாக இதைப்பற்றி நான் கூற முடியும். ஒரு போதும் தேசிய உணர்வினைக் குறைத்து மதிப்பிடாதீர்கள். இனி உலகில் தோன்றப்போகும் மோதல்கட்கு தேசியச் சிக்கல்களே காரணமாகப் போகின்றன. ஒருபோதும் இராணுவம் குறித்தும் அதனால் அடையப்படக்கூடியவை குறித்தும் மிகையான கணிப்புக்களைச் செய்யாதீர்கள். தோற்றுப்போகும் ஒரு அரசை அவர்களால் ஒரு போதும் காப்பாற்ற முடியாது. ஒருபோதும் நிலைமைகள் குறித்து தவறான மதிப்பீடுகளைச் செய்யாதீர்கள். அமெரிக்காவின் பாதுகாப்பு நேரடியாகப் பாதிக்கப்படாதபோது ஒருபோதும் தன்னிச்சையாக எதிலும் தலையிடாதீர்கள்" வியட்நாம்போர் எதிர்ப்பாளரால் 'கொலைகாரன்' என அழைக்கப்பட்ட மக்னமாரா இப்போது, தான் ஆரம்பம் தொட்டே மேலதிகமாக அமெரிக்க வீரரை வியட்நாமிற்கு அனுப்புவதை எதிர்த்ததாகவும் தனதுள்ளத்தில் இரகசியமாக தாம் செய்வது தவறு என்கிற எண்ணம் தோன்றியதாவும் சொல்கிறார். அதிலும் குறிப்பாக 1965ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலே வியட்நாம் போர் எதிர்ப்பாளரான குவேக்கர் அமைப்பைச் சேர்ந்த நோர்மன் மொரிசன், மக்னமாராவின் பென்டகன் அலுவலக அறையிலிருந்து 40அடி தூரத்திலே தனது கையிலே தனது 1வயது பெண் மகவைத் தாங்கிய வண்ணம் தன்மேலே பெற்றோலை ஊற்றித் தீ மூட்டியபோது தான் முற்றாகவே மனம் மாறியதாக மக்னமாரா குறிப்பிடுகின்றார். (இச் சம்பவத்தின் போது மொரிசன் தனது குழந்தையைப் பாதுகாப்பாக வீசிவிட்டார்)

## ஆறாத ஆழமான உள்மனக்காயம்

மக்னமாராவின் இத்தகைய ஒப்புதல் வாக்குமூலங்கள் இப்போது அமெரிக்க அரசியலையே ஒரு உலுக்கு உலுக்கிவிடுகின்றன. வியட்நாம் போர் தொடர்பான "ஆழமான உள் மனக்காயம் எப்போதுமே அமெரிக்காவில் ஆறப்போவதில்லையென்பது" இப்போது தெளிவாகிவிட்டது. "இன்னொரு வியட்நாம்" உருவாகிவிடுமோ என்கிற அச்சம் தொடரும் நிலையிலே அமெரிக்காவின் வெளித்தலையீடுகள் இப்போது அமைகின்றன என்பதற்கு சோமாலியாவில் அமெரிக்க தலையீடு தக்க உதாரணமாகும். சோமாலியாவில் அமெரிக்கப் படையினர் கொல்லப்படத் தொடங்கிய உடனே 'இன்னோர் வியட்நாம்' என்கிற பதற்றம் அமெரிக்க மக்களிடையே பரவியது. கிளின்டன் எவ்வளவு விரைவா–கப் படைகளைத் திருப்பிப் பெறமுடியுமோ அவ்வளவு விரைவாகப் பெற்றார். கெமிற்றியிலும் அவ்வாறே அமெரிக்க சமூகத்தின் மனச்சான்று உருவாக்கும் நெருக்கடிகட்குப் பின்னர் எப்போதும் வியட்நாம்போர் ஆவியாக, நிழலாகப் பின் தொடரப்போகின்றது. வியட்நாம்போரின்போது அமெரிக்க சமூகமே சிதறுண்ட பெருத்த சமூக நெருக்கடியொன்றைச் சந்தித்தது. இன்றளவும் அமெரிக்காவிலே தலை சிறந்த திரைப்படங்களாகக் கணிக்கப்படுபவை அநேகமாக வியட்நாமியப் போரில் வீணாகச் சிக்கி அவலப்பட்ட போர் வீரர் பற்றி அவர்தம் மனநிலை, குடும்பச் சிதைவுகள், பிறழ்கள் பற்றியதாகவே அமைகின்றது. இப்போது மக்கனமாராவோ சோவியத் சீன பொதுவுடமை அணிகளின் செல்வாக்கு பரம்பல்கள் பற்றிய மிகையான தவறான கணிப்பீடுகளால் அமெரிக்கா தவறாக வழிநடத்தப்பட்டதாகக் கூறுகின்றார். ஆனால் இன்றளவும் வியட்நாம் மண்ணை, அதன் மக்களை சிதைத்து வதைத்ததற்கான தார்மீகப் பழியை அமெரிக்க மக்களே சுமக்க நேரிட்டுவிட்டது. அதன் விபரீத விளைவுகளையும் அவர்களே தாங்க நேரிட்டது.

## வியட்நாமின் வீர வரலாறு.

ஏனென்றால் அவ்வளவு தூரம் மிகக் கொடுமையான அமெரிக்க செயற்பாடுகட்கு வியட்நாம் மக்கள் முகம்கொடுக்க நேரிட்டது. மிக நீண்டகாலமாகவே பிரான்சியரின் கொடுங்கோன்மையிலிருந்து அதன் ஆதிக்கதிலிருந்து விடுபடப் போராடி வெற்றி கண்ட மக்களை மீண்டும் அடிமைப்படுத்த அமெரிக்கா முயன்றதே சிக்கலின் பின்னணியாகின்றது. ஏனென்றால் 17ஆம் நூற்றாண்டில் வணிகர்களாக நுழைந்து 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முழு இந்தோசீனப் பகுதியையுமே (லாவோஸ் கம்போடியா வியட்நாம்) தமது ஆதிக்கத்திற்கு கொண்டுவந்த பிரான்சியருக்கு எதிராக வியட்நாம் மக்கள் எவ்வளவு நீண்டகாலம் போராடவேண்டியிருந்தது. அவர்களது வீரம்செறிந்த தலைவரான கோசிமின் 1930களிலே விடுதலை வேண்டிப் போராடத் தொடங்கி 1941களில் "வியட்மின்" எனப்படும் வியட்நாமிய சுதந்திர கழகத்தை உருவாக்கினார். பின் இரண்டாம் உலகப்போரின் தொடக்கத்தில் பிரான்சியர் ஜேர்மனியினரால் வெற்றிகொள்ளப்பட்டபோது யப்பானியர் நுழைந்தபோது அவர்கள் ஆதிக்கத்திற்கு எதிராகவும் போராட நேர்ந்தது. பின் இரண்டாம் உலகப்போர் முடிவடைய 1945ஆம் ஆண்டு செப்டெம்பர் இரண்டாம் திகதி வியட்நாமிய சனநாயகக் குடியரசை கோசிமின் அமைத்தபின்னும் சுரண்டல் ஆசையைக்கைவிடாத பிரான்சியர் அமெரிக்க ஆதரவோடு மீண்டும் 1946ஆம் ஆண்டு சுதந்திர வியட்நாம் மீது போர் தொடுத்தனர். 8ஆண்டுகள் தீவிரமாக வெற்றிகரமாகப் போராடிய வியட்நாம் வீரர் இறுதியில் ஜெனரல் கியாப் **(Vonguyen Giap)** தலைமையில் தியென்–பியென்–பூ சமரில் **(Dien-Bien-Phu)** 55நாட்கள் தீரமுடன் போராடிய பிரான்சியருக்கு மரண அடி கொடுத்தனர். இப் போரிலே ஜெனரல் கியாப் காட்டிய திறன் உலகையே வியக்கவைத்துத் தலைசிறந்த இராணுவத் தளபதி என்கிற பெயரை அவருக்குப் பெற்றுக்கொடுத்தது. இப்போரின்பின் பிரான்சியர் படுதோல்வி கண்டபின் இந்தோசீனப் பகுதியின் எதிர்காலம் குறித்து திர்மானிப்பதற்காக 1954ஆம் ஆண்டு ஜெனிவாவிலே கூட்டப்பட்ட மாநாட்டிலே 17ஆவது அகலக்கோட்டை **(17th Paralel)** அடிப்படையாக வைத்து வியட்நாம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. தென் வியட்நாம் தொடர்ந்தும் பிரான்சியர் ஆதரவு பெற்ற ஆட்சியாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. எனினும் இப்பிரிவு தற்காலிகமான–தென்றும் 2ஆண்டினுள் 1956ம் ஆண்டில் பொது மக்கள் கருத்தெடுப்பின் மூலம் இரு பகுதிகளும் ஒன்றாக்கப்படலாம் என்றே அப்போது தீர்மானிக்கப்பட்டது.

## அமெரிக்காவின் அநீதி

ஆனால் இங்கேதான் அமெரிக்க வல்லாண்மை, வியட்நாம் மக்கள் தலையிலேயே மண்ணை அள்ளிப் போட்டது. கம்யூனிச பூதம் ஆசியாவை விழுங்கப்போவதாகக் கூறி பிரான்சியர் விட்டுச் சென்ற இடத்தைதாமே நிரப்பினர். இரண்டு ஆண்டிற்குள் முடியவேண்டிய பிரிவினையை நிரந்தரப் பிரிவினையாக்க வியட்நாம் போரைத்தொடக்கினர். தென் வியட்நாமை வடவியட்நாமோடு இணையவிடாமல் தடுப்பதற்காக தென்வியட்நாமில் பொம்மை அரசொன்றை நிறுவினர். இதனை எதிர்த்தே வியட்நாமை கூறுபோடும் அமெரிக்க திட்டத்தை முறியடிக்கவே கோசிமின் அவர்களால் 1961 டிசம்பரில் வியட்கொங் **(Vietcong)** என்றழைக்கப்படும் தேசிய விடுதலை முன்னணி அமைக்கப்பட்டது. வியட் கொங்கினர் போராட்டத்தால் வீழும் தறுவாயிலிருந்த தென் வியட்நாமை தம்பிடியில் தொடர்ந்தும் வைக்கவே, தொங்கின் வளைகுடாவில் தமது போர்க்கப்பல்கள் தாக்கப்பட்டதாகச் சாட்டொன்றைக்கூறி வியட்நாம்போரை அமெரிக்கா ஆரம்பித்தது. வட வியட்நாம் முழுவதுமே குண்டுமாரி பொழிந்தது. 1968ஆம் ஆண்டு 60ஆயிரம் பேராக இருந்த படையினர் பின்னர் ஐந்து இலட்சமாக அதிகரிக்கப்பட்டனர். மைலாய் படுகொலைகள் போல் ஏராளம் படுகொலைகள் தாராளமாகச் செய்தனர். ஏஜென்ட் ஒறேஞ் **(Agent Orange)** போன்ற நச்சுவேதியல் பொருட்களை நாடெங்கும் வீசினர். தொன்கணக்கில் குண்டுகள் போட்டனர். இரண்டாம் உலகப்போரிலே (கிரோசிமா உட்பட) வீசப்பட்ட குண்டுகளில் **TNT** வெடிபொருளை விடக் கூடுதலான அளவில் வியட்நாமில் குண்டுகள் வீசப்பட்டன.

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்

**வியட்நாம்போரை அநாவசியமாக நடத்தியதன் பலன்களைப் பாடமாக இன்றும் அமெரிக்கா கற்கவில்லை என்பதாலேதான் அவற்றை எழுத நேரிட்டது என்கிறார். அத்தோடு அமெரிக்க மக்களை முற்றாக ஏமாற்றி வியட்நாம்போரை நடத்தியது மிக மோசமான தவறு. எனவே எதிர்கால சந்ததிக்கு உண்மையை விளக்கவேண்டிய கடப்பாடு எனக்குண்டு என்றும் மேலும் மக்னமாரா கூறுகின்றார். *"நான் பெரும் தவறிழைத்துவிட்டேன் நான் மட்டுமல்ல கென்னடி, யோன்சன் போன்ற ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கிய ஏனைய ஆலோசகரும் பெரும் தவறிழைத்தவர்களே. இந்த இரு சனாதிபதிகளுக்குமே அமெரிக்காவில் என்ன நடந்தது என்பது சரிவரத் தெரியாது"* இவ்வாறு கூறும் மக்னமாராவிடம் வியட்நாம் போரிலிருந்து அமெரிக்கா கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் எவையென அவரிடம் நேரில் கேட்கப்பட்டபோது அவர்கூறியதாவது.....**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# லெப்டினனட் திலக்

## சேதுலிங்கம் கிருஷ்ணவரதன் - வீரச்சாவு 22-07-1991

இந்திய இராணுவம் எமது மண்ணை ஆக்கிரமித்து பல அழிவுகளை செய்து கொண்டிருந்த காலம். வீதிகள் ஒழுங்கைகள் எங்கு பார்த்தாலும் வெறிநாய்களின் வேட்டை. அமைதிப்படை என்று வந்து குழந்தைகள், பெண்கள் என்ற வேறுபாடு இன்றி தமிழீழ மண்ணை அழித்து அட்டகாசம் செய்து கொண்டிருந்த காலம்.

எமது மக்களைக்காக்கவென்று சொல்லி இந்த மண்ணில் வந்தவர்கள் எமது மக்களையும் கலை, பண்பாட்டையும் அழிப்பதைக் கண்டு சிறுவர் முதல் பெண்கள் வரை எமது மண்ணைக்காக்க எழுந்தனர்.

சிறுவயதில் இருந்தே துடிப்புடன் எந்தக் காரியத்தையும் துடுக்குடன் செய்யும் கிருஷ்ணவரதன் என்ற இயற்பெயர் கொண்ட இவன் கடலால் சூழப்பட்ட வல்வெட்டித்துறையில் ஆதிகோவிலடி என்னும் கிராமத்தில் சேதுலிங்கம் வள்ளியம்மை தம்பதிகளின் மூத்த மகனாக 10-09-19972 இல் பிறந்தான். இவன் 17-01-1989இல் புலிகளுடன் தன்னை ஒரு முழுநேர உறுப்பினராக இணைத்துக் கொண்டான். விடுதலைப் புலிகளின் கானகப் பாசறை பல புலிகளை இந்த மண்ணில் உருவாக்கிவிட்ட மணலாறு பயிற்சி முகாமில் பயிற்சி எடுப்பதற்காக அனுப்பப்பட்டான்.

இங்கு "திலக்" என்ற பெயருடன் பயிற்சியைத் தொடங்கிய இவன் பயிற்சியில் மிகவும் கட்டுப்பட்டுடனும், திறமையுடனும் நடந்து கொண்டான். இதனால் பல தடவைகள் முகாம் பொறுப்பாளராலும், பயிற்சி அளித்த ஆசிரியர்களாலும் வெகுவாகப் பாராட்டப்பட்டு வந்தான்.

எந்த வேலையைக் கொடுத்தாலும் முகமலர்வுடன் ஏற்று அதனை முடிப்பதில் இவனுக்கு நிகர் இவனேதான். காட்டுப்பகுதியில் உணவுப் பொருட்களில் இருந்து சகல விதமான பொருட்களையும் தலையில் சுமந்தே செல்ல வேண்டிய நிலை. தூர இடங்களில் இருந்து பொருட்களை எடுத்து வருவதானால் பொறுப்பாளரால் தெரிவு செய்யப்படும் குழு திலக்கின் குழுவாகவே இருக்கும்.

அவன் தான் சோர்வின்றித் தன் குழுவில் உள்ளவர்களையெல்லாம் பாட்டாலும் பகிடிப் பேச்சாலும் சிரிக்க வைத்து வேலைகளை களைப்பின்றிச் செய்யும் திறமை உடையவன். பயிற்சி முகாமில் நடைபெறுகின்ற கலை நிகழ்ச்சிகளில் திலக் இல்லாமல் இருக்காது. ஏதாவது ஒரு நிகழ்ச்சியிலேனும் அவன் பங்கு இருக்கும். அப்படியில்லாவிட்டால் சக போராளிகள் கட்டாயப்படுத்தி " 'திலக்' அண்ணை மேடையிலை ஏறுங்கோ. ஒரு பாட்டென்றாலும் கட்டாயம் பாடவேண்டும்" என்பார்கள், அவர்களின் அன்புக்காகப் பாடுவான்.

இவனுடைய ஒவ்வொரு அசைவும் பேச்சும் ஒரு முழுமையான விடுதலைப் போராளிக்கு உரியனவையாகவே இருக்கும். எப்போ எடுத்தாலும், தனது குழுவிலுள்ள ஆட்களிடம் "மச்சான் சண்டை பிடிக்கவேணும், ஆமிக்கு நாம் யாரென்று காட்ட வேணும்" என்று பேசிக்கொள்வான்.

பயிற்சிக் காலத்தில் இப்படி விடுதலை உணர்வுடன் இருந்து திலக் பயிற்சியை முடித்து வெளியே வந்தான். பயிற்சியில் இவன் காட்டிய திறனும் போராட்ட உணர்வும் 'எமது வெற்றிக்கு' கடுமையான பயிற்சியும் மன உறுதியும்தான் காரணம் என்ற தலைவரின் கூற்றுக்கு அமைய மேலும் பயிற்சி எடுக்க விரும்பிய இவனை வயதில் சிறியவனாக இருந்தாலும் இவன் திறமையையும் ஆர்வத்தையும் கண்டு மேலதிகப் பயிற்சிக்கும் அனுப்பப்பட்டான். அங்கும் இவன் முதன்மை மாணவனாகவே இருந்து பல பேரின் பாராட்டைப் பெற்றான்.

இப்பயிற்சியையும் முடித்து வெளியே வந்த நேரத்தில் இரண்டாவது ஈழப்போர் ஆரம்பமானது. இதனைத் தொடர்ந்து இன அழிப்பில் ஈடுபட்டுவந்த சிங்கள வெறியர்களின் முகாம்களை அழித்திட புலிகள் செயற்பட்டு வந்தனர். இதன் முதற்படியாக கொண்டச்சி இராணுவ முகாம் தகர்ப்பு இடம்பெற்றது. இத்தாக்குதலில் திலக்கின் பங்கு அளப்பரியது. தாக்குதல் தொடங்கியது. ஒரு பக்கமாகத் திலக் நின்ற அணி எதிரியின் முகாமுக்குள் புகுந்து அவனை அழிக்க வேண்டும். விடுதலைப் புலிகளின் கரங்களில் இருந்த துப்பாக்கிகள் நெருப்பைக் கக்கிய வண்ணம் முன்னேறிச் சென்றன. திலக்கின் துப்பாக்கி மின்னலாகச் சுழன்றது. அதில் எதிரிகள் பலர் கண்முன்னே விழுந்தனர். முதலாவதாக இவன் சென்ற அணியே முகாமுக்குள் புகுந்தது. பல ஆயுதங்களுடன் பவல் கவச வாகனம் ஒன்றும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பரந்தன் பக்கமாக முன்னேற முயன்ற இராணுவத்தின் மீதும் கடும் தாக்குதல் தொடுக்கப்பட்டது. இதில் இவன் காட்டிய வீரம் இவனோடு களம் சென்ற அனைத்துப் போராளிகளையும் ஒருகணம் சிந்திக்க வைத்தது. சண்டை முடிந்து முகாம் திரும்பியதும் இங்கு வராமல் தொடர்ந்து சண்டை செய்துகொண்டு இருக்க வேண்டுமென்று கூறிக்கொண்டு இருந்தான். சண்டையில் இவன் காட்டும் வீரமும் துணிச்சலும் எல்லோரையும் இவன் பக்கம் ஈர்த்தது. எல்லோருக்கும் முன் உதாரணமாக திலக் செயற்பட்டான். சண்டைக்குப் போராளிகளை தெரிவு செய்யும்போது இவன் பெயர் இடம் பெறாதுவிட்டால் எதற்கும் முகம் சுளிக்காத இவன் முகம் சுளிப்பான், யாருடனும் பேச மாட்டான்.

"இவ்வளவு பேரும் சண்டைக்குப் போக நான் மட்டும் இங்கு நிற்பதா" என்று கூறிக்கொள்வான். இவனின் இந்த மாறுதலைப் பார்த்து இவனும் சண்டை அணியில் சேர்த்துக் கொள்ளப்படுவான்.

இப்படித்தான் கொக்காவில் இராணுவ முகாம் தாக்குதலுக்குச் சென்ற அணியில் இவன் சேர்த்துக் கொள்ளப்பட்டான். அங்கும் இவன் காட்டிய வீரம் எல்லோரும் இவன் போலவே இருக்க வேண்டுமென்ற எண்ணத்தை எல்லோரிடமும் தோற்றுவித்தது. வீரத்திலும், விவேகத்திலும், இலட்சியத்திலும் இவன் எப்படி இவ்வளவு திறன் பெற்றான்? அதுதான் ஒவ்வொரு போராளியையும் தனது பிள்ளையாக வளர்க்கும் தலைவரின் கண்காணிப்பில் வளரும் புலிகளின் திறன்.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாண மண்ணை ஏனைய பிரதேசங்களுடன் பிரித்து நிற்கும் ஆனையிறவு முகாம் முற்றுகையின் முதல் கட்டமாக ஆனையிறவு உல்லாச விடுதி மினிமுகாம் விடுதலைப் புலிகளின் சில நிமிடத் தாக்குதலில் அழிக்கப்பட்டது. இத்தாக்குதலில் திலக் காட்டிய வீரமும் விவேகமும் இவனுக்கே உரியது. சில நிமிட நேரத்தில் முகாம் வீழ்ச்சி அடைந்தது என்றால் அதில் சென்ற அணிகள் எவ்வளவு வேகத்தில் தாக்கியிருப்பார்கள். இதனால் முகாமுக்குள் இருந்து எதிரிகள் பயப் பீதியால் ஆட்டம் கண்டார்கள். தமது உயிர் திரும்பாது என்னும் முடிவுக்கு வந்தனர். எமக்கு உதவி செய்யும் படி இராணுவத்தினர் இராணுவத் தளபதிகளிடம் உயிர்ப் பிச்சை வேண்டினர். இதன் காரணமாக முற்றுகையை முறியடிக்கவென்று கட்டைக்காட்டுப் பகுதியில் இராணுவம் தரையிறக்கப்பட்டது.

24 மணி நேரத்தில் முற்றுகையை முறியடிப்பதாகக் கூறிக்கொண்ட இராணுவம் 24 நாட்களுக்கு மேல் போரிட வேண்டிய நிலை ஏற்பட்டது. கடற் கப்பலின் மூலம் தரையிறக்கப்பட்ட இராணுவத்தினரை எதிர்கொள்ள போராளிகள் கட்டைக்காட்டுப் பகுதியை நோக்கி விரைந்தனர். மூண்டது கட்டைக்காட்டுப்போர். உல்லாச விடுதிப் பகுதியில் சண்டையில் நின்ற திலக் கட்டைக்காடு செல்ல விருப்பம் கொண்டு பொறுப்பாளரிடம் கேட்டபொழுது இவன் ஆர்வத்தைக் கண்ட அவர் அங்கு சென்ற அணியுடன் இவனையும் அனுப்பி வைத்தார். அங்குலம் அங்குலமாக முன்னேறி வந்த இராணுவத்தினர் இவர்களின் கடும் எதிர்ப்பைக் கண்டு திணறினர்.

போருக்கெல்லாம் தாய்ப்போர் என்று கொக்கரித்தான் எதிரி. இலங்கையில் இரண்டு இராணுவங்கள் உண்டு என்று கூறும் அளவுக்கு திலக் போன்ற நிகரில்லாத வீரர்கள் காட்டிய வீரமே காரணம். இராணுவம் முன்னேறிக் கொண்டு இருந்த நேரத்தில் இடையில் உட்சென்று தாக்குவதற்காக ஓர் அணி தெரிவு செய்யப்பட்டது. அத்தாக்குதலில் திலக்கும் இடம் பெற்றான்.

உட்சென்று தாக்கும் தாக்குதல் தொடங்கியதும் போராளிகளின் ஆயுதங்கள் தீப்பிழம்பாக உட்புகுந்தன. எதிரி திசை தெரியாமல் ஓடினான். எம்மவர்களின் குண்டுகள் எதிரியைச் சல்லடை போட்டன. பல இராணுவத்தினர் கொல்லப்பட்டு பல நவீனரக ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதுடன் இராணுவத்தினரின் உடல்களும் கைப்பற்றப்பட்டன. இதில் திலக் காட்டிய வீரம் இன்றும் போராளிகள் மத்தியில் பேசப்படுகின்றது. இச் சண்டையின் பின்னரும் முன்னேறி வந்த இராணுவத்துக்கு எதிராக தொடர்ந்தும் போராடினான். 22-07-1991 அன்று நடைபெற்ற மோதலில் எதிரியின் ரவை பட்டு வீரச்சாவைத் தழுவிக் கொண்டான்.

இவன் கண்ட கனவை நனவாக்க இவன் சிந்திய செங்குருதியில் சிவந்த மண்ணில் செங்கொடி ஏற்றிட, ஆயிரமாயிரம் வேங்கைகள் உருவாகிக்கொண்டே உள்ளனர். வீரத்துக்கு உதாரணமான இந்த வீரனின் நினைவுகளும் அனைத்துப் போராளிகளின் இலட்சிய உணர்வுகளும் என்றும் எம்மோடு தொடர்ந்து வரும்.

## மீண்டும் உதயத்துக்காக...

4 ஆம் பக்கத் தொடர்ச்சி...

யாழ்ப்பாண மண்-

சிறிலங்கா படையினரால், இந்தியப்படையினரால் பல முறை ஆக்கிரமிக்கப்பட்டது, அழிக்கப்பட்டது, சிதைக்கப்பட்டது. ஆனால் மீண்டும் நாம் புதுப்பொலிவுடன் எழுந்தோம்.

இது வரலாறு!

எமக்கு மீண்டும் எழுவதற்கான புதிய வாழ்வை நோக்கி நகர்வதற்கான ஆன்மபலம் உண்டு. அனுபவமும் உண்டு. வளம் கொழிக்கும் வலிகாம மண் எதிரியின் பிடியிலிருந்து நாளை மீட்கப்படலாம் அல்லது நான்கு வருடங்கள் கழித்து மீட்கப்படலாம் அது இன்னமும் நீளலாம். மண் மீட்கப்படுவது அடிப்படையில் எமது சக்தியைப் பொறுத்தது என்றாலும் கூட, தேசிய - அனைத்துலக நிலைமைகள் துணைக் காரணங்களாய் அமையும். எனவே மண் மீட்பு என்பது பூரணமாக எமது பிரதேசத்தை விட்டு எதிரி விரட்டப்படும்போதே சாத்தியம். ஒரு சுதந்திர பூமியில் மட்டுமே மீண்டும் வலிகாம மக்கள் காலடி எடுத்து வைப்பர் என்ற உறுதி நிச்சயமானது.

ஆனால், இடம் பெயர்ந்து இங்கு குடியேறிய வலிகாம மண்ணின் மக்கள் இங்கு வாழும் காலம் ஒரு நாளாக இருந்தாலென்ன அல்லது ஓராயிரம் வருடங்களாக இருந்தாலென்ன எத்தகைய ஒரு வாழ்வை வாழப்போகின்றார்கள் என்பதே கேள்வி.

நாம் நீண்ட பாரம்பரியம் கொண்ட மக்கள். நிற்கும் மண்ணில் நீளவேரோடி நிலைக்கும் பக்குவம் கொண்ட உறுதிமிக்கவர்கள்.

எனவே நாம் எமக்கென்று ஒரு புதிய வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும். புதிய சமூக, பண்பாடு, பொருண்மிய உறவுகளை உருவாக்கி அபிவிருத்தி செய்ய வேண்டும்.

ஓங்கி வளர்ந்த அடர் வனங்கள் காலாதி காலமாக உதிர்த்து விட்ட கழிவுகளால் உரமேறிப்போன வளமான மண்ணும், வற்றாத நீர் வளமும் எமக்கென ஒரு வாழ்வை ஆரம்பிக்க இரு கை நீட்டி வரவேற்கின்றன. உலகப் புகழ் பெற்ற யாழ்ப்பாண மக்களின் உழைப்பை உண்டு செழிக்கக் காத்திருக்கிறது வன்னி மண்.

வெங்காயமும், மிளகாயும், வாழையும், புகையிலையும் இங்கு செழித்து வளரத் தயங்கியதில்லை. பரந்து கிடக்கும் நெல்வயல்கள் பெரும் விளைச்சல்களை தரக்காத்திருக்கின்றன. எனவே இங்கு ஒரு விவசாயப் பொருண்மியக் கட்டமைப்பு ஏற்கனவே உண்டு. இக்கட்டமைப்பில் இடம் பெயர்ந்து வாழும் மக்களும் ஒன்றிணைந்து அதை மேலும் செழிமைப்படுத்தவும், அகதி வாழ்விலிருந்து மீண்டு புதிய நிரந்தர வாழ்வமைப்பை உருவாக்கவும் வேண்டும்.

அனைத்து மக்களும் விவசாயிகளாக மாற வேண்டும் என்பது வெறும் பேச்சானதும், கற்பனையானதுமான கூற்றாகும்.

ஆனால், விவசாய பூமியில் விவசாயம் சார்ந்த பல தொழில்கள் எமக்காகக் காத்திருக்கின்றன. பொருண்மியத் தடை குறிப்பாக பசளை, எரிபொருள் தடை, புதிய கட்டுமானப் பணிகள் இவையனைத்தும் புதிய தொழில் முயற்சிகள் உருவாவதைக் கோரி நிற்கின்றன.

இங்குதான் எமது அறிவாளர்களின் பணி அத்தியாவசியமாகின்றது. புத்தகங்களில் கற்றதைத் திருப்பிச் சொல்லும் பழைய பாணியிலிருந்து விடுபடவும், தாம் கற்றவற்றை இன்றைய எமது மண்ணின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் பிரயோகிக்கவும், இன்றைய வளங்கள், தேவைகளை ஆழமான சிந்தனையுடனும், திறந்த மனதுடனும் புரிந்து கொள்ளவும், எமது பாரம்பரிய வழிமுறைகளை இன்றைய கால வளர்ச்சிக்கேற்ப நவீனமயப் படுத்தவுமான புதிய முயற்சிகளில் இறங்க வேண்டும். இவர்களுக்கு இங்கொரு பெரும்பணி காத்துக் கிடக்கிறது.

எம்மால் இழக்கப்பட்ட எமது வலிகாம மண் வெறுமனே எதிரியின் ஆக்கிரமிப்பில் இல்லை. எமது குழந்தைகளின் வேட்டுச் சத்தங்களும், வெடிகுண்டுச் சிதறல்களும் அங்கே எதிரியைத் திணறடித்துக்கொண்டிருக்கின்றன. விடுதலைப் புலிகளின் வீரமும், தியாகமும், எமது மக்களின் உயர்ந்த பங்களிப்பும் வலிகாம மண்ணை விரைவில் மீட்டெடுக்கும்.

மீட்டெடுக்கப்பட்ட எமது மண்ணில் நாம் மீண்டும் காலடி வைக்கும்போது எத்தகைய ஒரு பண்பாடு, பொருண்மிய வாழ்வு கொண்ட ஒரு மக்கள் கூட்டமாக அங்கிருந்து வெளியேறினோமோ, அதே போன்ற பண்பாட்டு, பொருண்மிய வாழ்வு கொண்ட ஒரு சமூகமாகவே செல்வோம். அகதி வாழ்வின் சீரழிவுகளோ, எதிரி வாழ்வின் நம்பிக்கையீனங்களோ எம்மில் தொற்றிக்கொள்ள அனுமதிக்கக்கூடாது.

நாம் எங்கு சென்றாலும், எப்படி வாழ்ந்தாலும் தமிழ்த் தேசிய இனமாகவே வாழ்வோம். எமது மகத்துவத்தை என்றும் காப்போம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கியூபா

## தொடரும் பனிப்போர்

புளோரிடாவின் தலைநகரான மயாமியில் இருந்து பெப்ரவரி 24ம் திகதி புறப்பட்ட மூன்று சிறிய செஸ்னா ரக விமானங்கள் கரீபியன் கடற்பரப்பில் பறந்து கொண்டிருக்கின்றன. இள நீல நிற வானில். சிறு முகிற்கூட்டங்கள் அங்கொன்றும், இங்கொன்றுமாக தவழ்ந்து கொண்டிருக்கின்றன.

கீழே கரு நீல கரீபியன் கடலில் சிற்றலைகள் வெண் நுரைகளை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. எதிலும் மாற்றமில்லை. இவை விமானிகள் காணும் வழமையான காட்சிகள்தாம்.

பறந்து கொண்டிருக்கும் விமானிகள் "காப்பாற்றும் சகோதரர்கள்" எனும் குழுவைச் சேர்ந்தவர்கள். 1991ல் உருவாக்கப்பட்ட இக் குழுவின் முக்கிய நோக்கம் கியூபாவிலிருந்து வள்ளங்களில் தப்பியோடி வருபவர்களைக் காப்பாற்றுவதாகும்.

எனவே கியூபாவின் வான்பரப்பை நோக்கி இவ் விமானிகள் பல தடவைகள் பறந்திருக்கின்றனர். வழமைபோலவே, வழமையான காட்சிகளைக் கண்டவாறு சென்று கொண்டிருந்த இவ்விமானிகளின் பாதையில் திடீரென்று வழமைக்கு விரோதமான மிக் ரகத்தைச் சேர்ந்த போர் விமானங்கள் தோன்றுகின்றன.

கியூபாவின் விமானப் படைப் பிரிவைச் சேர்ந்த இப்போர் விமானங்களினால் இரண்டு செஸ்னா விமானங்கள் வான்பரப்பில் சிதறடிக்கப்படுகின்றன. நான்கு விமானிகள் கொல்லப்பட இளநீல வானம் புகை மண்டலமாகிறது. விமானத்தின் பகுதிகள் கரு நீலக் கடலில் வீழ்ந்து மேலதிக வெண் நுரைகளை ஏற்படுத்துகின்றன.

ஒரு செஸ்னா விமானம் மட்டும் தப்பித்துக் கொள்கிறது.

சோவியத் சாம்ராச்சியம் வீழ்ச்சியுற்ற பின் அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்குமிடையேயான நீண்ட கால "கெடுபிடி யுத்தம்" அல்லது "பனிப்போர்" ஒரு முடிவுக்கு வந்தது. எனினும் அமெரிக்காவுக்கும் கியூபாவுக்கும் இடையிலான "பனிப்போர்" கடந்த மூன்றரை தசாப்தங்களாக தொடர்ந்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா உட்பட உலகின் பல நாடுகளுடன் நல்லுறவுகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் எனும் நோக்குடன் 69 வயதுடைய கியூபாவின் தலைவர் பிடல் காஸ்ட்றோ கடந்த வருடம் பல் முயற்சிகளில் ஈடுபட்டு வந்திருந்தார்.

எனினும் "காப்பாற்றும் சகோதரர்களின்" விமானங்கள் அண்மையில் கியூபாவின் விமானங்களால் சுட்டு வீழ்த்தப் பட்டமை அமெரிக்க-கியூபா உறவில் மேலும் விரிசலை ஏற்படுத்தியுள்ளது.

இச் சிறு விமானங்கள் கியூபா மீது தொடர்ந்து பறந்து திரிந்தமையை தனக்கு விடப்பட்ட சவாலாகவே காஸ்ட்றோ கருதினார். ஆட்சிப் பீடமேறி 37 வருடங்களின் பின் காஸ்ட்றோ பலமிழந்தவராகவும் மங்கிவரும் நட்சத்திரமாகவும் மாறி வருகிறார் எனும் கருத்து கியூபா மற்றும் உலக நாடுகளின் மக்களிடையே பரவி வருவது அவருக்கு அச்சுறுத்தல் தருவதாகவிருந்தது.

மேலும் சீர்திருத்தக் கொள்கைகளை அமுல்படுத்த முனைந்த முன்னாள் சோவியத் யூனியனின் தலைவர் மிக்காயில் கோர்ப்பச்சேவ் தனது எதிர்ப்பாளரைக் கட்டுப்படுத்த முடியாது நாளடைவில் பதவியிழந்தது காஸ்ட்றோவுக்கு நல்ல படிப்பினையைத் தந்திருந்தது.

கியூபாவிலும், பொருளாதாரத்தைப் பொறுத்தவரை நிலவும் புதியதாராளக் கொள்கையைப் பயன்படுத்தி அரசியல் அமைப்பு முறையையும் மாற்றியமைக்க ஒரு சாரார் விழைகின்றனர் எனும் அச்சம் காஸ்ட்றோவின் மனதில் நிலைத்திருந்தது. இதன் விளைவாக கடந்த பெப்ரவரி மாதத்தின் ஆரம்பத்தில் இருந்து காஸ்ட்றோவின் பாதுகாப்புப் படையினர் சுமார் 150 பேரைச் சுற்றி வளைத்து அல்லற்படுத்தினர்.

இச்சூழ்நிலையில் கியூபா மீதான "காப்பாற்றும் சகோதரர்களின்" விமானப் பயணங்கள் தனியே மனிதாபிமான நோக்கமு டைய-தாக மட்டுமின்றி அரசியல் சார்புடையதாகவும் அமைந்திருந்தமை காஸ்ட்றோவின் ஆத்திரத்தைத் தூண்டிவிடுவதாக அமைந்துவிட்டது.

விமானங்களைச் சுடுவதெனும் பாரதூரமான முடிவை நீர் எடுக்கக் காரணம் என்ன என பிரபல ஆங்கில "டைம்" சஞ்சிகையின் நிருபர் கேட்ட கேள்விக்குச் கஸ்ட்றோ பின்வருமாறு பதிலிறுத்துள்ளார்.

"காப்பாற்றும் சகோதரர்கள்" ஆரம்பத்தில் கடலில் தத்தளித்தவர்களுக்கு உதவினார்கள். ஆனால் பிற்பாடு மியாம-ியில் உள்ள கியூபா அமெரிக்க தேசிய நிறுவனத்தின் உதவியுடன் கியூபாவுக்கெதிராக மிகவும் பாரதூரமான பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுடத் தொடங்கினார்கள். அவர்கள் எமது விமானப்படைக்குத் தொந்தரவு கொடுத்ததுடன், எமது வான் பரப்பில் உத்தரவின்றி பறந்து தலைநகர் (ஹவானா) மீது துண்டுப்பிரசுரங்களை வீசி எறிந்ததுடன் தொடர்ச்சியாக பல ஆத்திரமூட்டும் செயல்களில் ஈடுபட்டனர். சனவரி மாதம் 9ம், 13ம் திகதிகளில் அவர்கள் மீண்டும் வந்து பல்லாயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்களை வீசியுள்ளனர். இவ் விமானங்களுக்கெதிராக எமது "மிக்" விமானங்கள் எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்ததனை ஹவானாவின் கடற்கரைத் திடலில் குழுமியிருந்த மக்கள் கண்ணால் கண்டுள்ளனர். ஆனால் கியூபா விமானப்படை துண்டுப்பிரசுரம் வீசியவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கத் தவற-ிவிட்டது என அப்போது மக்கள் கண்டனக் குரல் எழுப்பினர். இவ் ஒவ்வொரு சட்டமீறல்கள் பற்றியும் ராஜதந்திர ரீதியில் அமெரிக்காவுக்கு நாம் எமது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தோம். அமெரிக்க அதிகாரிகளுக்கு நாம் மீண்டும், மீண்டும் எச்சரிக்கை விடுத்திருந்தோம். நாம் இயலுமானவரை பொறுமையுடனிருந்தோம். எனினும் அதற்கும் எல்லை உண்டு."

இச்சிறு விமானங்களின் ஊடுருவல் தனது நாட்டின் இறைமையை மீறியதாகவே காஸ்ட்றோ கருதுகிறார். வானில் இருந்து ஹவானாவிற்கு வீசப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் "கியூபா மக்கள் காஸ்ட்ரோவை தூக்கி எறிய வேண்டும்" என்பதனை வலியுறுத்துவதாக இருந்தது.

> **கியூபாமீது அமெரிக்கா விதித்த பொருண்மியத் தடை கடந்த 35 ஆண்டுகளாக நடைமுறை யில் இருந்தாலும், பல அமெரிக்க சனாதிபதிகள் ஆட்சிக்கு வந்து போனாலும் அவர்களால் காஸ்ட்றோவின் ஆட்சியைக் கவிழ்க்க முடியவில்லை. மாறாக, அமெரிக்க அரசு மீது கியூபா மக்களின் ஆத்திரமும், வெறுப்பும் வளர்ந்ததேயொழிய காஸ்ட்றோவிற்குப் பாதிப்பு ஏற்படவில்லை.**

இத்தகைய நிகழ்வுகளைத் தொடர்ந்து அனுமதிப்பது "தனக்கு அவமானத்தை ஏற்படுத்துகிறது" எனக் குறிப்பிட்ட காஸ்ட்றோ "வொசிங்டனின் வான் பரப்பில் சிறு விமானங்கள் அத்துமீறிப் பறப்பதை அமெரிக்கா பொறுத்திருந்திருக்கமாட்டாது" என்றும் கூறியுள்ளார்.

அமெரிக்கா பதில் நடவடிக்கை ஒன்றும் எடுக்காததனால் "நாம் இத்தகைய நடவடிக்கைகளை இனியும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது என எமது ஆயுதப் படைகளுக்கு உத்தரவு கொடுத்தேன். நடந்து முடிந்த சம்பவத்திற்கு நான் பொறுப்பேற்கிறேன்" என காஸ்ட்றோ "டைம்" சஞ்சிகைக்கு மேலும் தெரிவித்துள்ளார்.

இச் சம்பவத்தை அடுத்து உடனடியாக தனது கண்டனத்தைத் தெரிவித்துக் கொண்ட அமெரிக்க சனாதிபதி பில் கிளின்டன் கியூபாவின் ஆட்சியாளர்களை "அடக்குமுறையாளர்கள் என்றும், சர்வதேச சட்டங்களை அவமதிப்பவர்கள்" என்றும் குற்றம் சாட்டினார்.

கியூபாவிற்கான போக்குவரத்துத் தடைபோன்ற மிதமான நடவடிக்கைகளை அமெரிக்க அரசு ஆரம்பத்தில் எடுத்தாலும் கியூபாவை முழுமையாகத் தண்டிக்க வேண்டுமானால் மிகவும் ஆழமான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படல் வேண்டும் எனும் நோக்குடன் பொருண்மியத்தடையை மேலும் இறுக்குவதாக முடிவெடுத்தது.

கியூபாமீது அமெரிக்கா விதித்த பொருண்மியத்தடை கடந்த 35 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்தாலும், பல அமெரிக்க சனாதிபதிகள் ஆட்சிக்கு வந்து போனாலும் அவர்களால் காஸ்ட்றோவின் ஆட்சியைக் கவிழ்க்க முடியவில்லை. மாறாக, அமெரிக்க அரசு மீது கியூபா மக்களின் ஆத்திரமும், வெறுப்பும் வளர்ந்ததேயொழிய காஸ்ட்றோவிற்குப் பாதிப்பு ஏற்படவில்லை.

மேலும் கியூபாவைச் சுற்றியுள்ள கரீபியன் நாடுகள் மட்டுமல்ல, கனடா போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகளும் கியூபாவுடன் வர்த்தகத் தொடர்புகளை வளர்த்து வந்தன. கனடா மட்டும் சுமார் 160 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்களை ஆண்டுதோறும் கியூபாவிற்கு ஏற்றுமதி செய்வது இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் கனடா, மெக்சிக்கோ போன்ற நாடுகளில் பொருண்மிய உதவியில்லாதுவிடின் காஸ்ட்றோவின் ஆட்சி ஆட்டம் காணும் சாத்தியக்கூறுகள் உள்ளன. ஏனெனில் சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பிற்பாடு காஸ்ட்றோவிற்கான நிதியுதவிகள் பெரிதும் குறைவடைந்திருந்தன.

எனவே இந்நிலையைக் கருத்திற் கொண்டே ஹெல்ம்ஸ்-பர்டன் எனும் சட்டத்தைக் கொண்டு வந்து கியூபாவின் தலையில் ஓங்கி அடிப்பதென அமெரிக்கா முடிவெடுத்தது.

இதன்படி, கியூபாவில் இடம்பெற்ற புரட்சியின்போது காஸ்ட்றோ அரசால் சுவீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்களை வாங்கிய வெளிநாட்டு ஸ்தாபனங்கள் மீது அமெரிக்காவிற்குப் புலம் பெயர்ந்த கியூபர்கள் வழக்குத் தொடரலாம் என்றும் கியூப அமெரிக்கர் ஒருவருக்கு முன்பொரு காலத்தில் சொந்தமாயிருந்த சொத்துக்களுடன் தொடர்புள்ள வெளிநாட்ட வர்கள் எவரும் அமெரிக்காவுக்கு வர விசா அனுமதி அளிக்கப்பட மாட்டாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்செயல் கனடா உட்படப் பல நாடுகளை குறிப்பாக கரீபியன் நாடுகளை ஆத்திரப்பட வைத்துள்ளது. "இவ்விவகாரம் கனடாவின் இறைமை பற்றிய கேள்விகளை எழுப்பியுள்ளது" என்றும், கியூபாவுடனான முரண்பாடுகளை கனடாவுக்குள் கொண்டு வருவதற்கு வாசிங்டனுக்கு உரிமையில்லை" என்றும் கனேடியப் பிரதமர் ஜீன் கிரச்சயன் தெரிவித்துள்ளார்.

கியூபாவின் பொருளாதாரத்தின் நாடி நரம்பை அறுத்தெறியும் நடவடிக்கையாக இது கருதப்பட்டாலும் அமெரிக்கா ஏனைய கம்யூனிச நாடுகளுடன் இத்தகைய கொள்கைகளைக் கடைப்பிடிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. உதாரணமாக சீனா, வியட்னாம் போன்ற நாடுகளைப் பொறுத்தவரை, அந்நாடுகளில் அரசியல் சீர்திருத்த விதை-களைத் தூவுவதற்கு பாரிய வர்த்தகத் தொடர்புகள் இருக்க வேண்டும் என அமெரிக்கா கூறி வருகிறது.

ஒரு மில்லியன் கியூபர்கள் தென் புளோறிடாவில் வாழ்வதும், எதிர்வரும் சனாதிபதித் தேர்தலும் அமெரிக்காவின் கியூபா மீதான வெளிநாட்டுக் கொள்கையை நிர்ணயிப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன. மேலும் பழைமைவாத குடியரசுக் கட்சியினர் வழமையாகவே கியூபாவின் கம்யூனிச அரசுக்கு எதிரானவர்களாக இருந்து வந்துள்ளனர். உதாரணமாக இப்புதிய மசோதாவினை இயற்றியவர்களில் ஒருவரான ஜெசி ஹெல்ம்ஸ் என்பவர் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

இதேவேளை 1992 தேர்தலில் புளோறிடாவில் கிளிண்டனின் சனநாயகக் கட்சி மயிரிழையில் தோல்வியைத் தழுவியிருந்ததால் இவ்விமானம் சுடப்பட்ட சம்பவத்தைப் பயன்படுத்தி அரசியல் லாபம் பெறும் முயற்சிகளும் நடைபெறுகின்றன.

இந்நிலையில் காஸ்ட்றோ ஆட்சியில் இருக்குமட்டும் அமெரிக்காவுடனான "பனிப்போர்" தொடரும் என்பது தெளிவாகிறது. ஆனால் பனிப்போரின் தற்போதைய நெருக்கடி எந்தளவுக்கு ஆழமாகும் என்பது வர்த்தக ரீதியில் பாதிக்கப்பட்ட கனடா போன்ற நாடுகளின் எதிர் நடவடிக்கையிலேயே தங்கியுள்ளது எனலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# கூண்டை உடைப்பாயா?

நாவாந்துறையில் தங்கிவிட்ட அன்புக்கினிய நண்பனே!
நலம். நலமறிய அவா!....
சாவோடு போராடிச் சரித்திர நாயகர்கள்
வீறோடு எதிரியுடன் மோதியவேளை, நாங்கள்
நாரோடு சேர்ந்த பூப்போல நம்பிக்கையோடு நடந்துவந்தோம்!
நீமட்டும் அங்கே ஏன் நின்றாய் நண்பா?
ஆரோடு உறவுகொள்ள அங்கு நின்றாய்? புரியவில்லை!
ஊரோடு நாம்கிளம்பிவர உனக்குமட்டுமென்ன அங்கேவேலை?
நாவாந்துறையில் தொழிலுக்குப்போகத்
தோணிகள் வரமுடியாது!
நண்டுகளைக் கூடைகூடையாய் அள்ளிவரவும் முடியாது!
கூவாத குயிலும் குழறியழும் கிளியினமும் கூட
கூடுகளைவிட்டு எம்மோடு வந்தபோது... நீ மட்டும்
தாவுகின்ற மந்திபோல் தனித்திருந்த மர்மமென்ன?
தமிழன் முத்திரை உன் முதுகில் ஒட்டப்படவில்லையா என்ன?
ஏவல் நாயாக அவர்களுடன் இருக்கலாமென்றா எண்ணினாய்?
அங்கிருந்து நீ கண்ட சுகமென்ன நண்பா?
இரும்புக் கூண்டுக்குள் இருக்கும் பச்சைக்கிளிக்கு
இறகுகள் இருந்தென்ன இல்லாவிட்டால் என்ன?
கரும்புத் தமிழைக் காதலிக்கும் ஒவ்வொருவருமே
கால்நடையாக வந்தபோது.... நீ மட்டும் ஏன்நின்றாய்?
குருநகரில் கடலுக்குப் போய்வரலாம் என்றெண்ணினாயா?
கொழும்புத்துறையில் கயிறடித்து விற்க எண்ணினாயா?
இருபாலைக் காணியில் புகையிலை வைத்து
பெரும்பணம் பண்ணலாம் என்றெண்ணினாயா?
கல்லுண்டாய் வெளியில் நின்று காற்றுவாங்கக் கருதினாயா?
கோண்டாவில் மாம்பழத்தைக் கோதிவர நினைத்தாயா?
நெல்வெட்டிச் சிறுப்பிட்டியில் சூடுவைக்க நினைத்தாயா?
நல்லூரின் வீதியிலே நடந்துவரத் தோன்றியதோ?
வல்லூறின் கூட்டுக்குள் இருந்து இத்தனையும் செய்ய
எண்ணியிருந்த நண்பா! எப்படிக் கலைந்ததுபாருன் கனவுகள்?
பொல்லா எதிரியன்னைப் பூட்டிவைத்தானே அகதிமுகாமில்...
பித்தனே! இனிய நண்பா!
இனியாதல் கூண்டை உடைப்பாயா? மாட்டாயா?

மு.வே.யோ. வாஞ்சிநாதன்,

## வெற்றிக்குரிய ஆண்டு இது

வெற்றிக்குரிய ஆண்டிதென்று சங்கெடுத்து ஊதடா
வீரமறவர் போரிலிங்கு தோல்வியென்ப தேதடா
பெற்றஅன்புத் தலைவனெங்கள் பிரபாகரனைப் பாடடா
பெருமையோடு நடந்துசெல்லும் பாதைதன்னில் ஓடடா
சுற்றிநிற்கும் பகைமுடிக்கச் சுழன்று குண்டை வீசடா
சொந்தம்பந்தம் சுதந்திரப்போர் முன்னுனக்குத் தூசடா
குற்றவாளிக் கூண்டில்நிற்கும் கோழைமண்ணின் மசடா
குலத்தைக்கெடுக்கும் கோடரிகள் கொள்கைகண்டு கூசடா
பற்றுப்பாசம் யாவும்ஈழ மண்ணிலென்று கூறடா
பயந்துபயந்து நின்றிடின் மண் மீட்டிடல்எவ் வாறடா
உற்றஅன்னை ஊட்டிநின்றார் உப்புப்போட்ட சோறடா
உயிரைமண்ணுக் கீவதுதான் உயரியகைம் மாறடா
சற்றுக்கூட ஓய்வுஇன்றிச் சமர்புரிந்து வெல்லடா
சகடைபொம்பர் ஹெலிகளெல்லாம் சுட்டுவீழ்த்தி நில்லடா
மற்றவர்கள் எம்மைப்பார்த்து மலைக்கக்குண்டை வையடா
மாறிமாறிக் கப்பலெல்லாம் மாண்டுபோகச் செய்யடா
புற்றின்ஈசல் போற்புறப்படும் புதுப்படையை நோக்கடா
புலியைக்கண்டு கிலியடைந்து போடும்துவக்கைத் தூக்கடா
பொற்கட்டிற் பொறித்துவைப்போம் 'புலி'யின்வீரர் பெயரடா
பொங்கியெழுந்து வெங்களம்செல் போகுமெங்கள் துயரடா

மனோன்மணி நடராசா,

மறைக்க முடியாதெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அரச படையினரின் நடவடிக்கைக்குப் பதில் இதுவே

-மத்திய குழு உறுப்பினர் லோறன்ஸ் திலகர்

இத்தாக்குதல் குறித்து, 'ரொயிட்டர்' செய்தி நிறுவனத்துக்கு செய்தி தெரிவித்த விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினர், திரு. லோறன்ஸ் திலகர் அவர்கள், "இத்தாக்குதல் இலக்குகள், வடக்கிலுள்ள அரசபடையினரின் விநியோகப் பாதை மீதும், வெளிநாடுகளில் இருந்து கொழும்புக்கு வரும் ஆயத வரவுகள் மீதும் இருக்கும்" எனக் குறிப்பிட்ட அவர், அரசு போர் மனோநிலையில் இருப்பதையும், சிறிலங்கா அரசபடையினரின் நடவடிக்கைக்குப் பதில் சொல்லும் வகையில் தாக்குதல்கள் அமைந்திருப்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

# "போரால் சமாதானத்தை ஏற்படுத்த சந்திரிகா எடுத்த முயற்சி பெரும் தோல்வி கண்டுள்ளது".

## போரின் மூலம் சமாதானம் என்ற முயற்சிக்கு கொடுக்கப்பட்ட அடி

-அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன்

"போரால் சமாதானத்தை ஏற்படுத்த சந்திரிகா எடுத்த முயற்சி பெரும் தோல்வியினைக் கண்டுள்ளது" இவ்வாறு அண்மையில் முல்லைத்தீவுக் கடற்பரப்பில் சிறிலங்காக் கடற்படையினருடன் நடைபெற்ற மாபெரும் கடற்சமரில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட 21 மாவீரர்களின் நினைவாஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையில், திரு. கரிகாலன் தெரிவித்துள்ளார். அண்மைக்காலமாக சந்திரிகா, தமிழ் மக்களை திட்டித் தீர்ப்பதையும், தமிழ்க் குழுக்களைச் சாடுவதையும் சுட்டிக்காட்டிய திரு. கரிகாலன், சந்திரிகா பெரும் விரக்தி அடைந்துள்ளார் எனவும், இத்தகைய திட்டுக்களும் சாடல்களும், அரசின் இராணுவ–அரசியல் திட்டங்கள் வெற்றியளிக்கவில்லை என்பதினால் ஏற்பட்ட மனக்கசப்பே காரணம் என்பது தெளிவாகின்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

# மனிதச் சங்கிலி..

1 ஆம் பக்கத் தொடர்ச்சி....

"எங்களுக்கு குண்டல்ல, அமைதியே தேவை!"

"அடிமைத்தனத்தை அறுத்தெறிய மனிதச் சங்கிலியில் இனைந்து நிற்கின்றோம்"

"புத்தரின் பெயரால் எங்களை அழிக்கும் எத்தரின் கொலையை உலகு உணராது"

"எமது மண்ணும் ரூவாண்டா, பொஸ்னியா போல் ஆகின்றது"

தமிழ் மக்களின் உண்மையான பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே!"

போன்ற கோசங்கள் மக்களால் உரக்க எழுப்பப்பட்டன.எழுச்சிப் பேரணியையும்பேரணிஅம்மகஜரில்,

"பெருந்தொகையில் தமிழினத்தை அழிக்கவே சிறிலங்கா அரசால் போர் தமிழ் மக்கள் மேல் தொடுக்கப்பட்டுள்ளது, அடுத்த கட்ட நடவடிக்கைக்கும் சிறிலங்கா அரசு தயாராகுகின்றது–இவைகள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்."

"தமிழ் மக்களின் குடியிருப்புக்களின் மேல் நடாத்தப்படும் கண்மூடித்தனமான விமான மற்றும் எறிகணைத் தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும்."

"தமிழ் மக்கள் தமது தாயக மண்ணில் எவ்வித பயமும் இன்றி வாழ்வதற்கு, இப்பகுதிகளை ஆக்கிரமித்து நிற்கும் ஆக்கிரமிப்பு சிறிலங்கா இராணுவம் கட்டாயம் அங்கிருந்து வெளியேற்றப்படல் வேண்டும்."

"விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் உண்மையான பிர–திநிதிகள் என்பதை உணர்ந்து நிச்சயமாக அவர்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும்."

"தமிழ் இனத்தின் மீது சிறிலங்கா அரசானது கட்டவிழ்த்து விட்டிருக்கும் போரை உடனடியாக நிறுத்தி பேச்சுவார்த்தை மூலம் நல்லதொரு நியாயமான தீர்வை ஏற்படுத்த வேண்டும்" இவற்றை ஐக்கிய நாடுகள் சபை செய்வதற்கு முன்வர வேண்டும் என்று மதிப்பு மிக்க பூட்ரஸ் பூட்ரஸ் காலியிடம் இம் மகஜர் மூலமாகத் தமிழ் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். சசெங்சிலுவைச் சங்க யாழ். வதிவிடப் பிரதிநிதியிடமும் இம்மகஜர் கையளிக்கப்பட்டது. சிறிலங்கா சனாதிபதிக்கான மகஜர், யாழ். அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது. மகஜரைப் பெற்றுக் கொண்டு உரையாற்றிய, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய திட்ட இணைப்பாளர், "இராணுவ நடவடிக்கைகளினால் அகதிகளாகி அல்லலுற்றிருக்கும் தமிழ் மக்கள் மேற்கொண்ட மனிதச் சங்கிலிப் பேரணி, தமிழ் மக்களின் எதிர்கால விடிவிற்கு நல்லதொரு மார்க்கமாகும். அத்துடன் தமிழ் மக்கள் மேற்கொண்ட இந்த நல்ல மார்க்கம் பற்றி, நாம் உங்கள் சார்பில் அனைத்து உலகத்திற்கும் தெரியப்படுத்துவோம்." எனவும் தெரிவித்துள்ளார். பொதுஅமைப்புக்களைச் சேர்ந்த பலரும் இங்கு உரையாற்றினர். யாழ். அரச அதிபரும், சனாதிபதிக்கான மகஜரைப் பெற்றுக்கொண்டு உரையாற்றினார். யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவரும் அக்கூட்டத்தில் உரையாற்றினார்.

# பல்வேறு இடங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்கள்

சிறிலங்கா இராணுவத்துடனான மோதலில் விழுப்புண் அடைந்திருந்த மேஜர் திவ்யன் (வேலுப்பிள்ளை தயாகரன், அக்கரைப்பற்று, அம்பாறை) இம்மாதம் 11ஆம் திகதி வீரச்சாவைத்தழுவிக் கொண்டுள்ளார்.

சுகயீனமுற்றிருந்த வீரவேங்கை தாரகன் (சதானந்தம் துரைசிங்கம், மட்டக்களப்பு) இம்மாதம் 10 ஆம் திகதி வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளார்.

கடந்த 8ஆம் திகதி திருகோணமலை 'யான் ஓயா' பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் மேஜர் கருணா (சண்முகலிங்கம் விஜேந்திரன், சூறாவத்தை, சுன்னாகம்) வீரச்சாவடைந்துள்ளார்.

கடந்த 6ஆம் திகதி யாழ். மாவட்டத்தில் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் லெப். மருது (நடராசா காண்டீபன், திருகோணமலை) வீரவேங்கை பரதன் (வேதன் குணபாலசிங்கம், கைதடி) வீரச்சாவடைந்துள்ளனர்.

இம்மாதம் 5–04–96 அன்று கட்டைக்காடு இராணுவ முகாமில் இருந்து வெளியேற முயன்ற இராணுவத்தினர் மீது கிளைமோர் தாக்குதல் நடாத்தப்பட்டது. இதன்போது 2 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். எட்டுப்பேர் படுகாயமடைந்தனர். இதில் கப்டன் புலேந்திரன், லெப். கோமகன், வீரவேங்கை சிவபெருமான் ஆகிய 3 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

இம்மாதம் 3 ஆம் திகதி சுகவீனம் காரணமாக வீரவேங்கை ஜெயா (மாணிக்கவாசகம் சந்திரகுமார், காங்கேசன்துறை) வீரச்சாவடைந்துள்ளார்.

இதேநாள் திருமலையில் தவறுதலாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் கப்டன் பவுனன் (நாகப்பிள்ளை அமுதசாகரன்) வீரச்சாவடைந்துள்ளார்.

2ஆம் திகதி வலிகாமத்தில் ஏற்பட்ட நேரடி மோதலில் கப்டன் கோபி (புஸ்பமாலா வேலாயுதம், திருகோணமலை) வீரச்சாவடைந்துள்ளார்.

கடந்த மாதம் 28 திகதி சுழிபுரத்தில் ஏற்பட்ட மோதலில் விழுப்புண் அடைந்த மேஜர் சுகுணன் (குகேந்திரன் கணேஸ், திருகோணமலை) மறுநாள் வீரச்சாவடைந்துள்ளார்.

கடந்த மாதம் 23 ஆம் திகதி யாழ். மாவட்டத்தில் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் மேஜர் கங்கையன் (செல்லத்துரை சிவகுமார், மாதா கோவிலடி–கிளிநொச்சி) வீரச்சாவடைந்துள்ளார்.

தாயக மண் மீட்புக்காய் எதிரியுடன் பொருதி அந்த மண்ணிலேயே வித்துக்களாய் விதைகுழியுள் விதைக்கப்பட்டிருக்கும் இம்மாவீரர்களுக்கு எமது வீரவணக்கங்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாரிஸ் திரையரங்கில்
## தமிழீழ திரைக்காவியம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிதிக்காக

தமிழீழக் கலைஞர்களின்...

# மண்ணுக்காக

(முழுநீள திரைக்காவியம்)

மண்ணில் உயிர்ப்புற்று முகையவிழும் தியாகத்தின்

காணத் தயாராகுங்கள்!

**காலம் : 21-04-1996**

**நேரம்:** ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 4.00 மணி / 7.00 மணி
(இரு காட்சிகள்)

**இடம் :** LE TRIANON
80, Bld. Rochechouart,
75018 Paris.
(Metro: Anvers)

மேலதிக விபரங்களுக்கு :
தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் - பிரான்ஸ் ( 43 58 11 42 )

---

விடுதலைப் புலிகளின் குரல் தொலைபேசிச் செய்திச் சேவை

பிரஞ்சுக் கிளை

PARIS - 46 36 49 49

LYON - 72 04 27 30

MONACO - 93 41 97 55

MULOUSE - 89 43 00 59

TOOLOUSE - 61 40 92 74

CERGY PONTOIOSE - 30 32 32 26

---

அரச பயங்கரவாதத்தினால் பெற்றோரை, பாதுகாவலரை இழந்து ஆதரவற்று இருக்கும் ஆயிரக்கணக்கான மழலைகளின் வளமான எதிர்கால வாழ்வை கருத்திற்கொண்டு செயல்படும்

# செஞ்சோலை

வளர்ச்சி நிதிக்காக

தமிழர் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்படும்

# சித்திரை மாலை

**நிகழ்ச்சிகள்**

- நாதஸ்வரக் கச்சேரி
- வில்லுப்பாட்டு
- இசை அமுதம்
- பரதநாட்டியங்கள்
- சிறுவர் நடனங்கள்

பிரவேசம் *fl 10*

**காலம்: 11 - 05 - 1996**
சனிக்கிழமை, மாலை 4 மணி

**இடம் :** AULA VAN HET INTERNAAT
OUDEN BOSCH
(தபாற்கந்தோருக்கு பின்)

தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் - நெதர்லாந்து
070 346 1963

---

தமிழ் மாணவர் அமைப்பு

# யேர்மனிக்கிளை

நடாத்தும்

# மாவீரர் வெற்றிக்கிண்ண

விளையாட்டுப் போட்டி 1996

- ❖ உதைபந்தாட்டம்
- ❖ நீச்சற் போட்டி
- ❖ கரப்பந்தாட்டம்
- ❖ மெய்வல்லுனர் போட்டிகள்

**விண்ணப்ப முடிவுத்திகதி:**
உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் - 30.04.96
நீச்சல், மெய்வல்லுனர் போட்டிகள் 31.05.96

மெய்வல்லுனர் போட்டி, நீச்சற்போட்டிகளிற் பங்குபற்ற விரும்புவோர் அண்மையிலுள்ள தமிழாலயங்களினூடாக மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு: **Tamilische Studenten Verein e.V.**
**Postfach: 11 18,**
**71278 Hemmingen**

தொலைபேசி: **0711/7655509**

www.tamilarangam.net

# போரிற் பொருது தாயகம் மீட்பவர்
# பாரிற் சிறந்த தெய்வம் நிகர்ப்பர்

பெறுதலும் போற்றலும் பெண்ணாள் பொறுப்பு

பெரியோன் ஆக்குதல் தந்தையின் பெருங்கடன்

போர்க்கலம் பெருக்கல் பொறிவலர் பொறுப்பெனப்

பொன்முடி புகன்றார் புறநானூற்றில்

அன்னவர் அறைந்த தழியா மொழியென

இந்நாள் உணர்ந்தனம் ஈழப்போர்வழி

மேலுஞ் சிலநாம் இப்போதுணர்ந்துளோம்

போரிற் பொருது தாயகம் மீட்பவர்

பாரிற் சிறந்த தெய்வம் நிகர்ப்பர்

பொருளே வழங்கல் புலம்பெயர்ந்தோர் கடன்

மருளாதிருத்தல் மற்றவர்தங் கடன்

சிங்களச் சிற்றினம் சாற்றிடு பொய்களை

மெய்யென எழுதிடும் ஆங்கில ஏடுதம்

பொய்மையைப் பொடுக்கல் எழுத்தரின் கடனெனப்

பொங்கிய துயரில் வெம்பியே வாழும்

புலம்பெயர் தமிழர் புரிந்திடல் வேண்டுமே!





கவிஞர் செ. சிறீக்கந்தராசா


T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palemo, Italy
T/F: 091- 611 3179

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss
T/F: 01- 273- 29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O, 211 Katherine Rd
London E6 1Bu,U.K
Tel: 0181 503 4294
Fax:0181 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1 , Norway
Tel: 022- 350 980 Fax: 22381040

W.T.C.C
170 - 10 Cadarcroft Road
Suite 1-L,Jamaica,
New York 11432 U.S.A.
T/ F: 718- 657- 9463

L.T.T.E
P.O.Box 47, 7400 Herning
Denmark
T/F: 97- 155299

T.C.C
Grt. Hertoginnein - 106
2517 EL Den Haag, Nederland
Tel:070 3461963 Fax: 070 362 5172

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F: 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia.
T: 03-470 6441 F: 560 8224